

# சத்திய மார்க்கம்

நூலாசிரியர் :
**அஷ்ஷேக்**
**அப்துர் ரஹ்மான் பின் ஹம்மாத் அல்உமர்**
1473 - 1354 ஹிஜ்ரி

مـــن إصدارات

مؤسسة عبدالرحمن بن حماد العمر الوقفية رحمه الله
ABDULRAHMAN H. AL OMAR CHARITABLE FOUNDATION

جمعية خدمة المحتوى
الإسلامي باللغات

تاميلي

دين الحق - تاميلي

# சத்திய மார்க்கம்

நூலாசிரியர் :

**அஷ்ஷேக் அப்துர் ரஹ்மான் பின் ஹம்மாத் அல்உமர்**

islamhouse.com

ح جمعية خدمة المحتوى الإسلامي باللغات ، ١٤٤٤ هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

العمر، عبدالرحمن بن حماد
دين الحق - تاميلي. / عبدالرحمن بن حماد العمر-جمعية خدمة المحتوى
الإسلامي باللغات .- الرياض ، ١٤٤٤ هـ

١٣٣ ص ؛ .. سم

ردمك:٧- ٠-٩٢٠٠٣-٠٣-٦٠٣-٩٧٨

١- االعقيدة الاسلامية أ. العنوان

ديوي ٢٤٠ ١٤٤٤/٨١٩٦

شركاء التنفيذ:

دار الإسلام جمعية الربوة رواد الترجمة المحتوى الإسلامي

يتاح طباعة هذا الإصدار ونشره بأي وسيلة مع
الالتزام بالإشارة إلى المصدر وعدم التغيير في النص.

Tel: +966 50 244 7000
info@islamiccontent.org
Riyadh 13245- 2836
www.islamhouse.com

## உள்ளடக்கம்


*1. முன்னுரை மற்றும் சமர்ப்பணம்* *05*

*2. முதலாவது பாடம் - படைப்பாளன், மகத்தானவனான அல்லாஹ்வை அறிதல்.* *07*

*3. இரண்டாவது பாடம் - நபி (ஸல்) அவர்கள் பற்றி அறிதல்* *25*

*4. மூன்றாவது பாடம் - சத்திய மார்க்கம் இஸ்லாத்தை அறிந்து கொள்ளல்* *33*

*5. நான்காவது பாடம் - இஸ்லாமிய வழிமுறை* *86*

*6. ஐந்தாவது பாடம் - சில சந்தேகங்களைத் தெளிவுபடுத்தல்* *121*

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய்கிறேன்.*

## முன்னுரை மற்றும் சமர்ப்பணம்

*புகழனைத்தும் அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் இரட்சகன் அல்லாஹ்வுக்கே, ஸலாதும் ஸலாமும் அல்லாஹ்வின் அனைத்து தூதர்கள் மீதும் உண்டாவதாக.*

*இது சத்திய பாதையை விட்டும் நெறிபிறழ்ந்த உலகிலுள்ள சிந்திக்கும் அனைத்து ஆண், பெண்களுக்கும் நேர்வழி கிடைக்க வேண்டுமெனவும், எனக்கும் இதனைப் பகிர்வதில் பங்கெடுக்கும் அனைவருக்கும் நிரப்பமான கூலி கிடைக்க வேண்டுமெனவும் உயர்ந்தவனாகிய வல்லமை மிக்க அல்லாஹ்விடம் எதிர்பார்த்தவனாக நான் முன்வைக்கும் வெற்றிக்கான ஓர் அழைப்பாகும். அந்த அல்லாஹ்வின் உதவியை நாடியவனாக நான் ஆரம்பிக்கின்றேன் :*

*மனிதா! உன்னைப் படைத்த உனது இரட்சகனை அறிந்து, அவனை நம்பி, அவனை மாத்திரம் வணங்குவதுடன், அவன் உனக்கும், முழு மனித சமூகத்திற்கும் அனுப்பிய நபியை அறிந்து, அவரை நம்பி, பின்பற்றி, உனக்கு அவன் ஏவிய சத்திய மார்க்கத்தை அறிந்து அதனை நம்பி, அதன்படி செயல்படாமல் இவ்வுலக வாழ்விலோ, மரணத்திற்குப் பின்னரான வாழ்விலோ வெற்றி, மகிழ்ச்சி கிடையாது என்பதை அறிந்து கொள்.*

*நீர் அறிந்து செயல்படுத்த வேண்டிய இப்பாரிய விடயங்களைப் பற்றிய தெளிவு உமது கையில் தவழும் "சத்திய மார்க்கம்" எனும் இந்நூலில் உள்ளது. சில வார்த்தைகள், சட்டங்கள் பற்றிய மேலதிகத் தெளிவை அடிக்குறிப்பில் கூறியுள்ளேன். இவையனைத்திலும் அல்குர்ஆனையும், ஸுன்னாவையுமே முழுமையாகச் சார்ந்துள்ளேன். ஏனெனில் அல்லாஹ் ஏற்றுக் கொள்ளும் ஒரே மார்க்கமாகிய இச்சத்திய மார்க்கத்தின் தனித்துவமான மூலாதாரம் அவ்விரண்டுமே.*

அதிகமான மக்களை வழிகேட்டில் வீழ்த்திய கண்மூடித்தன மான பின்பற்றுதலை நான் முழுமையாக விட்டுவிட்டேன். அதேநேரம் சத்தியத்தை விட்டும் தூரமாக இருக்கும் நிலையில், தாம் அதில்தான் இருப்பதாக வாதாடும் வழிகெட்ட சில பிரிவி னர்களைப் பற்றி, அவற்றைச் சார்ந்திருப்பவர்களைப் பார்த்து அறிவீனர்கள் எச்சரிக்கையாக இருப்பதற்காக அவர்களைப் பற் றிக் கூறியுள்ளேன். அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். அவனே சிறந்த பாதுகாவலன்.

**எழுதியவர் :**

அல்லாஹ்வின் மன்னிப்பை எதிர்பார்க்கும் உண்மையுள்ள,
**அப்துர் ரஹ்மான் பின் ஹம்மாத் ஆல் உமர்**
மார்க்க கற்கை நெறிகளில் பேராசிரியர்

முதலாவது
பாடம்

# படைப்பாளன், மகத்தானவனான அல்லாஹ்வை[1] அறிதல்.

*சிந்திக்கும் மனிதா! இல்லாமையிலிருந்து உன்னை உருவாக்கி, பல அருட்கொடைகள் மூலம் உன்னை பரிபாலித்தவன் அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ் ஒருவன்தான். சிந்திக்கக் கூடிய இறைநம்பிக்கையாளர்கள் அல்லாஹ் தஆலாவை தமது கண்களால் கண்டதில்லை. எனினும் அவனது இருப்பையும், அவன் தான் அனைத்து உயிரினங்களையும் படைத்து நிர்வகிப்பவன் என்பதையும் அறிவிக்கக்கூடிய பல சான்றுகளை அவர்கள் கண்டு, அதன் மூலம் அவனை அறிந்து கொண்டார்கள். அவ்வாறான சில அத்தாட்சிகள் வருமாறு :*

**முதல் அத்தாட்சி :**

இப்பிரபஞ்சம், மனிதன், வாழ்வு இவையனைத்தும் புதிதாக உருவானவையாகும். இவற்றுக்கு ஆரம்பம், முடிவு எல்லாம் உண்டு. அத்துடன் சுயமாக இயங்க முடியாமல் பிறரின் பால் தேவையுடையவை. புதிதாக உருவான, தேவையுடைய அனைத்தும் படைக்கப்பட்டவையே, படைக்கப்பட்ட அனைத்திற்கும் ஒரு படைப்பாளன் அவசியமாகும். இந்த மகத்தான படைப்பாளன் அல்லாஹ்வாகும். அவனே தன்னைப் பற்றி உயிருள்ள அனைத்தையும் படைத்து, நிர்வகிப்பவன் எனக் கூறியுள்ளான். இத்

*(1) தஆலா : இது அல்லாஹ்வை கண்ணியப்படுத்தி, மகத்துவப்படுத்தவும், அவனது உயர்வையும், குறைகளற்ற தூய்மையையும் வர்ணிக்கவும் பயன்படுத்தப்படும் வார்த்தையாகும்.*

தகவல் அவனிடமிருந்து தனது தூதர்களுக்கு அவன் அருளிய வேதங்களில் இடம்பெற்றுள்ளது.

அல்லாஹ்வின் தூதர்கள் அவனது பேச்சை மக்களுக்கு எத்தி வைத்து, அவனை நம்புமாறும், அவனை மாத்திரமே வணங்குமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுத்தனர். அல்லாஹ் தனது மகத்தான வேதத்தில் பின்வருமாறு கூறுகின்றான் : **“நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்து, அர்ஷின் மீது [தன் மகிமைக்குத் தக்கவாறு] உயர்ந்துவிட்டான். அவனே இரவால் பகலை மூடுகிறான் [பகலால் இரவை மூடுகிறான்.] அது வெகு தீவிரமாகவே அதைப் பின் தொடர்கிறது. [அவனே] சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் [படைத்தான். இவை அனைத்தும்] அவனது கட்டளைக்கு கட்டுப்பட்டவையாக படைத்தான். [படைத்தலும்] படைப்பினங்களும் [அவற்றின்] ஆட்சியும் அவனுக்கு உரியதல்லவா? அனைத்து உலகங்களையும் படைத்து, வளர்த்து, பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ் மிக்க பாக்கியமுடையவன்”.** *(அல்அஃராப் : 54).*

மேற்கண்ட வசனத்தின் சுருக்கம் :

அல்லாஹ் அனைத்து மனிதர்களுக்கும், அவர்களைப் படைத்தவனும், வானங்கள், பூமியை ஆறு நாட்களில்[2] படைத்தவனுமாகிய அவனே அவர்களது இரட்சகன் எனவும், அவன் தனது அர்ஷ் எனும் அரியாசணத்திற்கு மேல் உயர்ந்து விட்டதாகவும்[3] அறிவிக்கின்றான்.

---

(2) படைத்தலில் அல்லாஹ் இந்த படிமுறையை வைத்திருப்பது அவன் நாடிய ஒரு உள்நோக்குக்காக வேண்டியே, அவ்வாறில்லையெனின் கண் இமைக்கும் நேரத்திற்குள் அவனால் அனைத்துப் படைப்புக்களையும் படைத்திட முடியும். ஏனெனில் ஒன்றை அவன் நாடினால் நீ ஆகு எனக் கூறுவது மாத்திரம்தான் அது உடனே உருவாகி விடும் என அவனே கூறியுள்ளான்.

(3) அல்லாஹ் அர்ஷ்க்கு மேல் உயர்ந்து விட்டான் என்பதற்கு இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தை இஸ்தவா என்பதாகும். அல்குர்ஆனின் மொழியான அரபியில் இஸ்தவா என்பதன் அர்த்தம் உயர்தல் உயர்வடைதல் என்பதாகும். அல்லாஹ் அர்ஷ்க்கு மேல் உயர்ந்து விட்டான் என்பது அவனது மகத்துவத்-

வானங்களுக்கு மேலால் அர்ஷ் உள்ளது. இதுதான் படைப்பி னங்களில் மிக உயர்ந்ததும், விசாலமானதுமாகும். அல்லாஹ் இந்த அர்ஷ்க்கு மேலால் உள்ளான். அவன் தனது அறிவு, செவிப்புலன், பார்வை மூலம் அனைத்துப் படைப்பினங்களு டன் இருக்கிறான். அவர்களுடைய எந்தவொரு விடயமும் அவனை விட்டும் மறைய மாட்டாது. தனது இருளால் பகலை மூடக்கூடியதாக இரவை ஆக்கி, வேகமாக அதனைத் துயர வைப்பதாகவும், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் என்பவற்றை அவன்தான் படைத்ததாகவும் கூறுகின்றான். அவை அனைத்தை யும் தனது கட்டளையின் கீழ் அவற்றுக்குரிய ஓடுபாதையில் செல்லும் விதத்தில் வசப்படுத்தியுள்ளான். படைத்தல், கட்ட ளையிடுதல் அனைத்தும் அவனுக்கு மாத்திரம் உரியது, தனது ஆத்மா, பண்புகள் அனைத்திலும் முழுமை பெற்ற மகத்தான வன், நிரந்தரமான பல நலவுகளை வாரி வழங்குபவன், அவர் களைப் படைத்து, அருட்கொடைகளை வழங்கி பரிபாலிப்ப வன் அவன்தான் எனவும் கூறியுள்ளான்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : **“இரவும், பகலும், சூரியனும், சந்திரனும் அவனுடைய (வல்லமையை அறிவிப்பதற்குரிய) அத் தாட்சிகளில் உள்ளவை. ஆகவே, மெய்யாகவே நீங்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்குபவர்களாக இருந்தால் சூரியனுக்கும் (சிரம் பணியாதீர்கள்) சந்திரனுக்கும் சிரம் பணியாதீர்கள். இவற்றை**

---

துக்கு ஏற்றவாறாகும்.அதன் அமைப்பை அவனைத்தவிர வேறெவரும் அறியமாட் டார்கள். அல்லாஹ்வும், அவனது தூதரும் உறுதிப்படுத்திய அவனது பண்புகளை மறுக்கும் வழிதவறியோர் நினைப்பதைப் போல் இதன் அர்த்தம் ஆட்சியைக் கைப் பற்றுதல் என்பதல்ல. அல்லாஹ்வின் பண்புகளைத் தரிபடுத்தினால் அவனைப் படைப்பினங்களுக்கு ஒப்பாக்கி விட்டோம் என்பதே இவர்களது வாதமாகும். இது தவறான வாதமாகும். ஏனெனில் உவமைப் படுத்தல் என்பது படைப்பி னங்களில் ஒரு பண்பை அல்லாஹ்வின் பண்பைப் போன்று என்று கூறுவதாகும். உவமைப்படுத்தாமல், ஒப்பாக்காமல், விதம் கூறாமல், மறுக்காமல், மாற்றுக்கருத் துக் கூறாமல் அல்லாஹ்வின் தகுதிக்கும், மகத்துவத்திற்கும் ஏற்றவாறு தரிபடுத்து வதுதான் முன்சென்ற அறிஞர்கள் பின்பற்றிய நபிமார்களின் வழிமுறையாகும். அதிகமான மக்கள் இதனை விட்டுவிட்டாலும் உண்மையில் பின்பற்ற வேண்டிய சத்திய வழி இதுவே.

**படைத்தவன் எவனோ அவனுக்கே சிரம் பணியுங்கள்" [என்று நபியே! கூறுவீராக.] *(புஸ்ஸிலத் : 37).***

*மேற்கண்ட வசனத்தின் சுருக்கம் :*

*அல்லாஹ் தனது இருப்பைப் பறைசாற்றும் அத்தாட்சிகளில் உள்ளதாக இரவு, பகல், சூரியன், சந்திரன் என்பவற்றைக் கூறு கின்றான். சூரியன் மற்றும் சந்திரன் ஏனையவை போன்ற படைப் பினங்கள் என்பதால் அவ்விரண்டிற்கும் சிரம் பணிய வேண்டா மெனத் தடுக்கின்றான். படைக்கப்பட்டது ஒருபோதும் வணங் கப்பட முடியாது. சிரம் பணிவதும் வணக்கத்தின் ஒரு வகையா கும். ஏனைய இறைவசனங்களில் ஏவுவதைப் போன்று இவ்வச னத்திலும் மக்களுக்கு அவனுக்கு மாத்திரம் சிரம்பணியுமாறு அல்லாஹ் பணிக்கின்றான். ஏனெனில் அவன்தான் படைப்பா ளன், நிர்வகிப்பவன், உண்மையாக வணங்கப்படத் தகுதியான வனாகும்.*

**இரண்டாவது அத்தாட்சி :**

*அவன்தான் ஆண், பெண் என இரண்டு பாலினங்களைப் படைத் துள்ளான். எனவே ஒவ்வொன்றிலும் ஆண், பெண் என இரு வகையிருப்பது அல்லாஹ்வின் இருப்பிற்கு ஒரு சான்றாகும்.*

**மூன்றாவது அத்தாட்சி :**

*நிறங்கள், மொழிகளில் வேறுபாடு :ஒரே தோற்றத்திலோ, ஒரே நிறத்திலோ இருவர் கிடையாது. ஏதாவதொரு விதத்தில் அவர் களுக்கிடையில் வேறுபாடு இருப்பது இன்றியமையாததாகும்.*

**நான்காவது அத்தாட்சி :**

*சமூக நிலை வேறுபாடுகள் : ஒருவர் செல்வந்தராகவும் மற்றவர் ஏழையாகவும் உள்ளார், ஒருவர் தலைவராகவும் மற்றவர் கீழ் நிலையிலுள்ளவராகவும் உள்ளார். அதே நேரம் அனைவரும் புத்தி, சிந்தனை, அறிவுள்ளவர்களாகவும், தமக்குக் கிடைக்காத செல்வம், கௌரவம், அழகிய மனைவி போன்றவற்றை அடை யும் ஆவலிலும்தான் இருக்கின்றனர்.*

எனினும் அல்லாஹ் தனக்கு நிர்ணயித்ததைத் தவிர வேறெதனை யும் யாரும் அடைந்து கொள்ள முடியாது. இது தூய்மையான[4] அல்லாஹ் நாடிய பாரிய ஒரு தூரநோக்கிற்கான மதிநுட்பத்திற் காகவே நடைபெறுகின்றது. அது : மக்களில் சிலரின் மூலம் சிலரை சோதிப்பதற்காகவும், அனைவருடைய தேவைகளும் வீணாகிப் போகாமலிருக்க சிலர் சிலருக்குப் பணிவிடை செய்ய வுமே இவ்வாறு ஏற்றத் தாழ்வுடன் படைத்துள்ளான்.

உலகில் அல்லாஹ் செல்வத்தைக் கொடுக்காதவர்கள் இறை நம் பிக்கையுடன் மரணித்தால் அவர்களுக்காக சுவனத்தில் அதிக இன்பங்களை சேமித்து வைப்பதாக அல்லாஹ் கூறியுள்ளான். அத்துடன் உளரீதியாகவும், ஆரோக்கிய ரீதியாகவும் செல்வந் தர்களிடம் பெரும்பாலும் காணக்கிடைக்காத எத்தனையோ சிறப்புக்களை இவ்வுலகில் ஏழைகளுக்கு அனுபவிக்க வைக்கின் றான். இது அல்லாஹ்வின் ஞானம், நீதத்திலுள்ளதாகும்.

## ஐந்தாவது அத்தாட்சி :

உறக்கம், மற்றும் நல்ல கனவு, இதில் நற்செய்தியாகவோ, எச்ச ரிக்கையாகவோ உறங்குபவருக்கு மறைவான சில விடயங்களை அல்லாஹ் காண்பிக்கின்றான்.

## ஆறாவது அத்தாட்சி :

ஆத்மா (உயிர்): இதன் உண்மையான யதார்த்த நிலையை அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமே அறிய முடியாது.

## ஏழாவது அத்தாட்சி :

மனிதன், மற்றும் அவனது உடலில் உள்ள புலன்கள், நரம்பு மண்டலம், மூளை, செரிமான அமைப்பு போன்றன.

(4) தூய்மையானவன் : அதாவது அனைத்துவிதக் குறைபாடுகள், தகுதிக்குப் பொருந்தாதவற்றை விட்டும் அல்லாஹ் தூய்மையடைந்து விட்டான்.

**எட்டாவது அத்தாட்சி :**

*அல்லாஹ் வரண்ட பூமியில் மழையை அனுப்புகிறான், அப் பூமியில் வடிவங்களில், வண்ணங்களில், பழங்களில் மற்றும் சுவைகளில் வித்தியாசமான தாவரங்களும், மரங்களும் விளை கின்றன. இவை அல்லாஹ் அவனது இருப்பையும், அவன் தான் அனைத்து உயிரினங்களையும் படைத்து நிர்வகிப்பவன் என் பதையும் அறிவிக்கக் கூடியதாக அல்குர்ஆனில் கூறியுள்ள நூற் றுக்கணக்கான சான்றுகளில் வெறும் சிலது மாத்திரமே.*

**ஒன்பதாவது அத்தாட்சி :**

*அல்லாஹ் மனிதர்களைப் படைத்த இயல்பு நிலையும் அதனைப் படைத்து, நிர்வகிக்கும் அல்லாஹ்வின் இருப்பை நம்பிக்கை கொள்கின்றது. யார் அதை மறுக்கிறாரோ, அவர் தன்னை வழி தவறச் செய்து, துர்ப்பாக்கியசாலியாக ஆக்கிக் கொள்கின்றார். உதாரணமாக ஒரு கம்யூனிஸவாதி(5) (பொதுவுடமைவாதி) இவ் வுலகிலும் துயர்மிகு சோர்வுற்ற வாழ்க்கையே வாழ்கின்றான். தன்னை இல்லாமலிருந்து உருவாக்கி, அருட்கொடைகளை வழங்கி பராமரித்த இரட்சகனை மறுத்ததன் பிரதிபலனாக அவ னது ஒதுங்குதளம் நரகமாகவே ஆகிவிடுகின்றது. அல்லாஹ் விடம் பாவமீட்சி பெற்று, அவனையும், அவனது மார்க்கத்தை யும், தூதரையும் ஏற்பவரைத் தவிர.*

**பத்தாவது அத்தாட்சி :**

*அபிவிருத்தி, இது ஆடு போன்ற உயிரினங்களில் ஏற்படும் அதிக இனப்பெருக்கமாகும். இதற்கு மாற்றமானது நாய்கள், பூனைகள் போன்றவற்றின் (இனப்பெருக்கத்தில் ஏற்படும்) சரிவு நிலையா கும்.*

---

*(5) அதேபோன்றுதான் நாத்திகனும் (கடவுள் மறுப்பாளன்).*

**அல்லாஹ்வின் பண்புகளில் சில :**

*ஆரம்பமில்லாத ஆதியானவன், மரணிக்காத, முடிவுறாத நிலையான உயிருள்ளவன், சுயமாக இயங்கும், பிறரிடம் தேவையேற்படாத தன்னிறைவுள்ளவன், இணையற்ற தனித்தவன். அல்லாஹ் கூறுகின்றான் :* **“[நபியே! மனிதர்களை நோக்கி] கூறுவீராக: அல்லாஹ் ஒருவன்தான்”. “அல்லாஹ் எவ்விதத் தேவையுமற்றவன்”. “அவன் [எவரையும்] பெறவுமில்லை [எவருக்கும்] பிறக்கவுமில்லை”. “[தவிர] அவனுக்கு ஒப்பாகவும் [நிகராகவும்] ஒன்றுமில்லை”.** *(இஃலாஸ் : 1- 4).*

*மேற்கண்ட வசனங்களின் விளக்கம் :*

*நிராகரிப்பாளர்கள் நபியவர்களிடம் அல்லாஹ்வின் பண்பு பற்றி கேட்ட போது அல்லாஹ் இந்த அத்தியாயத்தை அருளி அவர்களிடம் கூறுமாறு பணிக்கின்றான் :*

*அல்லாஹ் தனித்தவன், அவனுக்கு இணையேதுமில்லை. அனைத்தையும் நிர்வகிக்கும் நிலையான உயிருள்ளவன். பிரபஞ்சம், மனிதர்கள், மற்றும் அனைத்து பொருட்களின் அதிகாரம் அவனுக்கு மாத்திரமே. மக்கள் தமது தேவைகளைக் கேட்க வேண்டிய ஒரேயொருவன் அவன் மாத்திரமே.*

*அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவருக்கும்) பிறக்கவுமில்லை, அவனுக்கு மகன், மகள், தாய், தந்தை யாரும் இருக்க முடியாது. இவ்வத்தியாயத்திலும் வேறு பல அத்தியாயங்களிலும் அல்லாஹ் அதனைக் கடுமையாக மறுத்துரைத்துள்ளான். ஏனெனில் பிறப்பு, சந்ததி எல்லாம் படைப்பினங்களின் பண்புகளாகும். கிறிஸ்தவர்கள் ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ்வின் மகன் என்று கூறியதையும், யூதர்கள் உஸய்ர் அவர்களை அல்லாஹ்வின் மகன் என்று கூறியதையும், ஏனைய சிலர் வானவர்கள் அல்லாஹ்வின் பெண்பிள்ளைகள் என்று கூறியதையும் அவன் மறுத்துரைத்துள்ளான். அவர்களது இத்தவறான கூற்றைக் கண்டித்துள்ளான்.*

மனிதர்களின் தந்தை ஆதம் (அலை) அவர்களை மண்ணினால் படைத்ததைப் போன்று, மனிதர்களின் தாய் ஹவ்வா (அலை) அவர்களை ஆதமின் விலாப்பகுதியிலிருந்து படைத்ததும், ஆதம் (அலை) அவர்கள் அன்னையரைத் தனக்குப் பக்கத்தில் கண்டதைப் போல், தனது வல்லமையால் ஈஸா (அலை) அவர் களை அல்லாஹ் தந்தையின்றிப் படைத்ததாகக் கூறுகின்றான். பின் ஆதமின் சந்ததியினரை ஆண், பெண் கலப்பு விந்திலிருந்து படைத்தான். ஆரம்பத்தில் அனைத்தையும் இல்லாமையிலி ருந்தே படைத்தான். அதன் பின் தனது படைப்பினங்களில் அவ னைத் தவிர யாராலும் மாற்ற முடியாத சில நியதி, ஒழுங்குகளை வைத்துள்ளான். இவ்வொழுங்கு முறையில் ஏதேனும் மாற்றம் செய்ய விரும்பினால் அல்லாஹ் தான் நாடியவாறு மாற்றுவான்.

அதே போன்று ஈஸா (அலை) அவர்களை தந்தையின்றி தாயின் மூலம் படைத்து, தொட்டிலிலேயே பேச வைத்தான், மூஸா (அலை) அவர்களின் தடியை ஓடும் பாம்பாக ஆக்கினான், அத் தடியினால் கடலுக்கு அடித்த போது அது பிளந்து பாதையாக மாறி மூஸா (அலை) அவர்களும் சமூகத்தாரும் அதனைக் கடந்து சென்றார்கள், இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர் களுக்காக சந்திரன் பிளந்தது, மரங்களைத் தாண்டிச் செல்லும் போது அவை நபியவர்களுக்கு ஸலாம் கூறின, நீங்கள் அல்லாஹ் வின் தூதரென நான் சாட்சி கூறுகின்றேன் என்று மக்கள் கேட் கும் குரலில் மிருகங்கள் நபியவர்களின் தூதுத்துவத்திற்கு சான்று பகர்ந்தன,

புராக் எனும் வாகனத்தின் ஊடாக மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து பலஸ்தீனிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா வரை இராப் பயணம் மேற்கொள்ள வைத்து, அங்கிருந்து ஜிப்ரீல் (அலை) அவர்களின் துணையுடன் ஏழு வானங்களையும் தாண்ட வைத்தான். அங்கு அல்லாஹ் நபியவர்களுடன் திரைக் குப் பின்னால் உரையாடி, தொழுகையைக் கடமையாக்கினான். போகும் வழியில் ஒவ்வொரு வானத்திலும் வானவர்களையும்

*மேலும் சில நபிமார்களையும் சந்தித்தார்கள். இவையனைத்தும் விடிவதற்கு முன்னால் ஒரே இரவில் நடந்து முடிந்த அதிசயமா கும். இஸ்ரா, மிஃராஜ் எனும் பிரபலமான இவ்விரு யாத்திரை பற்றி அல்குர்ஆன், ஸுன்னா மற்றும் வரலாற்று நூல்களில் இடம்பெற்றுள்ளது.*

**அல்லாஹ் தனக்கிருப்பதாக (அல்குர்ஆன், ஸுன்னாவில் அவனு டைய தூதர்கள்) தன்னைப் பற்றி விவரித்ததின் மூலம் உறுதிப் படுத்திய அவனது பண்புகள் சில :**

***1.*** *கேள்வி, பார்வை, அறிவு, ஆற்றல், நாட்டம். அனைத்தையும் அவன் செவிமடுக்கின்றான், பார்க்கின்றான், அவனது கேள்வி, பார்வையை எத்திரையும் தடுக்காது.*

*கருவறையில் இருப்பது, உள்ளங்கள் மறைப்பவை, ஏற்கனவே உருவாகியிருப்பது, உருவாகவிருப்பது அனைத்தையும் அறிகின் றான். ஏதாவதொன்றை உருவாக்க நாடினால் "நீ ஆகி விடு" எனக் கூறுவதுடன் அது உருவாகக் கூடியளவு ஆற்றலுள்ளவன்.*

***2.*** *தான் நாடும் போது நாடியதைப் பேசுபவன். மூஸா (அலை) மற்றும் முஹம்மத் (ஸல்) ஆகியோருடன் அல்லாஹ் உரையாடி யுள்ளான். இறுதித் தூதர் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அரு ளிய அல்குர்ஆனின் வார்த்தைகள், கருத்துக்கள் அனைத்தும் அவனது பேச்சாகும். எனவே அல்குர்ஆன் அவனது பண்புக ளில் ஒன்றே தவிர வழிதவறிய முஃதஸிலாக்கள்[6] கூறுவதைப் போன்று அது படைக்கப்பட்ட ஒன்றல்ல.*

***(6)*** *முஃதஸிலாக்கள் என்போர் அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களை அவனது மற்றும் அவனது தூதரது நோக்கத்திற்கு மாற்றமாக திரிபுபடுத்திய ஒரு வழிதவறிய பிரிவாகும்.*

*3.* *முகம், இரு கைகள், அர்ஷுக்கு மேல் உயர்தல், கீழ்வானிற்கு இறங்குதல்,*[7] *திருப்பொருத்தம், கோபம். அவன் தனது நல்லடியார்களைப் பொருந்திக் கொள்கின்றான், நிராகரிப்பாளர்களுடனும், தன்னைக் கோபமூட்டும் செயல்களில் ஈடுபடுவோருடனும் கோபிக்கின்றான், அவனுடைய திருப்பொருத்தம் மற்றும் கோபம் ஏனைய அவனது பண்புகளைப் போன்றதுதான், படைப்பினங்களின் பண்புக்கு ஒப்பாகமாட்டாது, மாற்றுக் கருத்துக் கொடுக்கவோ, விதம் கற்பிக்கவோ கூடாது.*

*அல்குர்ஆன், ஸுன்னாவில் நல்லடியார்கள் மறுமையிலும், சுவனத்திலும் அல்லாஹ்வை நேரடியாக தமது வெற்றுக் கண்ணால் காண்பார்கள் என இடம்பெற்றுள்ளது. அல்லாஹ்வின் பண்புகள் அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தேவையேற்படும் போது கற்றுக் கொள்ளவும்.*

## மனிதர்களையும், ஜின்களையும் அல்லாஹ் படைத்த நோக்கம்

*உன்னைப் படைத்தவன் அல்லாஹ்தான் என்பதை நீ அறிந்தால் அவன் உன்னை வீணாகப் படைக்கவில்லை, மாறாக தன்னை வணங்குவதற்காகவே உன்னைப் படைத்துள்ளான் என்பதையும் அறிந்துகொள். அதற்கான ஆதாரம் பின்வரும் அல்குர்ஆன் வசனமாகும் :* **“ஜின்களையும், மனிதர்களையும் [அவர்கள்] என்னை வணங்குவதற்கே தவிர [வேறெதற்காகவும்] நான் படைக்கவில்லை. அவர்களிடத்தில் நான் ஒரு பொருளையும் கேட்கவில்லை. அவர்கள் எனக்கு உணவு கொடுத்துக் கொண்டிருக்குமாறும் நான் கோரவில்லை. [ஆகவே,]. [நபியே! நீர் கூறுவீராக:] நிச்சயமாக அல்லாஹ்தான் அனைவருக்கும் உணவளிப்பவனும், அசைக்க முடியாத பலசாலியுமாவான்”.** *(அத்தாரியாத் : 56- 58).*

---

*(7) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “உயர்வும், வளமும் மிக்கவனான நம் இறைவன் ஒவ்வோர் இரவிலும் இரவின் இறுதி மூன்றிலொரு பங்கு இருக்கும் போது கீழ்வானிற்கு இறங்கி வந்து, ‘என்னிடம் யாரேனும் பிரார்த்தித்தால் அவரின் பிரார்த்தனையை நான் ஏற்கிறேன். என்னிடம் யாரேனும் கேட்டால் அவருக்கு கொடுக்கிறேன். என்னிடம் யாரேனும் பாவமன்னிப்புக் கோரினால் அவரை நான் மன்னிக்கிறேன்” என்று கூறுகிறான்”. (ஆதாரம் : புஹாரி 7494, முஸ்லிம் 758, திர்மிதி 3498)*

மேற்கண்ட வசனங்களின் சுருக்கம் :

முதல் வசனத்தில் மனிதர்களையும், ஜின்களையும்[8] தன்னை வணங்குவதற்காக மாத்திரமே படைத்துள்ளதாகக் கூறுகின் றான். இரண்டாம், மூன்றாம் வசனங்களில் தன்னுடைய அடி யார்களை விட்டும் தேவையற்றவன், அவர்களிடமிருந்து வாழ் வாதாரமோ, உணவோ கோரவில்லை, ஏனெனில் அவன்தான் அனைவருக்கும் உணவளிப்பவனும், அசைக்க முடியாத பலசா லியுமாவான் எனக் கூறுகின்றான். மனிதர்கள், பிற உயிரினங்கள் அனைத்திற்கும் அவனிடமிருந்தே வாழ்வாதாரம் வருகின்றன, அவனே மழையைப் பொழிய வைத்து, பூமியிலிருந்து வாழ்வா தாரத்தை வெளிப்படுத்துகின்றான்.

பூமியிலுள்ள ஏனைய படைப்பினங்களை மார்க்க சட்டத்திற் கமைவாக மனிதனின் பயன்பாட்டிற்காகவும், அல்லாஹ்வுக்கு வழிப்படுவதில் துணைபுரியவுமே படைத்துள்ளதாகக் கூறுகின் றான். ஒவ்வொரு படைப்பும், பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு அசைவும், அமைதிகளும் அல்குர்ஆனில் தெளிவுபடுத்தியுள்ள உள்ளார்ந்த காரணத்திற்காகவே உருவாக்கியுள்ளான். ஒவ்வோர் அறிஞரும் தமது அறிவுத்தரத்திற்கேற்ப மார்க்க சட்டதிட்டங் கள் மூலம் அதனை அறிந்து கொள்வார்கள். வயது, வாழ்வா தாரம், நிகழ்வுகள் மற்றும் சோதனைகளில் உள்ள வேறுபாடு கூட சிந்திக்கும் தனது அடியார்களை சோதிக்க அல்லாஹ்வின் அனுமதியின் பிரகாரமே நடக்கின்றன.

அல்லாஹ்வின் ஏற்பாட்டைப் பொருந்தி, சரணடைந்து, அவ னைத் திருப்திப்படுத்தும் விடயங்களில் முயற்சித்தவருக்கு அல் லாஹ்வின் பொருத்தமும், இவ்வுலகிலும் மரணத்தின் பின் மறு மையிலும் வெற்றியும் கிடைக்கும். அல்லாஹ்வின் ஏற்பாட்

(8) ஜின்கள் என்போர் சிந்திக்கும் திறனுள்ள ஒரு படைப்பினமாகும், மனிதர்களைப் போன்றே அவர்களையும் அல்லாஹ் தன்னை வணங்குவதற்காகவே படைத் துள்ளான். பூமியில் அவர்களும் மனிதர்களுடன் கலந்தே வாழ்கின்றனர், ஆனால் அவர்கள் ஜின்களைக் காண்பதில்லை.

டைப் பொருந்திக் கொள்ளாமல், அவனுக்கு தன்னை அர்ப்ப ணித்து, வழிப்படாமலிருந்தால் அவனுக்கு அல்லாஹ்வின் கோபமும், ஈருலக துரதிஷ்டமுமே கிடைக்கும்.

அல்லாஹ்விடம் அவனது பொருத்தத்தை வேண்டி, அவனது கோபத்தை விட்டும் பாதுகாப்புத் தேடுகின்றோம்.

## மரணத்தின் பின் மீளெழுப்பப்படல், விசாரணை, கூலி வழங்கல், சுவனம் மற்றும் நரகம்.

அல்லாஹ் தன்னை வணங்குவதற்காகத் தான் உன்னைப் படைத் துள்ளான் என்பதை நீ அறிந்து கொண்டால் மரணத்தின் பின் நிச்சயம் அவன் உன்னை மீண்டும் உயிருடன் எழுப்புவான் எனத் தனது தூதர்களுக்கு அருளிய அனைத்து வேதங்களிலும் கூறியுள் ளான் என்பதையும் அறிந்து கொள். மரணத்திற்குப் பின்னரான மறுமையில், நீ உலகில் செய்த விடயங்களுக்காக கூலி வழங்கு வான். ஏனெனில் மனிதன் மரணத்தின் மூலம் அழியக் கூடிய செயல்தளமான இவ்வுலகிலிருந்து கூலி வழங்கப்படும் நிரந்தர வீட்டுக்கு இடம்பெயர்கின்றான். இது மரணத்துக்குப் பின்னரே இடம்பெறும்.

ஒரு மனிதன் வாழ வேண்டுமென அல்லாஹ் நிர்ணயித்த காலக் கெடு முடிந்து விட்டால் அவனது உடலிலிருந்து உயிரைக் கைப்பற்றும் படி அதற்குப் பொறுப்பான வானவரை ஏவுவான். அதன்படி அவனின் உயிர் கைப்பற்றப்படும். எனினும உயிர் உடலிலிருந்து பிரிய முன் மரண வேதனையை அனுபவித்து விட்டுத்தான் அவன் இறப்பான்.

உயிரைப் (ஆத்மா) பொறுத்த வரையில் அது அல்லாஹ்வை ஏற்று, வழிப்பட்டிருந்தால் இன்ப உலகமான சுவனத்தில் அல் லாஹ் அதனை வைத்து விடுகின்றான். ஆனால் அல்லாஹ்வை யும், மறுமை நிகழ்வுகளையும் பொய்ப்பித்திருந்தால் தண்டனை உலகமான நரகில் வைத்து விடுவான். உலக முடிவு நிகழ்ந்து, மறுமை ஏற்பட்டு, அல்லாஹ் மாத்திரம் மீதமிருக்க ஏனைய

*அனைத்து படைப்பினங்களும் அழியும் வரை இவ்வாறு தான் அதன் நிலமை இருக்கும். பின்பு பிராணிகள் உட்பட அனைத்து உயிரனங்களையும் அல்லாஹ் மீளெழுப்புவான். உடல்களை முதலில் படைத்தது போன்றே முழுமையான தோற்றத்திற்கு மீட்டிய பின்னர் அவற்றுக்குரிய ஆத்மாக்களை மீள அனுப்பி விடுவான். ஆண், பெண், தலைவன், கீழ்நிலையில் உள்ளவன், செல்வந்தன், ஏழை என அனைவரையும் விசாரணை செய்து அவர்களது செயல்களுக்குரிய பிரதிபலன்களை வழங்குவதற்கா கவே இவ்வாறு செய்கின்றான்.*

*யாருக்கும் அவன் அநீதியிழைக்க மாட்டான், அநியாயக்காரனி டமிருந்து அநீதியிழைக்கப்பட்டவனுக்கு நியாயம் வழங்கப் படும், பிராணிகளுக்குக் கூட அவற்றுக்கு மத்தியில் அநீதிக்கா கப் பழி தீர்க்கப்படும், பின்னர் மண்ணாகி விடுமாறு பணிக்கப் படும், ஏனெனில் அவை சுவனத்திற்கோ, நரகிற்கோ செல்வ தில்லை.*

*மனிதர்கள், ஜின்கள் அனைவருக்கும் தத்தமது செயல்களுக்கு ஏற்ப கூலி வழங்குவான். தனக்கு வழிப்பட்டு, தனது தூதகர்ளைப் பின்பற்றிய நல்லடியார்களை அவர்கள் பரம ஏழைகளாக இருந் தாலும் சுவனத்தில் நுழைவிப்பான், பொய்யர்களான நிராகரிப் பாளர்களை அவர்கள் உலகில் மிகப் பெரிய செல்வந்தர்களாக, கௌரவமிக்கவர்களாக இருந்தாலும் நரகிலேயே நுழைவிப் பான். அல்லாஹ் கூறுகின்றான் :* **“உங்களில் எவர் மிகவும் பயபக் தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன் கறிபவன், [யாவற்றையும் ஆழ்ந்து] தெரிந்தவன்”.**

*(அல்ஹுஜுராத் : 13).*

*சுவனம் : இது ஒரு இன்ப வீடாகும். யாரும் வர்ணித்துக் காட்ட முடியாதளவு பல்வகை இன்பங்கள் இதில் உள்ளன. சுவனத்தில் நூறு படித்தரங்கள் உள்ளன. அல்லாஹ்வை நம்பி, அவனுக்குக் கட்டுப்படும் தராதரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு*

தரத்திலும் மக்கள் குடியிருப்பர். இவ்வுலகிலுள்ள அதிக இன்பங்களை அனுபவிக்கும் ஒர் மன்னனுடைய இன்பங்களின் பன்மடங்காக சுவனத்தின் குறைந்த பட்ச இன்பம் இருக்கும்.(9)

நரகம் : - அதை விட்டும் அல்லாஹ் எம்மைக் காப்பானாக!- அது மரணத்திற்குப் பின்னரான வேதனைக்குரிய இடமாகும். உள்ளங்கள் நினைத்துப் பார்க்கவே அஞ்சுகின்ற, கண்கள் கண்ணீர் வடிக்கின்றளவு பல்வகையான தண்டனைகளும், வேதனைகளும் அங்கு உண்டு.

மறுமையிலும் மரணம் இருந்தால் நரகவாதிகள் நரகைக் கண்ட உடனேயே மரணித்து விடுவார்கள். என்றாலும் இவ்வுலகிலி

---

(9) முஃகீரா பின் ஷுஃபா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக (பின்வருமாறு) கூறினார்கள்: மூஸா (அலை) அவர்கள் இறைவனிடம், "சொர்க்கவாசிகளில் மிகக் குறைந்த தரம் உடையவர் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு இறைவன் கூறினான்: சொர்க்கவாசிகள் சொர்க்கத்திற்குள் நுழைந்த பிறகு ஒரு மனிதர் வருவார். அவரிடம் "நீ (சென்று) சொர்க்கத்திற்குள் நுழைந்துகொள்!" என்று கூறப்படும். அதற்கு அவர், "இறைவா! எப்படி (நான் நுழைவேன்)? மக்கள் அனைவரும் அவரவர் இருப்பிடங்களைப் பிடித்துக்கொண்டு தமக்குக் கிடைத்ததை எடுத்துக் கொண்டுவிட்டார்களே?" என்று கூறுவார். அவரிடம், "உலக அரசர்களில் ஒருவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியைப் போன்று உனக்குக் கிடைத்தால் திருப்தி தானே?" என்று கேட்கப்படும். அதற்கு அவர் "திருப்தியடைவேன், இறைவா!" என்பார். அப்போது இறைவன், "இதுவும் உனக்குக் கிடைக்கும் இதைப் போன்று இன்னொரு மடங்கும், இதைப் போன்று இன்னொரு மடங்கும், இதைப் போன்று இன்னொரு மடங்கும், இதைப் போன்று இன்னொரு மடங்கும் உனக்குக் கிடைக்கும்" என்று (நான்கு மடங்கைக்) குறிப்பிடுவான்.

ஐந்தாம் மடங்கு பற்றிக் கூறும் போது, அவர், "திருப்தியடைந்துவிட்டேன், இறைவா!" என்பார். உடனே இறைவன், "இதுவும் உனக்குக் கிடைக்கும் இதைப் போன்று பத்து மடங்கும் உனக்குக் கிடைக்கும். உன் மனம் விரும்புகின்ற, உன் பார்வை ரசிக்கின்ற அனைத்தும் உனக்குக் கிடைக்கும்" என்பான். அப்போது அவர், "திருப்தியடைந்தேன், இறைவா!" என்று கூறுவார். பின்னர் மூஸா (அலை) அவர்கள், "இறைவா! சொர்க்கத்தில் மிக உயர்ந்த தரமுடையவர் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு இறைவன், "அவர்களை நானே தேர்ந்தெடுத்தேன். அவர்களுக்குரிய தரங்களையும் நானே நேரடியாகத் தீர்மானித்தேன். அவற்றின் மீது நான் முத்திரையும் வைத்துவிட்டேன். எனவே, (அவர்களின் தரத்தை) எந்தக் கண்ணும் பார்த்திராது எந்தக் காதும் கேட்டிராது. எந்த மனிதனின் உள்ளத்திலும் தோன்றியிராது" என்றான். (முஸ்லிம் 189).

*ருந்து மறுமைக்கு நகர்வதற்காக மரணம் ஒரு தடவைதான் நிக ழும். மரணம், மீளெழுப்பப்படல், விசாரணை, கூலி வழங்கல், சுவனம், நரகம் போன்றன பற்றி அல்குர்ஆனில் முழுமையாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு நாம் கூறியவை வெறும் சுட்டிக் காட்டுதல் மாத்திரம் தான்.*

*மரணத்தின் பின் மீளெழுப்பப்படல், விசாரணை, கூலி வழங்கல் போன்றவற்றுக்கான ஆதாரங்கள் அதிகமதிகமுள்ளன. அல் லாஹ் கூறுகின்றான் :* **"பூமியிலிருந்தே நாம் உங்களைப் படைத் தோம். பின்னர், அதிலேயே உங்களை மீண்டும் சேர்த்து விடுவோம். மற்றொரு தடவையும் [உங்களுக்கு உயிர் கொடுத்து] அதிலிருந்தே உங்களை வெளிப்படுத்துவோம்".** *(தாஹா : 55). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :* **"மேலும், அவன் தன் படைப்பை [தான் படைக்கப் பட்டதெப்படி என்பதை] மறந்துவிட்டு, அவன் நமக்காக ஓர் உதாரணத் தையும் கூறுகின்றான் "எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?" என்று. "முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே [பின்னும்] அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்" என்று [நபியே!] நீர் கூறுவீராக!".** *(யாஸீன் : 78, 79).*

*மேலும் அல்லாஹ் கூறுகிறான்:* **"[மரணித்த பின்னர் உயிர் கொடுத்து] எழுப்பப்பட மாட்டோம் என்று நிச்சயமாக நிராகரிப்பவர் கள் எண்ணிக்கொண்டு இருக்கின்றனர். "அவ்வாறல்ல. என் இறைவன் மீது சத்தியமாக! மெய்யாகவே நீங்கள் எழுப்பப்படுவீர் கள். நீங்கள் செய்து கொண்டிருப்பவற்றைப் பற்றி பின்னர் நீங்கள் அறிவுறுத்தவும் படுவீர்கள். இவ்வாறு செய்வது அல்லாஹ்வுக்கு மிக்க எளிதானதே" என்று [நபியே!] நீர் கூறுவீராக".**

*(அத்தஃகாபுன் : 7).*

*மேற்கண்ட வசனங்களின் சுருக்கம் :*

*1. முதல் வசனத்தில் : மனிதர்களது தந்தை ஆதம் அலை அவர் களை மண்ணினால் படைத்ததன் மூலம் அவர்களையும் மண் ணினால்தான் படைத்ததாக அல்லாஹ் கூறுகின்றான். மரணித்*

ததன் பின் அவர்களை கௌரவப்படுத்தும் விதத்தில் அதே மண்ணிற்குத்தான் மீட்டுவதாகவும், அதிலிருந்தே மீண்டும் அவர்களை வெளியாக்குவதாகவும் கூறுகின்றான். அவர்களில் முன்னோர்கள் முதல் பின்னோர்கள் வரை அனைவரும் தமது மண்ணறைகளிலிருந்து உயிர் பெற்றவர்களாக வெளியே வரு வார்கள். அல்லாஹ் அவர்களை விசாரணை செய்து கூலி வழங் குவான்.

*2. இரண்டாம் வசனத்தில் : எலும்புகள் இத்துப் போனதன் பின் னர் அவற்றை மீளெழுப்புவதை ஆச்சரியமாகப் பார்த்த மறுமை யைப் பொய்ப்பிக்கும் நிராகரிப்பாளனுக்கு அல்லாஹ் பதிலளிக் கின்றான். அவற்றை அவன் மீள உயிர்ப்பிப்பான், ஏனெனில் அவற்றை அவன்தான் முதலில் இல்லாமையிலிருந்து உண்டாக் கினான் எனக் கூறுகின்றான்.*

*3. மூன்றாம் வசனத்தில் மரணத்திற்குப் பின் மீளெழுப்பப்படு வதைப் பொய்ப்பிக்கும் நிராகரிப்பாளர்களுடைய தவறான வாதத்துக்கு பதிலளிக்கின்றான். அல்லாஹ் நிச்சயமாக அவர் களை எழுப்பி, அவர்கள் செய்த காரியங்களையும் அறிவித்து, அதற்காக அவர்களுக்குரிய கூலியையும் வழங்குவதாக அவன் மீதே சத்தியமிட்டு வலியுறுத்திக் கூறுமாறு தனது தூதர் (ஸல்) அவர்களைப் பணித்ததுடன் அது அவனுக்கு மிக இலகுவான விடயம் எனவும் கூறுகின்றான்.*

*மறுமையையும், நரகத்தையும் பொய்ப்பிப்பவர்களை மீளெழுப் பினால் அதே நரகில் அவர்களைத் தண்டிப்பதாக மற்றுமொரு வசனத்தில் கூறுகின்றான். அவர்களுக்கு பின்வருமாறு கூறப் படும் :* “எதனை நீங்கள் பொய்ப்பித்துக் கொண்டிருந்தீர்களோ அந்த (நரக) நெருப்பின் வேதனையை அனுபவியுங்கள்” *என்று அவர்களுக்குச் சொல்லப்படும். (அஸ்ஸஜ்தா : 20).*

## மனிதர்களின் சொல், செயல்களைப் பதிந்து பாதுகாத்தல் :

*ஒவ்வொரு மனிதனும் இரகசியமாகவும், வெளிப்படையாகவும், சொல்லக்கூடிய, செய்யக்கூடிய அனைத்து நலவு, கெடுதிகளை*

யும் அல்லாஹ் நன்கறிவதாகவும், அவற்றை வானங்கள், பூமி, மனிதர்கள் ஏனையவை அனைத்தையும் படைக்க முன்னரே பாதுகாக்கப்பட்ட ஏட்டில் பதிந்துள்ளதாகவும் அல்லாஹ் அறி வித்துள்ளான். அவ்வாறிருந்தும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவ னது வலது புறத்தில் நன்மைகளைப் பதியவும், இடது புறத்தில் தீமைகளைப் பதியவும் என இரு வானவர்களை நியமித்துள்ள தாகவும் கூறுகின்றான். அவர்களுக்கு எந்தவொன்றும் பதியத் தவற மாட்டாது. அவ்வாறு பதியப்பட்ட அவனது சொல், செயல்கள் அடங்கிய ஓர் ஏடு மறுமையில் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும், அதனை அவர்கள் வாசிப்பார்கள், அதில் எதனை யும் மறுக்க முடியாது, அவ்வாறு மறுத்தால் அவனுடைய கேள்வி, பார்வை, இரு கைகள், கால்கள், தோல்கள் ஆகியவற் றைத் தாம் செய்தவை பற்றிக் கூற அல்லாஹ் பேச வைத்து விடு வான்.

அல்குர்ஆனில் இது பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அல் லாஹ் கூறுகின்றான் : **“[மனிதன்] எதைக் கூறியபோதிலும் அதை எழுதக் காத்துக் கொண்டிருக்கும் ஒருவர் அவனிடம் இல்லாம லில்லை. [அவன் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் உடனுக்குடன் பதியப்படுகிறது.]”** *(காஃப் : 18).* மேலும் அல்லாஹ் கூறினான் : **“நிச்சயமாக, உங்கள் மீது பாதுகாவலர்கள் [நியமிக் கப்பட்டு] இருக்கின்றனர். [அவர்கள்] கண்ணியம் வாய்ந்த எழுத்தா ளர்கள். நீங்கள் செய்கிறதை அவர்கள் அறிகிறார்கள்”**

*(அல்இன்பிதார் : 10- 12).*

இவ்வசனங்களின் விளக்கம் :

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது வலது புறத்தில் நன்மை களைப் பதியவும், இடது புறத்தில் தீமைகளைப் பதியவும் என இரு வானவர்களை நியமித்துள்ளதாக அல்லாஹ் கூறுகின்றான். இறுதி இரு வசனங்களிலும் கண்ணியமான வானவர்களை மனி தர்களின் அனைத்து செயற்பாடுகளையும் பதிவதற்காக நியமித் துள்ளதாகும், அவர்களுடைய அனைத்து செயற்பாடுகளையும்

அவர்களைப் படைப்பதற்கு முன் அல்லாஹ் அறிந்து, பாதுகாக்கப்பட்ட ஏட்டில் பதிந்துள்ளவாறே அறிவதற்குரிய ஆற்றலை அவ்வானவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் கூறுகின்றான்.

சாட்சியம் :

உண்மையாக வணங்கப்படத் தகுதியான இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை எனவும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் எனவும் நான் சாட்சி கூறுவதுடன், சுவனம் உண்மையானது, நரகம் உண்மையானது, மறுமை எவ்வித ஐயமுமின்றி நிகழக் கூடியது, அல்லாஹ் மண்ணறைகளில் உள்ளவர்களை விசாரணை செய்து கூலி வழங்குவதற்காக மீளெழுப்புவான், அல்லாஹ் தனது வேதத்திலோ, தனது தூதரின் பொன்மொழிகளிலோ கூறியுள்ள அனைத்தும் உண்மையானதென நான் சாட்சி கூறுகின்றேன்.

இந்த சாட்சியத்தை ஏற்று, அதனை பகிரங்கப்படுத்தி, அதன்படி செயற்பட உமக்கு நான் அழைப்பு விடுக்கிறேன். இதுதான் வெற்றிக்கான வழியாகும்.

இரண்டாவது பாடம்

# நபி (ஸல்) அவர்கள் பற்றி அறிதல்

அல்லாஹ்தான் உன்னைப் படைத்த இறைவன், உனது செயற் பாடுகளுக்குக் கூலி வழங்க உன்னை மீளெழுப்புவான் என்பதை நீ அறிந்தால் உனக்கும் அனைத்து மனிதர்களுக்கும் ஒரு தூதரை அதே அல்லாஹ் அனுப்பியுள்ளான் என்பதையும் அறிந்து கொள். அவருக்கு வழிப்பட்டு, பின்பற்றுமாறு உனக்கு அவன் பணித்துள்ளான். இத்தூதரைப் பின்பற்றுவதன் மூலமன்றி சரி யான வணக்க முறையை அறிவதற்கான வழியேதுமில்லை. இத் தூதருக்கு அல்லாஹ் கொடுத்தனுப்பிய ஷரீஅத்தின் (மார்க்கத் தின்) மூலம் தான் அல்லாஹ்வை வணங்க முடியும்.

அனைத்து மக்களும் நம்பிக்கை கொண்டு, பின்பற்ற வேண்டிய கண்ணியமான இத்தூதர்தான் அனைத்து இறைத்தூதர்களுக் கும் முத்திரையாகவும், அனைத்து மக்களுக்குமான அல்லாஹ் வின் தூதராகவும் உள்ளார். அவர்தான் முஹம்மத் (ஸல்) அவர் களாவர். யூத, கிறிஸ்தவர்கள் கையாடல் செய்து திரிபுபடுத்துவ தற்கு முன்னரான அவர்களது வேதங்களாகிய தவ்ராத் மற்றும் இன்ஜீலில் நபிமார்களான மூஸா (அலை) மற்றும் ஈஸா (அலை) ஆகியோர் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் இவரது வருகையை நற்செய்தி கூறி முன்னறிவிப்புச் செய்துள்ளனர்.[(10)]

---

(10) தவ்ராத் இன்ஜீல் போன்ற வேதங்களில் முஹம்மத் (ஸல்) அவர்களின் வருகை பற்றிய முன்னறிவிப்பை அறிய பின்வரும் நூற்களைப் பார்வையிடவும் : இமாம் இப்னு தைமியா எழுதிய அல்ஜவாபுஸ் ஸஹீஹ் லிமன் பத்தல தீனல் மஸீஹ்- முதல் பாகம்-, இமாம் முஹம்மத் இப்னுல் கய்யிம் எழுதிய ஹிதாயதுல் ஹயாரா, இமாம் இப்னு ஹிஷாம் எழுதிய அஸ்ஸீரா அந்நபவிய்யா.மேலும் நபித்துவத்தின் அற்பு தங்களை அறிய இமாம் இப்னு கஸீர் போன்றோரின் வரலாற்று நூட்களைப் பார் வையிடவும்.

அல்லாஹ் அனைத்து மக்களுக்குமான தூதராக அனுப்பி, இறைத்தூதர்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த இந்த நபி குரைஷிக் கோத்திரத்தில் ஹாஷிம் குடும்பத்தைச் சேர்ந்த முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிப் ஆவார்கள். பூமியிலே மிக உயர்ந்த கோத்திரத்தில் மிக உயர்ந்த உண்மையான மனிதர் இவர்கள்தான். நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் புதல்வர் நபி இஸ்மாஈல் (அலை) அவர்களின் வழித்தோன்றலில்தான் இக்குடும்பம் வந்தது. நபி (ஸல்) அவர்கள் மக்காவில் கி. பி. 570ம் ஆண்டு பிறந்தார்கள். நபியவர்கள் பிறந்த தினத்தன்று இரவில், அதுவும் தாயின் வயிற்றிலிருந்து வெளியேறும் போது மக்களை அதிர்ச்சிக்குட்படுத்திய பேரொளியொன்று இப்பிர பஞ்சத்தில் பிரகாசித்ததாக வரலாற்று நூட்களில் பதியப் பட்டுள்ளது.

மக்காவில் குரைஷியர் புனித கஃபாவில் வைத்து வணங்கிக் கொண்டிருந்த சிலைகள் சறுக்கி வீழ்ந்தன. பாரசீக மன்னன் கிஸ்ரா உடைய மாளிகை அதிர்ந்து, அதில் பத்திற்கும் மேற் பட்ட மாடங்கள் சரிந்து வீழ்ந்தன. சுமார் ஈராயிரம் ஆண்டு காலமாக மஜூஸிகள் வணங்கி வந்த பிரம்மாண்டமான நெருப் புக் குண்டம் அணைந்துவிட்டது போன்ற பல நிகழ்வுகள் வர லாற்று நூல்களில் பதியப்பட்டுள்ளன.

இவையனைத்தும் அல்லாஹ் அல்லாமல் வணங்கப்படும் சிலை களை எதிர்காலத்தில் உடைத்தெறியவிருக்கும் இறுதித் தூதரின் பிறப்பையும், அவர் பாரசீகர்கள், மற்றும் ரோமர்களை ஓரிறைக் கொள்கையை ஏற்று, சத்திய மார்க்கத்தை ஏற்கும்படி அழைப் பார். மறுத்தால் தன்னைப் பின்பற்றுவோருடன் சேர்ந்து அவர் களுக்கெதிராக போர்தொடுத்து அதில் அல்லாஹ் வெற்றியைக் கொடுத்து, பூமியின் ஜோதியான அவனது சத்திய மார்க்கத்தை பரப்புவான் என்பதையும் மக்களுக்கு அறிவிக்கவே நிகழ்ந்தன.

இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை முன்னால் வந்த இறைத்தூதர்களை விட பல விடயங்களில் அல்லாஹ் தனித் துவப் படுத்தியுள்ளான். அவற்றுள் சில :

முதலாவது : இவர்கள்தான் இறுதித் தூதர், இவர்களுக்குப் பின்னர் நபியோ, தூதரோ இல்லை.

இரண்டாவது : இவர்களுக்கு வழங்கப்பட்ட தூது அனைத்து மக்களுக்குமானது. மனிதர்கள் அனைவரும் முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகத்தினர்தான். அவருக்கு வழிப்பட்டு, பின்பற்றியவர் சுவனம் நுழைவார், மாறு செய்தவர் நரகில் நுழைவார். யூத, கிறிஸ்தவர்கள் கூட இவர்களைப் பின்பற்றுமாறுதான் பணிக்கப்பட்டுள்ளார்கள். எனவே இவர்களை ஏற்று, பின்பற்றாதவர்கள் மூஸா (அலை), ஈஸா (அலை) உட்பட அனைத்து நபிமார்களையும் மறுத்தவர்களாவர். முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றாத அனைவைரையும் விட்டு மூஸா (அலை), ஈஸா (அலை) உட்பட அனைத்து நபிமார்களும் விலகியவர்களாகும்.

ஏனெனில் இவர்களது வருகை பற்றி தமது சமூகத்திற்கு நற்செய்தி கூறுமாறும், தமது காலத்தில் இவர்கள் அனுப்பப்பட்டால் பின்பற்றுமாறும் ஏவும்படி அவர்களுக்கு அல்லாஹ் பணித்துள்ளான். மேலும் இவர்களுக்கு கொடுத்தனுப்பிய அவனுடைய அதே மார்க்கம்தான் அத்தூதர்களுக்கும் கொடுத்தனுப்பினான். எனினும் அதன் முழுமை மற்றும் இலகுவை இறுதித் தூதரான கண்ணியமிக்க இத்தூதரின் காலத்தில் வைத்துள்ளான். முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்குப் பின் வேறு மார்க்கத்தை யாருக்கும் பின்பற்ற முடியாது. ஏனெனில் இதுதான் பிற மதங்களை மாற்றியமைத்த முழுமையான, பாதுகாக்கப்பட்ட சத்திய மார்க்கமாகும்.

யூத, கிறிஸ்தவ மதங்கள் அல்லாஹ் இறக்கியது போன்றல்லாமல் திரிபுகளுக்குட்பட்டு விட்டது. முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றும் அனைத்து முஸ்லிமும் மூஸா (அலை), ஈஸா (அலை) உட்பட அனைத்து நபிமார்களையும் பின்பற்றியவர்களாகக் கருதப்படுவர். இஸ்லாத்தை விட்டும் வெளிப்பட்ட அனைவரும் மூஸா (அலை), ஈஸா (அலை) உட்பட அனைத்து நபிமார்களையும் மறுத்தவர்களாகவே கருதப்படுவர். அவர்கள்,

தாம் மூஸா (அலை), மற்றும் ஈஸா (அலை) ஆகியோரைப் பின் பற்றுவதாக வாதிட்டாலும் சரியே.

இதனால்தான் நடுநிலையாக சிந்திக்கும் யூத, கிறிஸ்தவ மதகுருக் களில் ஒரு கூட்டத்தினர் முஹம்மத் (ஸல்) அவர்களை ஏற்று, இஸ்லாத்தில் நுழைய விரைந்தனர்.

## நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழங்கப்பட்ட இறையற்புதங்கள்[(11)]

நபி வரலாற்றுக் கலை துறைசார்ந்தவர்கள் நபியவர்களின் தூதுத்துவத்தை உண்மைப்படுத்தும் இறையற்புதங்களைக் கணக்கிட்டுள்ளனர், அவை ஆயிரத்தையும் தாண்டியுள்ளன. அவற்றுள் சில :

**1.** நபியவர்களின் உடலில் இரு புயங்களுக்கிடையில் அல்லாஹ் முளைக்கச் செய்த நபித்துவத்தின் முத்திரை. அது மறுக்களின்[(12)] தோற்றத்தில் "முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என எழுதப்பட்ட மச்சமாகும்.

**2.** கோடை கால வெயிலில் அன்னார் நடந்து சென்றால் மேகங் கள் நிழல் கொடுக்கும்.

**3.** அன்னாரது கரத்தில் கற்கள் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்யும், மரங்கள் அன்னாருக்கு ஸலாம் கூறும்.

**4.** எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் செய்திகளை முன்னறிவிப்புச் செய்தல். அவர்கள் அறிவித்த செய்திகள் இதோ ஒன்றன் பின் ஒன்றாக நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

---

**(11)** அல்குர்ஆனில் இதற்கு வைக்கப்பட்டுள்ள பெயர் ஆயாத் (அத்தாட்சிகளாகும்). முஃஜிஸாத் (இறையற்புதங்கள்) எனக் கூறப்படுவது வழமைக்கு மாற்றமான அதிசயங்களுக்காகும்.

**(12)** மறு என்பது கடலை விதை அல்லது அதை விடச் சிறிய அளவில் தோலில் வெளிப்படையாக வளரும் சதைத் துண்டாகும். இந்த முத்திரை பிறையைப் போன்று வட்டவடிவிலும், புறாமுட்டையின் அளவிலும் இருந்தது.

நபியவர்களின் மறைவுக்குப் பின் உலக முடிவு வரை நிகழக் கூடிய, அல்லாஹ் அன்னாருக்கு அறிவித்துக் கொடுத்த விடயங் கள் நபிமொழித் தொகுப்புகள், மறுமையின் அடையாளங்கள் பற்றிய நூல்கள், இமாம் இப்னு கஸீர் எழுதிய “அல்பிதாயா வந்நிஹாயா”, “அல்அக்பாருல் முஷாஆ பீ அஷ்ராதிஸ் ஸாஆ” போன்ற நூல்களிலும், நபிமொழித் தொகுப்புகளில் இடம்பெற் றுள்ள “குழப்பங்களும், போர்களும்” போன்ற தலைப்புக்களின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த அற்புதங்கள் முன்னைய நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களை ஒத்ததாக இருந் தது.

எனினும் அல்லாஹ் பிற நபிமார்களுக்கு வழங்காத யுக முடிவு வரை என்றும் நிலைத்திருக்கக் கூடிய அறிவியல் அற்புதம் ஒன்றை வழங்கி இறுதித் தூதரை சிறப்பித்துள்ளான். அதுதான் அல்லாஹ் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்ற அவனது பேச்சான அல்குர்ஆனாகும். திரிபு படுத்தும் கரங்கள் அதனை நெருங் காது. அதிலிருந்து ஓர் எழுத்தையேனும் ஒருவர் மாற்ற முயற்சித் தால் கண்டு பிடிக்கப்பட்டு விடும். இதோ முஸ்லிம்கள் கையில் தவளும் கோடிக் கணக்கான அல்குர்ஆன் பிரதிகளில் ஓர் எழுத் தேனும் வித்தியாசம் கிடையாது.

ஆனால் பைபிளின் பிரதிகளோ ஒன்றொக்கொன்று வேறுபட்ட பல பிரதிகள் உள்ளன. ஏனெனில் யூத, கிறிஸ்தவர்களிடம் அல்லாஹ் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்த போது அவர்கள் அவற்றில் மாற்றங்ளை செய்து திரிபு படுத்தி விட்டார்கள். அல்குர்ஆனைப் பாதுகாக்கும் பொறுப்பை அல் லாஹ் யாருக்கும் வழங்காமல் தானாகவே பொறுப்பேற்றான். அவன் பின்வருமாறு கூறுகின்றான் : **“நிச்சயமாக நாம்தான் இவ் வேதத்தை [உம் மீது] இறக்கிவைத்தோம். ஆகவே, நிச்சயமாக நாமே அதைப் பாதுகாத்துக் கொள்வோம்”.** (அல்ஹிஜ்ர் : 9).

அல்குர்ஆன் அல்லாஹ்வின் வேதம், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதர் என்பதற்கான அறிவியல் சான்று :

அல்குர்ஆன் அல்லாஹ்வின் வேதம், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதர் என்பதற்கான அறிவியல் சான்று' ஏனைய நபி மார்களைப் பொய்ப்பித்த அவர்களது சமூகத்தினரைப் போன்று குரைஷிக் காபிர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பொய்ப்பித்து அல்குர்ஆன் அல்லாஹ்வின் பேச்சல்ல என்று கூறிய போது அல்லாஹ் அவர்களுக்கு சவால் விடுத்தான். அதே போன்ற ஓர் வேதத்தைக் கொண்டுவருமாறு சவால் விடுத்தான், இவ்வேதம் அவர்களுடைய மொழியிலிருந்தும், அவர்கள் மொழிவல்லுனர்களாக இருந்தும், அவர்களில் பெரும்பெரும் பிரசங்கிகள், இலக்கியவாதிகள், கவிஞர்கள் இருந்தும் கூட அவர்களால் பதிலளிக்க முடியவில்லை.

பின் இட்டுக்கட்டப்பட்ட பத்து அத்தியாயங்களையாவது கொண்டு வருமாறு சவால் விடுத்தான். அதற்கும் முடியாமல் போக ஓர் அத்தியாயத்தையாவது கொண்டு வருமாறு சவால் விடுத்தான். அதுவும் அவர்களால் முடியவில்லை. பின் அவர்கள் மாத்திரமல்ல, ஒட்டு மொத்த மனிதர்கள், ஜின்கள் அனைவரும் தங்களுக்கிடையில் உதவியாளர்களாக இருந்தாலும் அதைப் போன்ற ஒன்றைக் கொண்டு வர முடியாது என பிரகடனப் படுத்திவிட்டான் : **“(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து, சிலர் சிலருக்கு உதவியாக இருந்து இதைப் போன்ற ஒரு குர்ஆனைக் கொண்டுவர முயற்சித்தபோதிலும் இதைப்போல் கொண்டு வர அவர்களால் (முடியவே) முடியாது”.** (அல்இஸ்ராஃ : 88).

அல்குர்ஆன் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லது வேறொருவருடைய வார்த்தையாக இருந்தால் மொழி விற்பன்னர்கள் அதனை மாற்ற சக்தி பெற்றிருப்பார்கள்.

என்றாலும் இது அல்லாஹ்வின் வார்த்தையாகும், மனிதர்களை விட அல்லாஹ்வுக்கு இருக்கும் சிறப்பைப் போன்றே மனித வார்த்தைகளை விட அல்லாஹ்வின் வார்த்தைக்கு இருக்கும் சிறப்பும், உயர்வுமாகும்.

அல்லாஹ்வுக்கு நிகரில்லாதது போன்றே அவனது வார்த்தைக்கும் நிகரேதுமில்லை. இதிலிருந்து அல்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தை என்பதும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதர் என்பதும் தெளிவாகின்றது. ஏனெனில் அல்லாஹ்வின் வார்த்தையை அவனிடமிருந்து வரும் ஓர் இறைத்தூதரல்லாமல் வேறு யாரும் கொண்டு வர முடியாது. அல்லாஹ் கூறுகின்றான் : **"உங்களிலுள்ள ஆண்களில் எவருக்கும் முஹம்மது [நபி அவர்கள்] தந்தையாக இருக்கவில்லை. எனினும், அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும், நபிமார்களுக்கு [இறுதி] முத்திரையாகவும் இருக்கிறார். அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கிறான்".** (அல்அஹ்ஸாப் : 40).

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: **"[நபியே!] நாம் உம்மை [இவ்வுலகில் உள்ள] எல்லா மனிதர்களுக்குமே நற்செய்தி கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிப்பவராகவும்தான் அனுப்பிவைத்திருக்கிறோம். எனினும், மனிதர்களில் பெரும்பாலானவர்கள் [இதை] அறிந்து கொள்ளவில்லை".** (ஸபஃ : 28). மேலும் அல்லாஹ் கூறுகிறான்: **"[நபியே!] உம்மை உலகத்தாருக்கு ஓர் அருளாகவே தவிர நாம் அனுப்பவில்லை".** (அல்அன்பியாஃ : 107).

மேற்கண்ட வசனங்களின் சுருக்கம் :

1. முதல் வசனத்தில் அல்லாஹ், முஹம்மத் (ஸல்) அவர்கள் மனிதர்கள் அனைவருக்குமான அவனது தூதர் என்றும், அவர்கள் தான் நபிமார்களின் முத்திரை, அவர்களுக்குப் பின் நபிமார்கள் இல்லை என்றும் அறிவிக்கின்றான். மேலும் தனது தூதுத்துவத்தை இறுதியாக சுமக்க அவர்களையே தேர்ந்தெடுத்துள்ளதாகவும் அறிவித்துள்ளான். ஏனெனில் அப்பணிக்கு மக்களில் மிகவும் பொருத்தமானவர் அவர்கள்தான் என்பதை அவன் நன்கு அறிகின்றான்.

2. இரண்டாம் வசனத்தில் அல்லாஹ் முஹம்மத் (ஸல்) அவர்களை மனிதர்களில் வெள்ளையர், கறுப்பர், அரபிகள், அரபிகள் அல்லாதவர் என அனைவருக்கும் தூதராக அனுப்பியுள்ளதாக

வும், மக்களில் அதிகமானவர்கள் சத்தியத்தை அறியாததின் காரணமாக வழிதவறி, அன்னாரைப் பின்பற்றாததினால் நிராகரிப்பாளர்களாக ஆகிவிட்டதாகவும் அறிவிக்கின்றான்.

*3.* மூன்றாம் வசனத்தில் அல்லாஹ் தனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை விழித்து, அன்னாரை அகிலத்தார் அனைவருக்கும் அருட்கொடையாக அனுப்பியுள்ளதாக அறிவிக்கின்றான். எனவே அன்னாரை அருட்கொடையாக அனுப்பியதன் மூலம் அல்லாஹ் மனிதர்களை கண்ணியப்படுத்தியுள்ளான், அவர்களை விசுவாசித்தவர் அல்லாஹ்வின் அருட்கொடையை ஏற்றவராவார், அவருக்கு சுவனமுண்டு. அன்னாரை விசுவாசிக்காமல், பின்பற்றாமலிருப்பவர் அல்லாஹ்வின் அருட்கொடையைத் தட்டிக்கழித்தவராவார். அவர் நரகிற்கும், நோவினை தரும் வேதனைக்கும் ஆளாகின்றார்.

அல்லாஹ்வையும், அவனது தூரையும் விசுவாசிப்பதற்கான ஓர் அழைப்பு :

எனவே, அல்லாஹ்வை இரட்சகனாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களைத் தூதராகவும் விசுவாசிக்க உமக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். அன்னாரைப் பின்பற்றி, அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த ஷரீஅத்தை செயற்படுத்தவும் உம்மை அழைக்கின்றோம். அந்த ஷரீஅத் அல்குர்ஆனையும், நபிகளாரின் ஆதாரபூர்வமான ஸுன்னாவையும் பிரதான மூலாதாரமாகக் கொண்ட இஸ்லாமிய மார்க்கமாகும். ஏனெனில் நபியவர்களை அல்லாஹ் தவறுகளில் இருந்து பாதுகாத்துள்ளான். எனவே அல்லாஹ் ஏவியதைத் தவிர ஏவ மாட்டார், அவன் தடுத்ததைத் தவிர தடுக்க மாட்டார். ஆகவே தூய்மையான உள்ளத்துடன் அல்லாஹ்தான் என்னுடைய ஒரே இரட்சகன், இறைவன் என நான் விசுவாசித்து விட்டேன், முஹம்மத் (ஸல்) அவர்கள் தான் அல்லாஹ்வின் தூதர் என்றும் விசுவாசித்து விட்டேன் என்று கூறிவிட்டு அவர்களைப் பின்பற்றுவீராக. ஏனெனில் அதன் மூலம் மாத்திரம்தான் வெற்றியுள்ளது.

அல்லாஹ் எனக்கும் உனக்கும் வெற்றியையும், விமோசனத்தையும் தருவானாக. ஆமீன்.

**மூன்றாவது பாடம்**

# சத்திய மார்க்கம் இஸ்லாத்தை அறிந்து கொள்ளல்

*அல்லாஹ்தான் உன்னைப் படைத்து, வாழ்வாதாரம் அளித்தவன், இணையில்லா ஓரேயொரு நாயன் அவன்தான், அவனை மாத்திரம் தான் நீ வணங்க வேண்டும் என்பதை நீ அறிந்தால், முஹம்மத் (ஸல்) அவர்கள் உனக்கும் அனைத்து மக்களுக்குமான இறைத்தூதர் என்பதையும் நீ அறிந்தால் சத்திய மார்க்கமாகிய இஸ்லாத்தை அறிந்து, விசுவாசித்து, அதனை அமுல் படுத்தாமல் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நீ விசுவாசித்தது செல்லுபடியாக மாட்டாது. ஏனெனில் இந்த மார்க்கம் தான் அல்லாஹ் பொருந்திக் கொண்டு, தனது தூதர்களுக்கும் ஏவியதாகும், இதனைக் கொடுத்துத் தான் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அனைத்து மனிதர்களுக்கும் நபியாக அனுப்பி அம்மக்கள் இதன்படி செயல்பட வேண்டுமென பணித்துள்ளான்.*

## இஸ்லாம் பற்றிய அறிமுகம்.

*இறுதித் தூதர், அனைத்து மக்களுக்குமான அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினார்கள் "இஸ்லாம் என்பது உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லையென்றும், முஹம்மது இறைவனின் தூதர் என்றும் சாட்சியம் கூறுவது, தொழுகையை நிறைவேற்றுவது, ஸகாத் கொடுப்பது, ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது, உங்களால் முடிந்தால் ஹஜ் செய்வது".*[13]

*(13) ஆதாரம் : முஸ்லிம் (8), அபூதாவூத் (4695).*

*இஸ்லாம்தான் அனைத்து மக்களுக்கும் அல்லாஹ் ஏவிய சர்வ தேச மார்க்கமாகும். அதனையே அல்லாஹ்வின் தூதர்கள் விசு வாசித்து அவனுக்கு சரணடைவதைப் பிரகடனப்படுத்தினார் கள். அல்லாஹ்வும் இதுதான் சத்திய மார்க்கமெனவும், வேறெ தனையும் மார்க்கமாக யாரிடத்திலிருந்தும் ஏற்க மாட்டான் என்றும் பிரகடனப் படுத்தியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:* **"நிச்சயமாக அல்லாஹ்விடம் ஏற்றுக் கொளப்பட்ட மார்க்கம் இஸ் லாம் மார்க்கமே".** *(ஆல இம்ரான் : 19). மேலும் அல்லாஹ் கூறு கின்றான் :* **"இஸ்லாமையன்றி [வேறொரு] மார்க்கத்தை எவரே னும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து [அது] அங்கீகரிக் கவே படமாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப் பார்".** *(ஆல இம்ரான் : 85).*

*மேற்கண்ட வசனங்களின் சுருக்கம் :*

*1. அல்லாஹ்விடம் இஸ்லாம் மாத்திரமே சத்திய மார்க்கமென அறிவிக்கின்றான்.*

*2. இரண்டாம் வசனத்தில், இஸ்லாத்தைத் தவிர வேறு மார்க்க மெதனையும் யாரிடமிருந்தும் ஏற்கமாட்டான் என அறிவிக் கின்றான். மரணத்திற்குப் பின் உண்மையான வெற்றியாளர்கள் முஸ்லிம்கள் மாத்திரமே. இஸ்லாம் அல்லாத மார்க்கத்தில் மர ணிப்பவர்கள் ஈருலகிலும் நஷ்டமடைந்து நரகில் வேதனை செய்யப்படுவார்கள்.*

*இதனால்தான் அனைத்து நபிமார்களும் தாம் அல்லாஹ்விற்கு சரணடைவதாக பிரகடனப்படுத்தியதுடன், அவ்வாறு சரண டைந்து இஸ்லாத்தில் இணையாதவர்களை விட்டும் தாம் வில கியவர்கள் எனவும் பிரகடனப்படுத்தினார்கள். யூத, கிறிஸ்தவர் களில் வெற்றி, விமோசனத்தை விரும்புவோர் உண்மையாகவே மூஸா (அலை) மற்றும் ஈஸா (அலை) ஆகியோரைப் பின்பற்றி யோராக மாறுவதற்காக இஸ்லாத்தில் இணைந்து, முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில் மூஸா (அலை), ஈஸா (அலை), முஹம்மத் (ஸல்) அவர்கள் உட்பட*

*அல்லாஹ்வின் அனைத்து தூதர்களும் முஸ்லிம்களாவர். அவர்கள் அனைவரும் இஸ்லாத்தின் பக்கமே அழைப்பு விடுத்தனர். ஏனெனில் அதுதான் அல்லாஹ் அவர்களுக்குக் கொடுத்தனுப்பிய மார்க்கமாகும். இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் உலக முடிவு வரை வருகின்ற அனைவரும் அன்னாரை ஏற்று, அவரைப் பின்பற்றி, அவருக்கு அல்லாஹ் அருளிய அல்குர்ஆனின் படி செயல்படாத வரை தன்னை முஸ்லிம் என்று கூறிக்கொள்ள முடியாது. அல்லாஹ் அந்த வாதத்தை ஏற்கவும் மாட்டான்.*

*அல்லாஹ் கூறுகின்றான் :* **"[நபியே! மனிதர்களை நோக்கி] கூறுவீராக: "நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும் அவன் மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக அதிகம் மன்னிப்பவன், பெரும் கருணையாளன் ஆவான்."** *(ஆல இம்ரான் : 31).*

*மேற்கண்ட வசனத்தின் சுருக்கம் :*

*அல்லாஹ்வை நேசிப்பதாக வாதிடுவோருக்குக் கூறுமாறு தனது தூதருக்குப் பணிக்கின்றான் : நீங்கள் உண்மையாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். ஏனெனில் அவனுடைய தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை விசுவாசித்து, பின்பற்றும் வரை அல்லாஹ் உங்களை நேசிக்கவோ, மன்னிக்கவோ மாட்டான்.*

*அனைத்து மக்களுக்குமான தூதராக வந்த முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த இந்த இஸ்லாம்தான் முழுமையான, நிறைவான, நெகிழ்வான மார்க்கமாகும். இதனை அல்லாஹ் முழுமைப்படுத்தி, தனது அடியார்களுக்கு மார்க்கமாக இதனையே பொருந்திக் கொண்டான். வேறெந்த மார்க்கத்தையும் ஏற்கமாட்டான். இதனைத் தான் நபிமார்கள் நற்செய்தியாகக் கூறி, விசுவாசித்தார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:*

**“இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு நான் முழு மைப்படுத்தி விட்டேன். எனது அருட்கொடைகளையும் உங்கள் மீது பூரணப்படுத்தி விட்டேன். மேலும் இஸ்லாத்தையே நான் உங்க ளுக்கு மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்”.** *(அல்மாஇதா : 3).*

*மேற்கண்ட வசனத்தின் சுருக்கம் :*

*நபி (ஸல்) அவர்களது வாழ்வின் இறுதிக் காலத்தில், அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்து, இஸ்லாமும் பரவி, அல்குர்ஆன் அருளப்பெற்றதும் முழுமையடைந்த பின் நபியவர்கள் மக்களு டன் சேர்ந்து தனது இறுதி ஹஜ்ஜில் அரபா மைதானத்தில் அல் லாஹ்விடம் பிரார்த்தித்து, உரையாடிக் கொண்டிருந்த வேளை இறங்கிய இவ்வசனத்தில்,*

*முஸ்லிம்களுக்குத் தனது மார்க்கத்தை முழுமைப்படுத்தி, முஹம் மத் (ஸல்) அவர்களைத் தூதராக அனுப்பி, அவர்களுக்கு அல் குர்ஆனை அருளியதன் மூலம் அவனுடைய அருட்கொடை களைப் பூரணப்படுத்தியதாக அல்லாஹ் அறிவிக்கின்றான். அவன் அவர்களுக்கு இஸ்லாத்தையே மார்க்கமாகப் பொருந்திக் கொண்டான், ஒரு போதும் அதனை வெறுக்க மாட்டான், இத னைத் தவிர வேறு மார்க்கமெதனையும் யாரிடமிருந்தும் ஏற்க மாட்டான் எனவும் அறிவிக்கின்றான்.*

*அனைத்து மக்களுக்குமான தூதராக வந்த முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்த இந்த இஸ்லாம்தான் முழு மையான, நிறைவான, நெகிழ்வான, அனைத்துக் காலங்கள், இடங்கள், சமூகங்களுக்கும் பொருத்தமான மார்க்கமாகும் என வும் அறிவித்துள்ளான். இது அறிவார்ந்த, இலகுவான, நீதமான, நலவுகள் அடங்கிய மார்க்கமாகும். இது வாழ்க்கையின் அனைத்து பகுதிகளுக்கும் முழுமையான நேர்த்தியான பாடத் திட்டமாகும். இது ஒரு மார்க்கம் மற்றும் ஒரு அரசாகும், இதில் ஆளுகை, நீதித்துறை, அரசியல், சமூகம் மற்றும் பொருளாதா ரம் மற்றும் மனிதர்களுக்கு அவர்களின் உலக வாழ்க்கையில் தேவைப்படும் எல்லாவற்றிற்கும் சரியான பாடத்திட்டம்*

இதிலுள்ளது. இதிலேதான் அவர்களுடைய மரணத்திற்குப் பின்னரான மறுமை வாழ்வுக்கும் வெற்றி உள்ளது.

## இஸ்லாத்தின் அடிப்படைகள்

முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கொடுத்தனுப்பிய முழுமையான இந்த இஸ்லாம் ஐந்து தூண்களின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. அவற்றை விசுவாசித்து, நிறைவேற்றாமல் ஒரு மனிதன் உண்மையான முஸ்லிமாக முடியாது. அவை :

1. உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சியம் கூறுதல்.

2. தொழுகை நிறைவேற்றுதல்.

3. ஸகாத் வழங்குதல்.

4. ரமழானில் நோன்பு நோற்றல்.

5. சக்தி பெற்றவர்கள் அல்லாஹ்வின் ஆலயத்தை நாடிச் சென்று ஹஜ் செய்தல்.(14)

### முதலாவது அடிப்படை (தூண்) :

"உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சியம் கூறுதல்":

இந்த சாட்சியத்திற்கு ஓர் அர்த்தம் உள்ளது, அதனை ஒரு முஸ்லிம் விளங்கி, செயல்படுத்துவது அவசியமாகும். அதனை விளங்

(14) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "இஸ்லாம் ஐந்து தூண்கள் மீது நிறுவப்பட்டுள்ளது. உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சியம் கூறுதல், தொழுகையை நிறைவேற்றுதல், ஸகாத் வழங்குதல், ரமழானில் நோன்பு நோற்றல், சக்தி பெற்றவர்கள் அல்லாஹ்வின் மாளிகையை நாடிச் சென்று ஹஜ் செய்தல். (இமாம் புஹாரியின் ஸஹீஹுல் புஹாரி 8, 4515, தாரீகுல் கபீர் 4/ 213, 8/ 319, 322, முஸ்லிம் 16.) இது பற்றிய அல்குர்ஆன் ஆதாரங்கள் அவ்வப்போது விரிவாகக் கூறப்படும்.

காமல், செயல்படுத்தாமல் வெறும் நாவினால் மாத்திரம் மொழிவதால் பயனடைய முடியாது.

“லாஇலாஹ இல்லல்லாஹு” என்பதன் அர்த்தம்: வானங்களி லும், பூமியிலும் உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. அவன்தான் உண்மையான இறைவன், பிற கடவுள்களெல்லாம் பொய்யானவை. இக்கலி மாவிலுள்ள இலாஹ் எனும் வார்த்தை வணங்கப்படுபவன் என்ற அர்த்தத்தை குறிக்கின்றது.

அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குபவன் அவனை நிராகரிக் கும் இணைவைப்பாளனாவான். வணங்கப்படுபவர் ஒரு நபியா கவோ, இறைநேசராகவோ இருந்தாலும் சரி, அது அல்லாஹ்வை நெருங்கி உதவி தேடுவதற்காக இருந்தாலும் சரி. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் போரிட்ட அந்த இணைவைப்பாளர்கள் இக் காரணத்திற்காகவே தவிர நபிமார்களை, இறைநேசர்களை வணங்கவில்லை. என்றாலும் இது நிராகரிக்கப்பட்ட பொய் யான காரணமாகும். ஏனெனில் வணக்கத்தை வேறொருவருக்கு செலுத்துவதன் மூலம் அல்லாஹ்வை நெருங்கவோ, உதவி தேடவோ முடியாது. மாறாக அவனது பெயர்கள், பண்புகளை முன்வைத்தும், மற்றும் தொழுகை, தர்மம், திக்ரு, நோன்பு, அறப்போர், ஹஜ், பெற்றோருக்குப் பணிவிடை செய்தல் போன்ற நற்செயல்களை முன்வைத்தும், உயிரோடுள்ள, தொடர்பு கொள்ள முடியுமான ஒரு விசுவாசி தனது சகோதர ருக்காக செய்யும் பிரார்த்தனை மூலமுமே அல்லாஹ்வை நெருங்கி, உதவி தேட முடியும்.

வணக்கம் பல வகையைக் கொண்டது, அவற்றுள் சில :

**1. பிரார்த்தனை :**

இது அல்லாஹ் மாத்திரம் சக்தி பெறக்கூடி தேவைகளை அவனி டம் வேண்டுவதாகும். உதாரணமாக : மழை பொழிவித்தல், நோய் நிவாரணம் அளித்தல், படைப்பினங்களால் நீக்க முடியாத

*இடர்களை நீக்குதல், சுவனத்தை வேண்டுதல், நரகை விட்டும் பாதுகாப்புத் தேடுதல், குழந்தைப் பாக்கியம், வாழ்வாதாரம், ஈடேற்றம் போன்றவற்றை வேண்டுதல் போன்றனவாகும்.*

*மேற்கண்ட அனைத்தும் அல்லாஹ்விடம் மாத்திரம்தான் கேட் கப்பட வேண்டும். படைப்பினங்களில் உயிருள்ளவரிடமோ, மரணித்தவரிடமோ அவற்றில் ஒன்றை வேண்டினால் அது அவரை வணங்குவதாகும். தனது அடியார்கள் தன்னிடம் மாத் திரம்தான் பிரார்த்திக்க வேண்டும் என ஏவி, பிரார்த்தனை ஒரு வணக்கம், அதனை பிறருக்கு செலுத்துபவன் நரகவாதி என்ப தைப் பின்வருமாறு கூறுகின்றான் : உங்கள் இறைவன் கூறுகி றான்:* **"நீங்கள் (உங்களுக்கு வேண்டியவை அனைத்தையும்) என்னிடமே கேளுங்கள். நான் உங்கள் பிரார்த்தனையை அங்கீக ரித்துக் கொள்வேன். எவர்கள் என்னை வணங்காது பெருமைய டிக்கின்றனரோ, அவர்கள் நிச்சயமாக சிறுமைப்பட்டவர்களாக நர கம் புகுவார்கள்".** *(ஃகாபிர் : 60)*

*அல்லாஹ் அல்லாமல் அழைக்கப்படுவோர்- அவர்கள் நபிமார் கள், இறைநேசர்களாக இருந்தாலும் சரி- யாருக்கும் எந்தவொரு நலவையோ, கெடுதியையோ செய்யும் அதிகாரம் பெறமாட் டார்கள் என்பதைப் பின்வருமாறு கூறுகின்றான் :*

**"(நபியே! இணைவைத்து வணங்குபவர்களை நோக்கி) கூறுவீ ராக: அல்லாஹ்வைத் தவிர்த்து (வேறு தெய்வங்கள் இருப்பதாக) நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ அவற்றை நீங்கள் (உங்கள் சிரமங்களை நீக்க) அழையுங்கள். (அவ்வாறு அழைத் தால்) அவை உங்கள் சிரமத்தை நீக்கி வைக்கவோ அல்லது (அதைத்) திருப்பிவிடவோ சக்திபெறாது (என்பதை அறிந்து கொள் வீர்கள்), (அல்லாஹ்வையன்றி) இவர்கள் யாரை பிரார்த்திக்கின் றார்களோ அவர்கள், ஏன் அவர்களில் மிகவும் (இறைவனுக்கு) நெருக்கமானவர்கள் கூட தங்கள் இறைவன்பால் (கொண்டு செல்ல) நற்கருமங்களை செய்து கொண்டும் அவனது அருளை எதிர்பார்த்தும் அவனது தண்டனைக்கு அஞ்சியுமே இருக்கின்ற**

**னர். நிச்சயமாக உமது இறைவனின் தண்டனை அச்சப்படத் தக்க தாகவே உள்ளது".** *(அல்இஸ்ரா : 56, 57),* மேலும் அல்லாஹ் *கூறுகின்றான் :* **"நிச்சயமாக பள்ளிவாசல் [மஸ்ஜிது]களெல்லாம், அல்லாஹ்வை வணங்குவதற்காக உள்ளன. ஆகவே, [அவற்றில்] அல்லாஹ்வுடன் மற்றெவரையும் [பெயர் கூறி] அழைக்காதீர்கள்".** *(அல்ஜின் : 18).*

**2. அறுத்துப் பலியிடல், நேர்ச்சை, குர்பானி கொடுத்தல் :**

*இரத்தங்களை ஓட்டுதல், குர்பானி கொடுத்தல், நேர்ச்சை போன் றவற்றை அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்வதன் மூலமே தவிர ஒரு மனிதன் அவனை நெருங்க முடியாது. சமாதி, ஜின் போன்ற அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அறுத்துப்பலியிட்டால் அது அவர்களை வணங்குவதாகும். அல்லாஹ்வின் சாபத்திற்கு ஆளா கின்றான். அவன் கூறுகின்றான் :* **"நீங்கள் கூறுங்கள்: "நிச்சய மாக என் தொழுகையும், என் [மற்ற] வணக்கங்களும், என் வாழ் வும், என் மரணமும் உலகத்தாரை படைத்து வளர்த்து பரிபக்குவப் படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை, அவனுக்கு யாதோர் இணையுமில்லை – இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன் – [அவனுக்கு] வழிப்பட்டவர்களில் – முஸ்லிம்களில் – நான் முதன் மையானவன் [என்றும் கூறும்]".** *(அல்அன்ஆம் : 162, 163).*

*நபி ஸல் அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ் அல்லாதோருக் காக அறுத்துப் பலியிடுவோரை அல்லாஹ் சபிப்பானாக!".*[15]

*"எனக்கு இன்ன காரியம் நிறைவேறினால் இன்னாருக்காக தர் மம் செய்வதாக, அல்லது இவ்வாறு செய்வேன்" என்பதாக ஒரு மனிதன் கூறினால் இந்த நேர்ச்சை இணைவைப்பாகும். ஏனெ னில் இது படைப்பினம் மீது வைக்கும் நேர்ச்சையாகும். நேர்ச்சை ஒரு வணக்கமாகும். அது அல்லாஹ்வுக்கு மாத்திரம் தான் வைக்கப்பட வேண்டும். மார்க்க ரீதியான நேர்ச்சையில் இவ்வாறு தான் கூற வேண்டும் : "எனக்கு இன்ன காரியம் நிறை*

---

*(15) ஆதாரம் : முஸ்லிம் (1978), நஸாஈ (4422).*

வேறினால் அல்லாஹ்வுக்காக தர்மம் செய்வேன், அல்லது இவ் வாறு வணக்கம் செய்வேன் என நேர்ச்சை வைக்கின்றேன்".

**3. பாதுகாப்புத் தேடுதல், உதவி தேடுதல்[16] :**

பாதுகாப்புத் தேடுதல், உதவி தேடுதல், அபயம் தேடுதல் அனைத்தும் அல்லாஹ்விடம்தான் வேண்டப்பட வேண்டும். அல்லாஹ் திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான் : "**[அல் லாஹ்வே!] நாங்கள் உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம்**". (அல்பாதிஹா : 5), மேலும் அல்லாஹ் கூறு கின்றான் : "**[நபியே! நீர் பிரார்த்தனை செய்து] கூறுவீராக அதி காலையின் இறைவனிடம், நான் பாதுகாப்பைக் கோருகிறேன். அவன் படைத்திருக்கும் பொருள்களின் தீங்கை விட்டும்**". (அல்பலக் : 1, 2). நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி னார்கள் : "என்னிடம் பாதுகாப்புத் தேடப்படலாகாது, அல் லாஹ்விடம் தான் பாதுகாப்புத் தேடப்பட வேண்டும்".[17] மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி னார்கள் : "நீர் கேட்டால் அல்லாஹ்விடம் கேள், உதவி தேடி னால் அல்லாஹ்விடம் உதவி தேடு".[18]

உயிரோடுள்ள, தொடர்பு கொள்ள முடியுமான ஒருவரிடம் அவ ரது சக்திக்குட்பட்ட விடயத்தில் மாத்திரம் ஆபத்திலிருந்து பாதுகாப்புத் தேடலாம், உதவி கேட்கலாம், ஆனால் பொது வாக கெடுதியை விட்டும் அல்லாஹ்விடம் மாத்திரம்தான் பாது காப்புத் தேடலாம். மரணித்தவர், மறைவிலுள்ளவர்களிடம்

---

(16) உதவி தேடுதல் என்பது பொதுவானதாகும், பாதுகாப்புத் தேடுதலில் நெருக்கடி, சிரமம் போன்ற ஆபத்தின் போது பாதுகாப்புத்தேடல், கெடுதி, தீங்கு களை விட்டும் பாதுகாப்புத் தேடி எவரிடமேனும் ஒதுங்குதல் என இரு வகை உண்டு.

(17) ஆதாரம் : அஹமத் (5/ 317/ 22758), தபரானீ (10/ 246), அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

(18) ஆதாரம் : திர்மிதி (2516), அஹ்மத் (2802), தபரானீ (2820, 12989), இமாம் திர்மிதி இதனை ஹஸன் ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

பாதுகாப்புத் தேடவோ, உதவி தேடவோ அறவே கூடாது. ஏனெனில் அவர் நபியாகவோ, இறைநேசராகவோ, வானவரா கவோ இருந்தாலும் அவருக்கு எதனையும் செய்யும் அதிகார மில்லை.

அல்லாஹ்வைத் தவிர யாரும் மறைவானவற்றை அறிய முடி யாது, அவ்வாறு தனக்கு மறைவான ஞானமுள்ளதென யாராவது வாதாடினால் அவன் நிராகரிப்பாளனாவான், அவனைப் பொய்ப்பிப்பது அவசியமாகும். அவன் ஏதாவது ஜோதிடம் கூறி, அதன்படியே நிகழ்ந்தால் அது எதேச்சையாக ஏற்பட்டதா கும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் ஒரு ஜோசியரிடம் அல்லது குறிசொல்பவரிடம் சென்று, அவன் கூறுவதை உண் மைப்படுத்துகின்றானோ அவன் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டதை மறுத்தவனாவான்".[19]

**4. தவக்குல் மற்றும் எதிர்பார்ப்பு,[20] உள்ளச்சம் :**

அல்லாஹ்விடம் மாத்திரம்தான் தவக்குல் வைக்க வேண்டும், ஆதரவு வைப்பதும், உள்ளச்சம் கொள்வதும் அவனை மாத்தி ரம்தான்.

கவலைக்குரிய விடயம் என்னவெனில் முஸ்லிம் எனக் கூறிக் கொள்ளும் பலர் அல்லாஹ்விற்கு இணை வைக்கின்றனர். அவ னல்லாத உயிரோடுள்ள பிரபலங்களை, மண்ணறைகளில் உள்ள வர்களை அழைக்கின்றனர், அம்மண்ணறைகளை வலம் வருகின் றனர், அவர்களிடம் தமது தேவைகளை வேண்டுகின்றனர், இவை அல்லாஹ் அல்லாதோரை வணங்குவதாகும், இவ்வாறு

---

(19) ஆதாரம் : அபூதாவூத் (3904), திர்மிதி (135), இப்னு மாஜா (639). அஷ்ஷேக் அல்பானீ ஸஹீஹுத் தர்கீபி வத்தர்ஹீப் எனும் நூலில் (3047) இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

(20) தவக்குல் என்பது மனவுறுதியுடன் பொறுப்பாளரிடம் (அல்லாஹ்விடம்) விடயங்களைப் பொறுப்புச் சாட்டுதல், எதிர்பார்ப்பு என்பது எதிர்காலத்தில் நாம் விரும்பும் ஒரு விடயம் நிகழ்வதை, கிடைப்பதை ஆதரவு வைத்தல்.

*செய்பவர் தான் முஸ்லிமென வாதாடி, லாஇலாஹ இல்லல் லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் எனக் கூறி, தொழுகை, நோன்பு, ஹஜ் வணக்கங்களை நிலைநாட்டினாலும் முஸ்லிமாக இருக்க முடியாது.*

*அல்லாஹ் கூறுகின்றான் :* **"(நபியே!) உமக்கும், (நபிமார்களின்) உமக்கு முன்னிருந்தவர்களுக்கும் மெய்யாகவே வஹீ மூலம் அறி விக்கப்பட்டது: (அது என்ன வென்றால், அல்லாஹ்வுக்கு) நீர் இணைவைத்தால், உமது நன்மைகள் அனைத்தும் அழிந்து, நிச்ச யமாக நீர் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவீர்". *(அஸ்ஸுமர் : 65).***
*மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :* **"இஸ்ராஈலின் சந்ததியினரே எனது இறைவனும் உங்களது இறைவனுமாகிய அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்' என்று கூறினார். நிச்சயமாக யார் அல் லாஹ்வுக்கு இணைவைக்கின்றானோ அவனுக்கு அல்லாஹ் சுவ னத்தைத் தடுத்து விடுவான். அவனது ஒதுங்குமிடம் நரகமே அநியா யக்காரர்களுக்கு எந்த உதவியாளனும் இல்லை".**

***(அல் மாஇதா : 72).***

*தனது சமூகத்தவரிடம் கூறுமாறு அல்லாஹ் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் பின்வருமாறு கூறு கின்றான் :* **"(நபியே!) கூறுவீராக: "நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். நிச்சயமாக உங்கள் இறைவன் ஒரே ஓர் இறைவன்தான் என்று எனக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எவர் தன் இறைவனைச் சந்திக்க விரும்புகிறாரோ அவர் நற்செயல்களைச் செய்து தன் இறைவனுக்கு ஒருவரையும் இணை யாக்காது (அவனையே) வணங்கி வருவாராக!".**

***(அல் கஹ்ஃப் : 110).***

*இவ்வாறான அறிவீனர்களை மார்க்கத்தின் சில துணைப் பிரிவு களை அறிந்து, அடிப்படையான ஓரிறைக் கொள்கையை அறி யாதிருக்கும் வழிதவறிய மோசமான அறிஞர்கள் ஏமாற்றிவிட் டனர். பரிந்துரை (ஷபாஅத்), உதவிதேடல் (வஸீலா) போன்ற வற்றின் அர்த்தங்களை முறையாக அறியாததின் விளைவாக*

மக்களை இணைவைப்பின்பால் அழைக்க ஆரம்பித்து விட்ட னர். இவற்றில் இவர்களது வாதம் அன்றும், இன்றும் நபிய வர்கள் மீது புனையப்பட்ட போலி ஹதீஸ்களுக்குக் கொடுக்கப் படும் தவறான திரிபுகள், கட்டுக்கதைகள், மற்றும் ஷைத்தான் காண்பிக்கும் தீய கனவுகள் போன்ற இவர்களது நூட்களில் பதி யப்பட்டுள்ள வழிகேடுகளாகும். இதன் மூலம் ஷைத்தான் மற் றும் மனோ இச்சையைப் பின்பற்றி, ஆரம்பகால இணைவைப் பாளர்களைப் போன்று மூதாதையர்களையும் முன்னோர்களை யும் கண்மூடித்தனமாகப் பின்பற்றியும் அல்லாஹ் அல்லாதோ ரைப் பின்பற்றுவதை வலுப்படுத்தவே மேற்கண்ட போலி ஆதா ரங்களில் அறிவீனமாகத் தங்கியிருக்கின்றனர்.

**“அவன்பால் நெருங்குவதற்குரிய வழியை(வணக்கங்களின் மூலம்) தேடிக் கொள்ளுங்கள்”** என்ற மாஇதா 35ம் வசனத்தில் அல்லாஹ் எமக்கு ஏவிய நெருக்கம் அவனை ஒருமைப்படுத்தல், தொழுகை, தர்மம், நோன்பு, ஹஜ், அறப்போர், நன்மையை ஏவுதல், தீமை யைத் தடுத்தல், உறவினர்களுடன் சேர்ந்து நடத்தல் போன்ற நற்செயல்கள் மூலம் அவனிடம் நெருக்கத்தைத் தேடுவதாகும். ஆனால் மரணித்தவர்களை அழைத்தல், துன்பங்கள் இடர்க ளின் போது அவர்களிடம் பாதுகாப்புத் தேடல் போன்றன அல்லாஹ் அல்லாது அவர்களை வணங்குவதாகும்.

அல்லாஹ் அனுமதியளிக்கும் நபிமார்கள், இறைநேசர்கள் மற் றும் இதர முஸ்லிம்கள் செய்யும் பரிந்துரை உண்மையானதே, அதனை நாம் விசுவாசிக்கின்றோம். எனினும் அதனை மரணித்த வர்களிடம் வேண்டப்படலாகாது. ஏனெனில் இது அல்லாஹ் வுக்குச் சொந்தமான ஒன்று, அவனது அனுமதியின்றி யாருக்கும் கிடைக்காது, அல்லாஹ்வை ஒருமைப்படுத்துபவன் அவனி டமே இதனை வேண்டுவான் : “இறைவா என் விடயத்தில் உனது தூதரும் நல்லடியார்களும் செய்யும் பரிந்துரையை ஏற் றுக் கொள்வாயாக” எனக் கூற வேண்டுமே தவிர “இன்னாரே! எனக்குப் பரிந்துரை செய்யுங்கள்” எனக் கூறக்கூடாது,

*ஏனெனில் அவர் மரணித்தவர், மரணித்தவர்களிடம் ஒரு போதும் எதுவுமே வேண்ட முடியாது. அல்லாஹ் கூறுகின் றான்:* **“[மேலும் நபியே!] கூறுவீராக: பரிந்துரைகள் அனைத்துமே அல்லாஹ்வுக்குச் சொந்தமானவை. [ஆகவே அவனுடைய அனு மதியின்றி, அவனிடத்தில் ஒருவரும் பரிந்துரை செய்ய முடியாது.] வானங்கள் பூமியின் ஆட்சி முழுவதும் அல்லாஹ்வுக்குரியதே. பின் னர், [மறுமையில்] அவனிடமே நீங்கள் கொண்டு வரப்படுவீர்கள்”.** *(அஸ்ஸுமர் : 44).*

*புஹாரி, முஸ்லிம் உட்பட பிரதான ஹதீஸ் தொகுப்புகளில் உள்ள ஸஹீஹான ஹதீஸ்களில் நபி (ஸல்) அவர்கள் தடுத்ததாக இடம்பெற்றுள்ள இஸ்லாத்திற்கு முரணான தடுக்கப்பட்ட பித் அத்தில் உள்ளவைதான்: மண்ணறைகளை பள்ளிகளாக எடுத்து, விளக்கேற்றி, அதன் மீது கட்டுதல், சுண்ணாம்பு தடவுதல், அதன் மீது எழுதுதல், திரைகளைத் தொங்கவிடல், மண்ணறை களில் தொழுதல் போன்றனவாகும். இவை அவர்களை வணங்கு வதற்கான பிரதான காரணமாக இருப்பதால் நபியவர்கள் இவை யனைத்தையும் தடுத்தார்கள்.*

*எகிப்திலுள்ள அஹ்மத் அல்பதவீ, ஸைனப் (ரலி) போன்றோ ரின் சமாதிகள், இராகிலுள்ள அப்துல் காதிர் ஜீலானியின் சமாதி, இராகிலுள்ள நஜ்ஃப், கர்பலா போன்ற நகரங்களில் உள்ள நபியவர்களுடைய குடும்பத்தினருடையதாகக் கூறப்படும் சமாதிகள், மற்றும் பல நாடுகளில் உள்ள சமாதிகளில் நிகழும் வலம் வருதல், தேவைகளை அவர்களிடம் வேண்டுதல், அவர்க ளால் நலவு, கெடுதிகள் செய்ய முடியும் என நம்பிக்கை கொள் ளல் போன்ற அறிவீனர்கள் செய்யும் செயல்களும் இணைவைப் பில் உள்ளவைதான் என்பது இதன் மூலம் புலனாகின்றது.*

*இவர்கள் தாம் முஸ்லிமென வாதாடி, லாஇலாஹ இல்லல் லாஹு, முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் எனக் கூறி, தொழுகை, நோன்பு, ஹஜ் வணக்கங்களை நிலைநாட்டினாலும் தமது இந்த செயற்பாடுகள் மூலம் இணைவைப்பாளர்கள், வழிதவறியவர்கள்*

என்பதும் புலனாகின்றது. ஏனெனில் லாஇலாஹ இல்லல் லாஹு, முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று மொழிந்தவர் ஏற்க னவே கூறியது போன்று அவற்றின் கருத்துக்களை அறிந்து, செயல்படுத்தாமல் அல்லாஹ்வை ஒருமைப் படுத்தியவராக கணிக்கப்படமாட்டார். முஸ்லிமல்லாதவர் இக்கலிமாவை மொழிந்தவுடன் இஸ்லாத்தில் இணைந்து விடுகின்றார், இந்த அறிவீனர்களைப் போன்று தொடர்ந்து இணைவைப்பில் இருப் பது தெளிவாகும் வரை, அல்லது தெளிவு படுத்தப்பட்ட பின் பும் இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்றை மறுக்கும் வரை, அல் லது இஸ்லாத்திற்கு முரணான ஒன்றை நம்பிக்கை கொள்ளும் வரை அவர் முஸ்லிம் என்றே அழைக்கப்படுவார்.

நபிமார்கள், இறைநேசர்கள்[21] தம்மை அழைத்து பாதுகாப்புத் தேடுபவர்களை விட்டும் விலகியவர்களாகும். ஏனெனில் அல் லாஹ், அவனை மாத்திரம் வணங்கும் படியும், நபியாகவோ, இறைநேசராகவோ இருந்தாலும் அவனல்லாதவர்களை வணங் குவதை விட்டுவிடும் படியும் மக்களை அழைக்கவே தனது தூதர்களை அனுப்பினான்.

நபி (ஸல்) அவர்களையும், அவர்களைப் பின்பற்றும் இறைநேசர் களையும் நேசிப்பது அவர்களை வணங்குவதில் அல்ல, ஏனெ

---

(21) இறைநேசர்கள் என்போர் அல்லாஹ்வை ஒருமைப் படுத்தி, அவனுக்கு வழிப் பட்டு, அவனது தூதரைப் பின்பற்றுவோராகும். அவர்களில் தமது அறிவு, அறப் போர் மூலம் அறியப்பட்டவர்களும், அறியப்படாதவர்களும் உள்ளனர். அவர்க ளில் அறியப்பட்டவர்கள் மக்கள் தம்மைப் புனிதப்படுத்துவதை விரும்பமாட் டார்கள். உண்மையான இறைநேசர்கள் தாம் இறைநேசர்கள் என ஒரு போதும் வாதாடமாட்டார்கள். மார்க்க விடயத்தில் குறையுள்ளவர்களாகவே தம்மைப் பார்ப்பார்கள். தமது ஆடை, தோற்றங்களில் நபியவர்களைப் பின்பற்றுவதைத் தவிர அவர்களுக்கென தனித்துவமான அடையாளங்கள் இருக்காது. அல்லாஹ்வை ஒருமைப் படுத்தி, அவனுக்கு வழிப்பட்டு, அவனது தூதரைப் பின்பற்றும் ஒவ் வொரு முஸ்லிமும் அவனிடம் இருக்கும் நன்மைகள், வணக்கங்களுக்கு ஏற்ப இறைநேசராவான். இதன் மூலம் தம்மை இறைநேசர்கள் என வாதாடி, மக்கள் கண்ணியப் படுத்தி, புனிதப்படுத்த வேண்டும் என்பதற்காக பிரத்தியேகமான ஆடைகளை அணிவோர் உண்மையான இறைநேசர்களில்லை, அவர்கள் பொய் யர்கள் என்பது புலனாகின்றது.

னில் அவர்களை வணங்குவது நேசமல்ல, பகைமையாகும், அவர்களைப் பின்பற்றி, அவர்கள் வழி நடப்பதற்காகவே அவர்களை நேசிக்க வேண்டும். உண்மையான முஸ்லிம் நபிமார்கள், இறைநேசர்களை நேசிப்பான், ஆனால் அவர்களை வணங்க மாட்டான்.

நபி (ஸல்) அவர்களை நேசிப்பது நமது உயிர், மனைவி, குழந்தை, அனைத்து மனிதர்களை நேசிப்பதை விடவும் அவசியமான ஒன்று என நாம் விசுவாசிக்கின்றோம்.

## வெற்றி பெற்ற பிரிவினர்

எண்ணிக்கையில் முஸ்லிம்கள் அதிகமானவர்கள், எனினும் உண்மையான முஸ்லிம்கள் குறைந்தளவிலேயே உள்ளனர். இஸ்லாத்தின் பெயரில் உருவான பிரிவுகள் 73 வரை உள்ளன. அவற்றின் ஒட்டுமொத்த சனத்தொகை நூறு கோடியைத்[22] தாண்டினாலும் உண்மையான முஸ்லிம் பிரிவு ஒன்றுதான். அது அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அடிப்படைக் கொள்கை, நற்செயல்களில் நபி (ஸல்) அவர்கள் மற்றும் தோழர்கள் சென்ற வழியில் பயணிக்கும் பிரவினர்தான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யூதர்கள் 71 பிரிவினராக பிரிந்தனர். கிறிஸ்தவர்கள் 72 பிரிவினராக பிரிந்தனர். எனது சமூகம் 73 பிரிவினர்களாக பிரிவார்கள். அதில் ஒரு கூட்டத்தை தவிர மற்றவைகள் எல்லாம் நரகில் நுழையும்". (அப்பொழுது ஸஹாபாக்கள்) அல்லாஹ்வின் தூதரே! அந்த கூட்டம் யார்? எனக் கேட்டார்கள். அதற்கு (நபியவர்கள்) "நானும் எனது ஸஹாபாக்களும் எதன் மீது இருக்கிறோமோ அதில் இருப்பவர்கள் தான்" என்றார்கள்.[23]

---

(22) இது இந்நூல் எழுதப்பட்ட ஹி. 1395 / கி. பி. 1975ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கணிப்பீட்டின் படியாகும்.

(23) ஆதாரம் : அபூ தாவூத் (3842), இப்னு மாஜஃ (3226). அஷ்ஷேக் அல்பானீ தனது ஸஹீஹுல் ஜாமிஃ (1082), ஸில்ஸிலா ஸஹீஹா (203) ஆகிய நூல்களில் இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

நபியவர்களும் ஸஹாபாக்களும் இருந்த வழி எதுவெனில் : லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் எனும் கலிமாவின் அர்த்தத்தை உறுதிகொண்டு, அல்லாஹ்வை மாத்திரம் அழைத்து, அவனுக்கு மாத்திரம் அறுத்துப் பலியிடல், நேர்ச்சை வைத்தல், அவனிடம் மாத்திரம் பாதுகாப்புத் தேடுதல், உதவி தேடுதல், நலவு கெடுதி அனைத்தும் அவனிடமிருந்து மாத்திரம்தான் வருகின்றன என்பதையும் உறுதிகொண்டு அக்கலிமாவின் அடிப்படையில் செயல்படுதல், இஸ்லாத்தின் தூண்களை உளத்தூய்மையுடன் நிறைவேற்றுதல், அல்லாஹ்வின் வானவர்களையும், வேதங்களையும், தூதர்களையும், மறுமையில் மீளெழுப்பப்படல், விசாரணை, சுவனம், நரகம், நன்மை, தீமை அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து என்ற விதி ஆகிய அனைத்தையும் நம்புதல் ஆகியனவாகும்.

அத்துடன் அனைத்து துறைகளிலும் அல்குர்ஆன், ஸுன்னாவை சட்ட மூலாதாரமாக எடுத்து, அதன் தீர்ப்புகளைத் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளல், இறைநேசர்களை நேசித்து, அவனின் எதிரிகளைப் பகைத்தல், அவனது மார்க்கத்தின்பால் அழைத்தல், அதற்காக அறப்போர் செய்தல், அதில் ஒன்றுபடுதல், முஸ்லிம் தலைவர்களுக்கு நல்ல விடயங்களில் கட்டுப்படல், எங்கிருந்தாலும் உண்மை பேசுதல், நபி (ஸல்) அவர்கள் மனைவியர், குடும்பத்தினரை நேசித்தல், நபித்தோழர்களை நேசித்தல், அவர்களது சிறப்புகளுக்கேற்ப முன்னுரிமை வழங்குதல், அல்லாஹ்வின் திருப்தியை அவர்கள் அனைவருக்கும் வேண்டுதல், அவர்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சினைகளில் மௌனம் காத்தல்,(24) நயவஞ்சகர்கள் அவர்கள் மீது சுமத்தும் அவதூறுகளை நம்பாதிருத்தல் போன்றனவும் நபியவர்களும் ஸஹாபாக்களும் இருந்த வழியில் அடங்குகின்றன.

அந்த அவதூறுகள் மூலம் முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினை ஏற்படுத்த நாடினார்கள், அதேநேரம் சில அறிஞர்களும் வரலாற்

(24) அதாவது நபித்தோழர்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சினைகள் பற்றி விமர்சித்தோ, குற்றம் சுமத்தியோ கருத்துத் தெரிவிக்காமல் இருத்தல்.

றாசிரியர்களும் அதனைப் பார்த்து ஏமார்ந்து நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவற்றைத் தமது நூற்களில் பதிந்துள்ளனர். எனினும் இது தவறான செயலாகும்.

தாம் நபியவர்களின் குடும்பத்தினர் என வாதிடுவோர் தமது குடும்ப வழித்தோன்றலை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும். ஏனெனில் தனது தந்தையல்லாத வேறு குடும்பத்தில் தன்னை இணைத்துக் கொள்பவனை அல்லாஹ் சபித்துள்ளான். நபியின் குடும்பம் என உறுதியானால் ஓரிறைக் கொள்கை, பாவங்களை விடுதல், மற்றும் மக்கள் தமக்காக குனிந்து மரியாதை செலுத்துதல், கை, கால்களை முத்தமிடுதல் போன்றவற்றை ஏற்றுக் கொள்ளாதிருத்தல் ஆகியவற்றில் அன்னாரையும், அன்னாரின் குடும்பத்தினரையும் பின்பற்றுவதுடன், பிற சகோதர முஸ்லிம்களை விட்டும் தம்மை பிரத்தியேக ஆடைகள் மூலம் வேறுபடுத்திக் காட்டாமலிருப்பதும் அவசியமாகும். ஏனெனில் மேற்கண்ட அனைத்தும் நபிவழிக்கு முரணானதாகும், அவர்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை, அல்லாஹ்விடத்தில் கண்ணியமானவர் அதிக இறையச்சம் உள்ளவரே.

*எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அல்லாஹ் ஸலாதும், ஸலாமும் சொறிவானாக.*

## தீர்ப்புச் செய்தல், சட்டமியற்றுதல் அல்லாஹ்வுக்கு மாத்திரம் சொந்தமான உரிமையாகும், மார்க்க சட்டம் எங்கிருக்கின்றதோ அங்கு நீதி, கருணை, மேன்மை இருக்கும்.

நாம் உறுதிகொண்டு, செயல்படுத்த வேண்டிய லாஇலாஹ இல்லல்லாஹுவின் அர்த்தங்களில் தீர்ப்புச் செய்தல், சட்டமியற்றுதல் அல்லாஹ்வுக்கு மாத்திரம் சொந்தமான உரிமை என்பதும் ஒன்றாகும். எந்த விடயத்திலும் மனிதர்களில் யாருக்கும் அல்லாஹ்வின் சட்டத்திற்கு முரணாக சட்டமியற்ற முடியாது. மேலும் அல்லாஹ் இறக்கிய மார்க்கத்தைக் கொண்டல்லாமல்

தீர்ப்பளிக்கவும் முடியாது. மார்க்கத்திற்கு முரணான சட்டத் தில் திருப்தி கொள்ளவும் முடியாது. அல்லாஹ் தடுத்ததை ஆகு மாக்கவோ, ஆகுமாக்கியதைத் தடுக்கவோ யாருக்கும் முடியாது. முரண்பட வேண்டுமென்பதற்காகவோ, திருப்தியுடனோ மன முரண்டாக இவ்வாறு செய்பவன் இறை நிராகரிப்பாளனாகி விடுகின்றான். அல்லாஹ் கூறுகின்றான் : **"எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ, அவர்கள் நிச்சயமாக காஃபிர்கள்தாம்".** (அல்மாஇதா : 44).

## அல்லாஹ் அனுப்பிய இறைத்தூதர்களின் பணி

லாஇலாஹ இல்லல்லாஹு என்ற ஏகத்துவக் கலிமா, மற்றும் அதன்படி செயல்படுவதற்கு மக்களை அழைப்பதே அவர்களது பணியாகும். அல்லாஹ்வை மாத்திரம் வணங்கி, படைப்புகளை வணங்குதல், அவர்களது சட்டங்களை செயல்படுத்தல் ஆகிய வற்றை விட்டு இணையில்லாத ஒரே இறைவனான படைத்த வனை வணங்குதல், அவனது சட்டங்களை செயல்படுத்தல் ஆகியவற்றின் பால் வெளியேறிச் செல்வதே அக்கலிமாவின்படி செயல்படுவதன் அர்த்தமாகும்.

ஒருவர் கண்மூடித்தனமான பின்பற்றுதலிலிருந்து தூரமாகி, நிதானத்துடன் அல்குர்ஆனை ஆராய்ந்து ஓதினால் நாம் தெளிவு படுத்தியவை தான் சத்தியம் என்பதை முழுமையாக அறிந்து கொள்வார். அல்லாஹ் அவனுடனான மனிதனின் தொடர்பை யும், படைப்பினங்களுக்கு மத்தியிலுள்ள மனிதனின் தொடர்பை யும் வரையறுத்துள்ளான். அனைத்து விதமான வணக்கங்களை யும் யாருக்கும் செலுத்தாமல் தனக்கு மாத்திரம் செலுத்த வேண் டும் என்பதை விசுவாசியான தனது அடியானுடனான தொடர் பாக வைத்துள்ளான்.

படைப்பினங்களுக்கு மத்தியிலான தொடர்பில் நபிமார்கள், நல்லடியார்களை அல்லாஹ் நேசிப்பதால் நாமும் நேசித்து, பின் பற்றுவதை தொடர்பாக ஆக்கியுள்ளான். தனது எதிரிகளான நிராகரிப்பாளர்களை அல்லாஹ் பகைப்பதால் நாமும் பகைக்க

வேண்டுமென வைத்துள்ளான். அத்துடன் இஸ்லாத்தின்பால் அவர்களை அழைத்து, நேர்வழி பெறுவதற்காக அதனைத் தெளி வுபடுத்தல், இஸ்லாத்தையும், அல்லாஹ்வின் சட்டத்தையும் மறுக்கும் போது பூமியில் குழப்பநிலை தோன்றாமல் (அல் லாஹ்வின்) மார்க்கம் முற்றிலும் அல்லாஹ்வுக்கே ஆகும்வரை யில் அவர்களுடன் போர் புரிதல் என்பவற்றை விதித்துள்ளான். உண்மையான முஸ்லிமாக வாழ லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற இக்கலிமாவுக்கான இந்த அர்த்தங்களை அறிந்து செயல் படுத்துவது அவசியமாகும்.

## முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சி யம் கூறுவதன் அர்த்தம்

முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சியம் கூறுவதன் அர்த்தம் அன்னார் அனைத்து மனிதர்களுக்குமான தூதர், வணங்கப்படாத ஒரு அடியார், பொய்ப்பிக்கப்படாத தூதர், வழிப்பட்டு, பின்பற்றப்பட வேண்டியவர் என்பதை அறிந்து உறுதிகொள்ள வேண்டும். அவருக்குக் கட்டுப்பட்ட வர் சுவனம் செல்வார், மாறு செய்தவர் நரகம் செல்வார். அல் லாஹ் ஏவிய வணக்க வழிபாடுகளாயினும் சரி, பல துறைகளி லும் உள்ள சட்ட திட்டங்களாயினும் சரி, ஹராம், ஹலால் தீர் மானிப்பதாக இருந்தாலும் சரி இத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர் கள் வழியாகத் தான் அச்சட்ட திட்டங்களைப் பெற வேண்டு மெனவும் அறிந்து உறுதி கொள்ள வேண்டும்.

ஏனெனில் இவர்கள்தான் அல்லாஹ்விடமிருந்து அவனது மார்க்க சட்டதிட்டங்களை எத்திவைப்பவராகும். நபிவழியல் லாத வேறுமுறைகளில் கிடைத்த மார்க்க சட்டதிட்டங்களை ஒரு முஸ்லிம் ஒரு போதும் ஏற்கலாகாது. அல்லாஹ் கூறுகின் றான் : **“மேலும், [நம்] தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின் றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள் இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள் ளுங்கள்”.** (அல்ஹஷ்ர் : 7). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :

**“உமது இறைவன் மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக நியமித்து நீர் செய்யும் தீர்ப்பை தங்கள் மனதில் எத்தகைய அதிருப்தியுமின்றி முற்றிலுமாக ஏற் காதவரை அவர்கள் (உண்மை) நம்பிக்கையாளர்களாக ஆகமாட் டார்கள்”.** *(அந்நிஸா : 65).*

*மேற்கண்ட இரு வசனங்களுடைய அர்த்தம் :*

*1. தனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஏவக்கூடிய அனைத்து விடயங்களிலும் வழிப்படுமாறும், தடுக்கக்கூடிய அனைத்து விடயங்களையும் தவிர்ந்து கொள்ளுமாறும் அல்லாஹ் முதல் வசனத்தில் முஸ்லிம்களைப் பணிக்கின்றான். ஏனெனில் நபியவர்கள் அல்லாஹ்வின் ஏவலையே ஏவுகின் றார்கள், அவனது விலக்கலையே தடுக்கின்றார்கள்.*

*2. தமக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளின் போது[25] இத் தூதரை நீதிபதியாக்கி, அவர் வழங்கும் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்று, கட்டுப்படும் வரை அல்லாஹ், மற்றும் அவனது தூதர் மீது கொண்ட ஒரு மனிதனின் விசுவாசம் செல்லுபடியாக மாட் டாதென இரண்டாம் வசனத்தில் அல்லாஹ் தன் மீதே சத்திய மிட்டுக் கூறுகின்றான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “எவ ரேனும் ஒருவர் எமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை செய்வாரா யின் அது மறுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்” [26].*

## அழைப்பு

*“லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி” என்ற கலிமாவின் கருத்தை அறிந்து, இந்த சாட்சியம்தான் இஸ் லாத்தின் திறவுகோலாகவும், அக்கட்டிடத்தில் அஸ்திவாரம் எனவும் நீர் அறிந்து கொண்டால் உளத்தூய்மையுடன் “அஷ் ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன*

---

*(25) தனக்கும் இன்னொருவருக்கும் இடையில் ஏற்படும் பிரச்சினைகள்.*

*(26) ஆதாரம் : புஹாரி (2697), முஸ்லிம் (1718), இவ்வார்த்தை புஹாரியிலிருந்து பெறப்பட்டதாகும்.*

முஹம்மதர் ரஸூலுல்லாஹி" (உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சியம் கூறு கின்றேன்) என மொழிந்து, ஈருலகிலும் வெற்றி பெற்று, மரணத் தின் பின் அல்லாஹ்வின் வேதனையிலிருந்து தப்புவதற்காக அச் சாட்சியத்தின்படி நடப்பீராக.

"லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என்ற கலிமா எதிர்பார்ப்பது இஸ்லாத்தின் இதர தூண்களையும் செயல்படுத்துவதைத்தான். ஏனெனில் அல்லாஹ் இக்கடமை களை முஸ்லிம்களுக்கு விதித்திருப்பது உண்மையாகவும், உளத் தூய்மையுடனும் அவனை வணங்க வேண்டும் என்பதற்காகத் தான். தகுந்த காரணமின்றி இவற்றில் ஒன்றை யாராவது விட் டால் "லாஇலாஹ இல்லல்லாஹு" என்ற கலிமாவின் கருத்தை சீர்குலைத்து விட்டவராவார், அவரது சாட்சியம் முழுமை பெற் றதாகக் கணிக்கப்பட மாட்டாது.

## இஸ்லாத்தின் இரண்டாவது தூண் தொழுகை

இஸ்லாத்தின் இரண்டாவது தூண் தொழுகை என்பதை அறிந்து கொள்வீராக. தினமும் ஐந்து நேரங்கள் தொழ வேண்டுமென அல்லாஹ் விதித்துள்ளான். தனக்கும் முஸ்லிமுக்கும் இடையில் தொடர்பு ஏற்பட்டு, தன்னுடன் உரையாடி, பிரார்த்திக்க வேண் டும் என்பதற்காகவும், மானக்கேடான, வெறுக்கத்தக்க விடயங் களை விட்டும் அத்தொழுகை அவனைத் தடுக்க வேண்டும் என் பதற்காகவுமே அல்லாஹ் இதனை விதியாக்கியுள்ளான். எனவே இதன்மூலம் அவனுக்கு ஈருலகிலும் மகிழ்ச்சி ஏற்படும் விதத்தில் உடல், உள ரீதியான அமைதி ஏற்படுகின்றது.

தொழுகைக்காக உடல், உடை, தொழுமிடம் ஆகியன சுத்தமாக இருக்க வேண்டுமென அல்லாஹ் விதித்துள்ளான். உடலை வெளிப்படையான அசுத்தங்களிலிருந்தும், உள்ளத்தை உள்ரங்க மான அசுத்தங்களிலிருந்தும் தூய்மைப்படுத்துவதற்காக மல,

சலம் போன்ற அசுத்தங்களில் இருந்து பரிசுத்தமான நீரினால் சுத்தமாகிக் கொள்ள வேண்டும்.

தொழுகைதான் மார்க்கத்தின் பிரதான தூணாகும். இரு சாட்சி யங்களுக்குப் பின் பிரதான கடமையாகும், பருவமடைந்தது முதல் மரணம் வரை அதனைப் பேணுவது முஸ்லிமின் கடமை யாகும். தனது குடும்பத்தினருக்கு அதனை ஏவுவதுடன், ஏழு வயதை அடையும் பிள்ளைகள் பழகுவதற்காக அவர்களுக்கும் இதனை ஏவ வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : **"நிச்சயமாக குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவது முஃமின் களுக்கு விதியாக்கப் பெற்றுள்ளது".** (அந்நிஸாஃ : 103). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : **"[எனினும், அவர்கள்] இறைவனுடைய கலப்பற்ற மார்க்கத்தையே பின்பற்றி, மற்ற மார்க்கங்களைப் புறக் கணித்து, அல்லாஹ் ஒருவனையே வணங்கி, தொழுகையையும் கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்து வருமாறே தவிர, [வேறெது வும் இத்தூதர் மூலம்] அவர்களுக்கு ஏவப்படவில்லை. இதுதான் நிலையான சட்டங்களுடைய மார்க்கம்".** (அல்பய்யினாஃ : 5).

மேற்கண்ட இரு வசனங்களின் சுருக்கம் :

**1.** தொழுகை விசுவாசிகள் மீது வலியுறுத்திக் கூறப்பட்ட ஒரு கடமையாகும், அவற்றுக்கென வரையறுக்கப்பட்ட நேரங்க ளில் அவற்றை நிறைவேற்றுவதும் அவர்கள் மீது கடமையாகும் என முதல் வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

**2.** அல்லாஹ் மனிதர்களைப் படைத்த நோக்கமும், ஏவிய கட் டளையும் அவனை மாத்திரம் வணங்கி, தமது வணக்கங்களை அவனுக்கு மாத்திரம் உளத்தூய்மையுடன் செலுத்தி, தொழு கையை நிலைநாட்டி, தகுதியுடையோருக்கு ஸகாத்தையும் வழங்க வேண்டும் என்பதுதான் என இரண்டாம் வசனத்தில் கூறுகின்றான்.

ஒரு முஸ்லிமின் அனைத்து நிலைகளிலும் அவனுக்கு தொழுகை கடமையாகும். அச்சம், நோய் போன்ற சந்தர்ப்பங்களில் கூட

நின்ற நிலையிலோ, உட்கார்ந்த நிலையிலோ, சாய்ந்த நிலையிலோ இயலுமான முறையில் நிறைவேற்ற வேண்டும். கண்ணால், அல்லது மனதால் சைக்கினையாகத் தான் முடியுமென்றிருந்தால் அவ்வாறாயினும் தொழ வேண்டும். ஆணோ, பெண்ணோ தொழுகையை வேண்டுமென்றே விடுபவன் முஸ்லிமில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் : “(முஸ்லிம்களாகிய) எங்களுக்கும் (நிராகரிப்பாளர்களாகிய) அவர்களுக்கும் இடையிலுள்ள ஒப்பந்தம் தொழுகையே, அதனை விட்டவர் நிராகரித்து விடுகின்றார்”[27].

அந்த ஐந்து நேரத் தொழுகைகள் பின்வருமாறு :

பஜ்ர் தொழுகை, ளுஹர் தொழுகை, அஸர் தொழுகை, மஃரிப் தொழுகை, இஷாத் தொழுகை.

பஜ்ருத் தொழுகையின் நேரம் கிழக்குத் திசை மேகத்தில் வெளிச்சம் படர ஆரம்பித்தது முதல் சூரியன் உதிக்கும் வரையிலாகும். அதன் இறுதி நேரம் வரை தொழுகையைப் பிற்படுத்தக் கூடாது. ளுஹர் தொழுகையின் நேரம் சூரியன் உச்சிக்கு வந்து மேற்குப் பக்கமாக சற்று சாய ஆரம்பித்தது முதல் ஒவ்வொரு பொருளுடைய நிழலும் அதற்குச் சமமாக ஆகும் வரையிலாகும். அஸர் தொழுகையின் நேரம் ளுஹருடைய நேரம் முடிவடைந்ததில் இருந்து சூரியன் மஞ்சளிக்கும் வரையிலாகும். அதன் இறுதி நேரம் வரை தொழுகையைப் பிற்படுத்தக் கூடாது. சூரியன் வெண்மையாக தெளிவாக இருக்கும் போதே தொழுது விட வேண்டும். மஃரிப் தொழுகையின் நேரம் சூரியன் அஸ்தமித்ததிலிருந்து அதற்குப் பின் தெரியும் செம்மேகம் மறையும் வரையாகும். அதன் இறுதி நேரம் வரை தொழுகையைப் பிற்படுத்தக் கூடாது. இஷா தொழுகையின் நேரம் மஃரிபுடைய நேரம் முடிவடைந்ததிலிருந்து இரவின் இறுதிப்பகுதி வரையிலாகும். அதை விட பிற்போட முடியாது.

---

(27) ஆதாரம் : திர்மிதி (2621), நஸாஈ (463), அஹ்மத் (5 / 346). அஷ்ஷேக் அல்பானீ தனது ஸஹீஹுல் ஜாமிஃ நூலில் இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

மார்க்கம் அனுமதித்த, தன் நாட்டத்தை மீறிய தகுந்த காரண மேதுமின்றி ஒரு தொழுகையை அதற்குரிய நேரத்தை விட்டும் பிற்போட்டால் அவன் ஒரு பெரிய பாவத்தை செய்தவனாவான். அவன் அல்லாஹ்விடம் அதற்காக பாவமீட்சி பெறுவதுடன், மீண்டும் அத்தவறை செய்யக் கூடாது. அல்லாஹ் கூறுகின் றான்: **"இன்னும், (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடு தான். அவர்கள் தங்கள் தொழுகைகளை விட்டும் பராமுகமாக இருக்கிறார்கள்".** *(அல்மாஊன் : 4, 5).*

## தொழுகையின் சட்டங்கள்

### முதலாவது : சுத்தம்

ஒரு முஸ்லிம் தொழுகைக்குள் நுழைவதற்கு முன்னர் சுத்தமாவது அவசியமாகும். முதலில் முன், பின் துவாரங்களிலிருந்து ஏதா வது வெளிப்பட்டிருந்தால் அதனை சுத்தம் செய்து விட்டு, பின் னர் வுழூச் செய்து கொள்ள வேண்டும்.

வுழூ : உள்ளத்தால் சுத்தமாவதை எண்ண வேண்டும். நாவினால் நிய்யத்தை மொழியக் கூடாது, ஏனெனில் அதனை அல்லாஹ் அறிந்துதான் இருக்கின்றான். மேலும் நபி (ஸல்) அவர்களும் அவ்வாறு வாயினால் மொழியவில்லை. பின் "பிஸ்மில்லாஹ்" என்று கூறி இரு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவி விட்டு வாய் கொப்பளிப்பதுடன், மூக்கினுள் நீர் செலுத்தி, சிந்தி விட வேண்டும். முகம் முழுதையும் கழுவி விட்டு, பின் இரு கைகளை யும் வலதிலிருந்து ஆரம்பித்து முன்னங்கை, முழங்கை உட்பட கழுவ வேண்டும். பின் தனது இரு கைகளாலும் தலை முழுதை யும் நீரினால் தடவிவிட்டு, (அதே நீரினால்) இரு காதுகளையும் தடவ வேண்டும். பின் இரு கால்களையும் வலதிலிருந்து ஆரம் பித்து கரண்டைக் கால் உட்பட கழுவ வேண்டும்.

வுழூச் செய்த பின் மல,சலமோ, காற்றோ வெளிப்பட்டால், அல் லது ஆழ்ந்த உறக்கம், மயக்கம் காரணமாக சுய நினைவை இழந் தால் தொழும் போது மீண்டும் வுழூச் செய்ய வேண்டும்.

ஆணோ, பெண்ணோ உறக்கத்திலும் சரி இச்சையுடன் விந்து வெளிப்பட்டு குளிப்புக் கடமையானவராக இருந்தால் குளித் துக் கொள்ள வேண்டும். மாதவிடாய், பிரசவ இரத்தம் போன் றவற்றில் இருந்து சுத்தமான பெண் குளிப்பது அவசியமாகும். ஏனெனில் மாதவிடாய், பிரசவ இரத்தம் ஏற்பட்ட பெண்களு டைய தொழுகை செல்லுபடியாக மாட்டாது, சுத்தமாகும் வரை அவர்களுக்கு அது கடமையாகவும் மாட்டாது. அவர்க ளுக்கு அல்லாஹ் இலகுபடுத்தி, அக்காலத்தில் விடுபட்ட தொழுகைகளை மீட்டுவதைத் தளர்த்தியுள்ளான். ஏனைய நிலை களில் ஆண்களைப் போன்றே விடுபட்ட தொழுகைகளை மீட் டித் தொழுவது அவசியமாகும்.

சுத்தமான நீர் கிடைக்காவிட்டால், அல்லது பயன்படுத்துவ தால் தீங்கு ஏற்படுமென்றிருந்தால் மண்ணினால் தயம்மும் செய்ய வேண்டும். அதன் முறையாவது : சுத்தமாவதை மனதால் நினைத்து, பிஸ்மில்லாஹ் என்று கூறி, இரு கைகளையும் மண் ணில் ஒரு தடவை அடித்து, அதனால் முகத்தைத் தடவ வேண் டும். பின் வலது கை மணிக்கட்டு வரை இடது கையாலும், இடது கை மணிக்கட்டு வரை வலது கையாலும் தடவிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் சுத்தமடைந்தவராக ஆகி விடு வார். மாதவிடாய், பிரசவ இரத்தம் ஏற்பட்டு சுத்தமான பெண் கள், குளிப்புக் கடமையானவர், வுழூச் செய்ய விரும்புபவர் அனைவரும் நீர் கிடைக்காத போது அல்லது பயன்படுத்துவ தில் தடங்கள் உள்ள போது இந்த தயம்முமை செய்து கொள் ளலாம்.

**இரண்டாவது : தொழுகை முறை**

*1. பஜ்ர் தொழுகை :*

மக்காவின் மஸ்ஜிதுல் ஹராமிலுள்ள புனித கஃபாவை முன் னோக்கி இரு ரக்அத்கள் தொழவேண்டும். பஜ்ருடைய தொழு கையை நிறைவேற்றுவதாக வாயினால் மொழியாமல் மனதால் எண்ணிக் கொண்டு “அல்லாஹு அக்பர்” என ஆரம்பத் தக்பீர்

கூற வேண்டும். பின்பு "ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலாஇலாஹ கைருக" (உயர்வடைந்து விட்ட உனது மகத்துவம், இன்னும் பாக்கியமிக்க (பரகத்துடைய) உனது பெயர், மேலும் மகத்தான உனது புகழ் (ஆகியவைகளைக்) கொண்டு (சகல குறைகளில் இருந்தும்) உன்னை நான் பரிசுத்தமாக்குகிறேன் (துதிக்கிறேன்) மேலும் நீயின்றி (வணக்கத்திற்குரியவன் வேறு) இறைவனில்லை) என்ற ஆரம்ப துஆவை ஓத வேண்டும். "அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம்" (எடுத்தெறியப்பட்ட ஷைத்தானின் தீங்குகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.) என்று கூறிவிட்டு ஸூரா பாதிஹா ஓத வேண்டும்.

அது பின்வருமாறு : பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் (அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்(துவங்குகிறேன்) அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் (அகிலத்தார் அனைவரையும் படைத்து பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்). அர்ரஹ்மானிர் ரஹீம். (அவன் அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாவான்) மாலிகி யவ்மித்தீன் (தீர்ப்பு நாளின் அதிபதி (யும் அவனே).) இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன் (நாங்கள் உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம்.) இஹ்தினஸ் ஸிராதல் முஸ்தகீம். (நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக!) ஸிராதல்லதீன அன்அம்த அலைஹிம் கைரில் மஃழூபி அலைஹிம் வலழ் ழால்லீன். (அவ்வழி) எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்கள் (சென்ற) வழி. (உன்) கோபத்திற்குள்ளானவர்களோ வழிதவறியவர்களோ சென்ற வழியல்ல.) (அல்பாதிஹா : 1 - 7).

அல்குர்ஆனை முடியுமான வரை அரபு மொழியில்தான் ஓத வேண்டும்.(28) பின் அல்லாஹு அக்பர் எனக் கூறி ருகூஃ செய்ய வேண்டும். தலை மற்றும் முதுகைத் தாழ்த்தி, இரு உள்ளங்கை களையும் முழங்காலில் வைத்து "ஸுப்ஹான ரப்பியல் அழீம்" (மகத்தான என்னுடைய இறைவனைத் துதிக்கிறேன்). என்று கூற வேண்டும். பின்பு "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹு" என்று கூறி நடுநிலைக்கு வர வேண்டும். பின் நடுநிலையில் "ரப்பனா வலகல்ஹம்து" என்று கூற வேண்டும். அதன் பின்னர் அல்லாஹு அக்பர் என்று கூறி மூக்குடன் நெற்றி, இரு கைகள், இரு முட்டுக்கால்கள், இரு கால்கள் ஆகிய ஏழு உறுப்புக்களும் தரையில் படுமாறு குனிந்து சிரம் பணிய (ஸுஜூது செய்ய) வேண்டும்.

அதில் "ஸுப்ஹான ரப்பியல் அஃலா" (உயர்வான என் இறைவன் பரிசுத்தமானவன்). பின் அல்லாஹு அக்பர் என்று கூறி நடு அமர்வில் அமர்ந்து, "ரப்பிஃபிர்லீ" (இறைவா! என்னை மன் னித்து விடுவாயாக!) என்று கூற வேண்டும். பின்பு இரண்டாம் ஸுஜூது செய்து அதிலும் ஸுப்ஹான ரப்பியல் அஃலா எனக் கூற வேண்டும். பின் இரண்டாம் ரக்அத்திற்காக அல்லாஹு அக்பர் எனக் கூறி எழ வேண்டும். முதலாம் ரக்அத்தைப் போன்றே ஸூரா பாதிஹா ஓதி, ருகூஃ, நடு நிலை, இரு ஸுஜூது கள், அவற்றுக்கு இடையிலான அமர்வு அனைத்தையும் ஒழுங்கு முறைப்படி அவற்றுக்குரிய ஓதல்களுடன் நிறைவேற்ற வேண் டும்.

பின்பு உட்கார்ந்து "அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது அஸ்ஸலாமு அலைக அய்யுஹந் நபிய்யு வரஹ்ம

(28) ஏனெனில் அரபு அல்லாத மொழியில் ஓதினால் அது குர்ஆனாக மாற மாட் டாது, இதனால்தான் அல்குர்ஆனின் வார்த்தைகள் மொழிபெயர்க்கப் படுவ தில்லை, அதன் கருத்துக்கள்தான் மொழிபெயர்க்கப் படுகின்றன. ஏனெனில் அதன் எழுத்துக்கள், வார்த்தைகள் மொழிபெயர்க்கப் பட்டால் அதன் அணியிலக்கணம், அற்புதத் தன்மை என்பன போய்விடும், அதன் சில எழுத்துக்கள் வீழ்ந்திடும், அப் போது அரபு மொழிக் குர்ஆனாக அது ஆகிவிடமாட்டாது.

*துல்லாஹி வபரகாதுஹு. அஸ்ஸலாமு அலைனா வஅலா இபா தில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல் லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸு லுஹு, அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின் கமா ஸல்லைத அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத். வபாரிக் அலா முஹம்ம தின் வஅலாஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலாஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத்",*

*(காணிக்கைகளும் வணக்கங்களும் பாராட்டுக்களும் அல்லாஹ் வுக்கே உரியன. நபியே உங்களின் மீது ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும் பரகத்தும் ஏற்படட்டுமாக! எங்களின் மீதும் அல் லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டா கட்டும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரு மில்லை என்று உறுதியாக நம்புகிறேன். மேலும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாக இருக்கி றார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.*

*இறைவா! இப்ராஹீம் அவர்களின் மீதும் இப்ராஹீம் அவர்க ளின் குடும்பத்தார் மீதும் நீ கருணை புரிந்ததைப் போல் முஹம் மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் கருணை புரிந் திடு. நீயே புகழுக்குரியவனும், கண்ணியமிக்கவனும் ஆவாய். இறைவா! இப்ராஹீம் அவர்களின் மீதும் இப்ராஹீம் அவர்க ளின் குடும்பத்தார் மீதும் நீ உன் அருள் வளத்தைப் பொழிந் தைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிந்திடு, நீயே புகழுக்குரியவ னும், கண்ணியமிக்கவனும் ஆவாய்) என்று அத்தஹிய்யாத் ஓத வேண்டும். பின்பு வலது புறமும் இடது புறமும் திரும்பி அஸ்ஸ லாமு அலைகும் வரஹ்மதுல்லாஹ் என ஸலாம் கூற வேண்டும். இதன் மூலம் பஜ்ரு தொழுகை நிறைவடைந்து விட்டது.*

*2. ளுஹர், அஸர், இஷாத் தொழுகைகள் :*

*இம்மூன்று தொழுகைகளும் நான்கு ரக்அத்களைக் கொண்ட தாகும். முதலிரு ரக்அத்களையும் பஜ்ரு தொழுகை போன்று தொழ வேண்டும். எனினும் அத்தஹிய்யாதில் உட்கார்ந்து அதனை ஓதி, ஸலவாத்தும் கூறியதன் பின் ஸலாம் கொடுக்கா மல் எழுந்து மீதி இரு ரக்அத்களையும் முன்னர் போன்றே தொழ வேண்டும். பின்னர் இரண்டாவது தடவையாக அத்தஹிய்யா திற்கு உட்கார்ந்து, அதனை ஓதி, ஸலவாத்தும் கூறியதன் பின் பஜ்ரைப் போன்றே வலதும் இடதும் திரும்பி ஸலாம் கூற வேண்டும்.*

*3. மஃரிப் தொழுகை :*

*இது மூன்று ரக்அத்களைக் கொண்ட தொழுகையாகும். முன் னர் கூறியதைப் போன்று முதலிரு ரக்அத்களையும் தொழுது, உட்கார்ந்து அவற்றில் ஓதியவற்றை ஓத வேண்டும். எனினும் ஸலாம் கூறாமல் மூன்றாம் ரக்அத்திற்காக எழுந்து முன்னைய ரக்அத்களைப் போன்றே செய்ய வேண்டும். இரண்டாம் ஸுஜூ திற்குப் பின்னர் அத்தஹிய்யாதிற்காக உட்கார்ந்து ஏனைய தொழுகைகளைப் போன்றே ஓதி, வலதும் இடதும் திரும்பி ஸலாம் கூற வேண்டும். ருகூஃ, ஸுஜூதில் ஓத வேண்டியதை பல விடுத்தங்கள் ஓதுவது சிறந்தது.*

*ஆண்கள் இவ்ஐந்து தொழுகைகளையும் பள்ளியில் கூட்டாக நிறைவேற்றுவது கடமையாகும். அல்குர்ஆனைத் திறமையாக ஓதக்கூடிய, தொழுகையைப் பற்றி மிக அறிந்தவர், மார்க்கத்தில் நல்லவர்களாகக் கருதப்படும் ஒருவர் முன்நின்று தொழுகையை நடத்த வேண்டும். பஜ்ரு தொழுகை, மஃரிப், இஷாத் தொழுகை களில் முதல் இரண்டு ரக்ஆத்களிலும் ருகூஃவிற்கு முன்னரான நிலையில் இமாம் சத்தமிட்டு ஓத வேண்டும். பின்னாலுள்ள வர்கள் அதனை செவிமடுக்க வேண்டும்.*

*பெண்கள் தமது வீடுகளில் மறைவாகத் தொழ வேண்டும். முகத்தைத் தவிர கை, கால்கள் உட்பட அனைத்தையும் அவள்*

மறைக்க வேண்டும். அவையனைத்தும் அவள் மறைக்க வேண் டிய பகுதிகளாகும். முகத்தைக் கூட அந்நிய ஆண்கள் முன்னி லையில் மறைக்கும்படி ஏவப்படுகிறாள். ஏனெனில் அவளின் அடையாளமே முகம் என்பதால் அதனை வைத்து அத்துமீறல் களுக்கு இலக்காகலாம். ஒரு பெண் பள்ளியில் தொழ விரும்பி னால் முறையாக மறைத்துக் கொண்டு, நறுமணம் பூசாமல் வந்து அவளால் ஆண்களோ, ஆண்களால் அவளோ ஈர்க்கப் படாமலிருக்கும் வகையில் ஆண்களுக்கு பின்னால் நின்றே தொழ வேண்டும்.

உள்ளச்சத்துடனும், பணிவுடனும், ஒருமுக சிந்தனையுடனும் அல்லாஹ்வுக்காகத் தொழுவது அவசியமாகும், நிலை, ருகூஃ, ஸுஜூதுகளில் வேகமின்றி, வீண் செயற்பாடுகளில் ஈடுபடாமல் நிதானமாகத் தொழ வேண்டும், பார்வையை வானத்தின் பக்கம் உயர்த்தவோ, அல்குர்ஆன், சந்தர்ப்ப துஆக்களின்றி வேறு பேச் சுக்களில் ஈடுபடவோ ஆகாது.[29] ஏனெனில் அல்லாஹ் அவனை நினைவுகூர்வதற்காகவே தொழும்படி ஏவியுள்ளான்.

வெள்ளிக்கிழமை தினங்களில் முஸ்லிம்கள் ஜும்ஆத் தொழுகை இரு ரக்அத்கள் தொழுவர், பஜ்ர் தொழுகை போன்று இமாம் அதில் சத்தமிட்டு ஓதுவார். அத்தொழுகைக்கு முன்னர் முஸ்லிம் களுக்கு மார்க்க விடயங்களைக் கற்பித்து, நினைவூட்டி இமாம் இரு பிரசங்கங்கள் நிகழ்த்துவார். ஆண்கள் இமாமுடன் சேர்ந்து இந்நிகழ்வில் கலந்து கொள்வது அவசியமாகும் இதுதான் வெள் ளிக்கிழமையின் ளுஹர் தொழுகை. (இதன் நேரம் வெள்ளிக் கிழமை ளுஹர் தொழுகையின் நேரமாகும்).

(29) யாருக்காவது குறிப்புணர்த்த, அல்லது பதிலளிக்க விரும்பினால் "ஸுப்ஹா னல்லாஹ்" என்று மாத்திரம்தான் கூற வேண்டும். இமாம் ஏதாவது தவறிழைத்து கூடுதல், குறைவாகச் செய்யும் போது அவருக்கு உணர்த்தும் விதத்தில் பின்பற்றித் தொழபவரும், தன்னை அழைப்பவருக்குத் தான் தொழுகையிலுள்ளதை உணர்த்து வதற்கும் இவ்வாறு கூறலாம். பெண் கைதட்டுவதன் மூலமே உணர்த்த வேண்டும். அவளுடைய குரலால் ஈர்க்கப்படலாம் என்பதால் சத்தமிட்டு பேச முடியாது.

## இஸ்லாத்தின் மூன்றாவது தூண் ஸகாத்

ஸகாத் விதியாவதற்காக நிர்ணயிக்கப்பட்ட அளவு[30] சொத்துக்கள் ஒரு முஸ்லிமிடம் இருந்தால் அதற்குரிய ஸகாதை வருடா வருடம் வழங்க வேண்டுமென அல்லாஹ் பணித்துள்ளான். ஏழை, எளியவர்கள் போன்ற அல்குர்ஆனில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளவாறு ஸகாத் பெறத் தகுதியானவர்களுக்கு அதனை வழங்க வேண்டும்.

தங்கத்தில் இருபது தீனார்கள் பெறுமதி (சுமார் 85 கிராம் தங்கம்), வெள்ளியில் இருநூறு திர்ஹங்கள் பெறுமதி (595 கிராம் வெள்ளி), அல்லது அதற்கு சமனான நாணய நோட்டுக்கள், வியாபார பொருட்கள் ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்ட அந்த அளவை அடைந்து ஒரு வருடம் பூர்த்தியானால் அவற்றின் உரிமையாளர் அதற்குரிய ஸகாதை வழங்க வேண்டும். பூமியில் விளையும் தானியங்கள் பழங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவு 300 ஸாவு (சுமார் 600 கிலோ கிராம்) ஆகும்.

விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் பெறுமதிக்கும், கூலிக்காக மாத்திரம் வைக்கப்பட்டுள்ளவற்றில் அவற்றின் கூலிக்கும் ஸகாத் வழங்க வேண்டும். தங்கம், வெள்ளி, நாணயங்கள், வியாபார பொருட்களில் வருடா வருடம் 2.5 % வீதம் கொடுக்க வேண்டும். தானியங்கள், பழங்கள் போன்ற விளைச்சல்களில் சிரமமின்றி ஆற்று நீர், மழை நீர் மூலம் நீர் பாய்ச்சினால் 10% வீதமும், இயந்திரங்கள் போன்றவற்றால் செலவு செய்து நீர் பாய்ச்சினால் 5% வீதமும் கொடுக்க வேண்டும்.

தானியங்கள், பழங்களில் ஸகாத் வழங்க வேண்டிய காலம் அறுவடையின் போதாகும். வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் அறுவடை செய்தால் ஒவ்வொரு தடவையும் ஸகாத்

(30) நிர்ணயிக்கப்பட்ட அளவு (நிஸாப்) என்பது குறிப்பிட்ட ஒரு தொகை பணம் ஒருவரிடம் அடையும் போது அப்பணத்தில் ஸகாத் கடமையாகின்றது. அதற்கென வரையறுக்கப்பட்ட அளவை அரபு மொழியில் நிஸாப் எனப்படுகின்றது.

வழங்க வேண்டும். ஒட்டகம், மாடு, ஆடுகளிலும் ஸகாத் விதியாகின்றது. அவற்றின் அளவுகள் சட்ட நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அல்லாஹ் கூறுகின்றான் : "**[எனினும், அவர்கள்] இறைவனுடைய கலப்பற்ற மார்க்கத்தையே பின்பற்றி, மற்ற மார்க்கங்களைப் புறக்கணித்து, அல்லாஹ் ஒருவனையே வணங்கி, தொழுகையையும் கடைப்பிடித்து, ஸகாத்தும் கொடுத்து வருமாறே தவிர, [வேறெதுவும் இத்தூதர் மூலம்] அவர்களுக்கு ஏவப்படவில்லை. இதுதான் நிலையான சட்டங்களுடைய மார்க்கம்**". (அல் பய்யினாஃ : 5). ஸகாத் வழங்குவதில் ஏழைகளை மகிழ்வித்தல், அவர்களது தேவைகளை நிவர்த்தி செய்தல், அவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் இடையிலான நேசத்தைப் பலப்படுத்துதல் போன்ற பல பயன்பாடுகள் உள்ளன.

முஸ்லிம்களிடையே சமூகப் பொறுப்பு மற்றும் நிதி ஒத்துழைப்பு விடயங்களில் இஸ்லாமிய மார்க்கம் ஸகாதுடன் மாத்திரம் நிற்கவில்லை, அதையும் தாண்டி வறுமையின் போது ஏழைகளுக்கு உதவுவதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான், அயல் வீட்டார் பசித்திருக்கும் போது ஒரு முஸ்லிம் வயிறார உண்பதைத் தடுத்துள்ளான். பெருநாள் தினத்தில் வழங்க வேண்டிய ஸகாதுல் பித்ர் தர்மத்தை விதியாக்கியுள்ளான். ஊரில் பயன்படுத்தப் படும் பிரதான உணவிலிருந்து தலா ஒரு ஸாவு அளவு (சுமார் 3 கிலோ கிராம்) வீட்டிலுள்ள சிறார்கள், பணியாட்கள் உட்பட தனது செலவுக்குக் கீழுள்ள அனைவருக்காகவும் குடும்பத்தலைவர் கொடுக்க வேண்டும்.

சத்தியத்தை முறித்ததற்குப் பரிகாரமாக உணவளிப்பதை கடமையாக்கியுள்ளான்.[31] அனுமதிக்கப்பட்ட நேர்ச்சைகளை நிறைவேற்றுமாறு முஸ்லிம்களுக்கு ஏவியுள்ளான். உபரியான தர்மத்தைத் தூண்டியுள்ளான். நல்ல விடயங்களுக்காக செலவு செய்ப

---

(31) ஒருவர் சத்தியம் செய்து விட்டு அதனை முறித்தால் அதற்கான பரிகாரமாக ஓர் அடிமையை உரிமையிடல், பத்து ஏழைகளுக்கு உணவளித்தல், அவர்களுக்கு உடை அளித்தல் ஆகிய மூன்றில் ஒன்றை நிறைவேற்ற வேண்டும். முடியாவிட்டால் மூன்று நாட்கள் நோன்பு நோற்க வேண்டும்.

வர்களுக்கு பாரிய கூலிகளை வாக்களித்துள்ளான். அவர்களுடைய கூலி பத்து முதல் எழுநூறு வரை பன்மடங்காக்கப்படும் என வாக்களித்துள்ளான்.

## இஸ்லாத்தின் நான்காவது தூண் (நோன்பு)

ரமழான் மாதம் நோன்பு நோற்றல், ஹிஜ்ரி நாட்காட்டியில் ஒன்பதாவது மாதமே ரமழான் மாதமாகும்.

நோன்பு நோற்கும் முறை :

நோன்பு நோற்பதாக பஜ்ர் உதயமாவதற்கு முன்னால் நிய்யத் வைத்து விட்டு, உண்ணல், பருகல், உடலுறவு கொள்ளல் ஆகியவற்றிலிருந்து அத்தினம் சூரியன் மறையும் வரை தவிர்ந்து கொள்ள வேண்டும். பின்பு நோன்பு திறக்க வேண்டும். அல்லாஹ்வை வணங்கும் முகமாகவும், அவனது திருப்தியை நாடியும் ரமழான் மாதம் முழுவதும் தினமும் இவ்வாறு நோன்பு நோற்க வேண்டும்.

நோன்பில் எண்ணிலடங்காத பயன்கள் உள்ளன. அவற்றில் மிகப் பிரதானமானவை :

அது அல்லாஹ்வை வணங்கி, அவனது கட்டளையை எடுத்து நடப்பதாகும். அவனுக்காகவே ஓர் அடியான் தனது உணவு, பானங்கள், இச்சையை விட்டுவிடுகின்றான். இந்த நோன்பு இறையச்சம் ஏற்படுவதற்குரிய பிரதான காரணிகளில் ஒன்றாகும்.

நோன்பினால் கிடைக்கும் ஆரோக்கிய, பொருளாதார, சமூக பயன்பாடுகள் ஏராளமுள்ளன. சரியான கொள்கையுடனும், ஈமானுடனும் நோன்பு நோற்பவர்கள் தான் அதனை அடைந்து கொள்வார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : **“நம்பிக்கையாளர்களே! நீங்கள் இறையச்சமுடையவர்களாக ஆகவதற்காக உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது குறிப்பிட்ட நாள்களில்தான் (நோன்பு நோற்பது கடமையாகும்.) ஆயினும்**

(அந்நாள்களில்) உங்களில் யாராகிலும் நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால் (அவர் நோன்பு நோற்க வேண்டியதில்லை. அதை ரமழான் அல்லாத) மற்ற நாள்களில் கணக்கி(ட்டு நோற்று வி)டவும். தவிர, (ஏதாவது ஒரு காரணத்தினால்) நோன்பு நோற்க சிரமப்படுபவர்கள் அதற்குப் பரிகாரமாக ஓர் ஏழைக்கு உணவளிப்பது கடமையாகும். எவரேனும் நன்மையை நாடி (பரிகாரத்திற்குரிய அளவைவிட அதிகமாகத்) தானம் செய்தால் அது அவருக்கே நன்மை. ஆயினும், (பரிகாரமாகத் தானம் கொடுப்பதை விட நோன்பு நோற்பதே உங்களுக்கு சிறந்தது (என்பதை தெரிந்து கொள்வீர்கள்).

ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய)து என்றால் அதில் தான் மனிதர்களுக்கு நேர்வழி காட்டும் திருகுர்ஆன் (என்னும் வேதம்) இறக்கப்பட்டது. அது (நன்மை, தீமையைப்) பிரித்தறிவித்து நேரான வழியைத் தெளிவாக்கக்கூடிய வசனங்களை உடையதாகவும் இருக்கிறது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கவும். ஆனால், (அக்காலத்தில் உங்களில்) யாராவது நோயாளியாகவோ அல்லது பிரயாணத்திலோ இருந்தால் (ரமழான் அல்லாத) மற்ற நாள்களில் (விட்டுப் போன நாள்களின் நோன்பைக்) கணக்கிட்டு (நோற்று) விடவும்.

அல்லாஹ் உங்களுக்கு இலகுவா(ன கட்டளையைக் கொடு)க்க விரும்புகிறானே தவிர சிரமத்தை(க் கொடுக்க) விரும்பவில்லை. மேலும், (தவறிய நாள்களைக் கணக்கிடும்படி கட்டளையிட்டதெல்லாம், உங்கள்மீது கடமையாக உள்ள ஒரு மாத நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் முழுமை செய்வதற்காகவும் (அவ்வாறே) அல்லாஹ் உங்களை நேரான பாதையில் நடத்தியதற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும் (நோய், பிரயாணம் போன்ற சந்தர்ப்பங்களில் நோன்பு நோற்காதிருக்க உங்களுக்கு அனுமதி வழங்கியதற்காக) நீங்கள் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துவதற்காகவுமே ஆகும்!". *(அல்பகரா : 183 - 185).*

அல்லாஹ் அல்குர்ஆனிலும், நபி (ஸல்) அவர்கள் ஹதீஸ்களி லும் தெளிவு படுத்திய நோன்பின் சில சட்டங்கள்

**1.** நோயாளி மற்றும் பயணி நோன்பை விட்டுவிட்டு, அந்த நாட்களை ரமழானுக்குப் பின்னால் நோற்க வேண்டும். அதே போன்று மாதவிடாய், மற்றும் பிரசவ இரத்தம் ஏற்பட்ட பெண் கள் நோன்பு நோற்றலாகாது, அத்தினங்களில் அவர்கள் நோன்பை விட்டுவிட்டு, பிறகு நோற்க வேண்டும்.

**2.** கர்ப்பிணி பெண் மற்றும் பாலூட்டும் அன்னை ஆகிய இருவரும் நோன்பு நோற்பதால் தமக்கோ தமது குழந்தைக ளுக்கோ பாதிப்பு ஏற்படுமென அஞ்சினால் நோன்பை விட்டு விட்டு ரமழானுக்குப் பிறகு மீள நோற்க வேண்டும்.

**3.** நோன்பாளி மறதியாக உண்டால், பருகினால் அவருடைய நோன்பு செல்லுபடியாகும். ஏனெனில் மறதி, தவறு, நிர்ப்பந்தம் ஆகியவற்றை முஹம்மத் (ஸல்) அவர்களது சமூகத்திற்காக அல் லாஹ் மன்னித்து விட்டான். எனினும் நினைவு வந்தவுடன் வாயிலிருப்பதை மெல்லாமல் உமிழ்ந்து விட வேண்டும்.

## இஸ்லாத்தின் ஐந்தாவது தூண் ஹஜ்

இது வாழ்வில் ஒரு தடவை அல்லாஹ்வின் மக்காவிலுள்ள புனித ஆலயத்தை நாடிச் சென்று தரிசிப்பதாகும், மேலதிகமாக செய்வது ஸுன்னத்தாகும். ஹஜ் கிரியையில் எண்ணிலடங்கா பயன்கள் உள்ளன :

முதலாவது : இது ஆன்மா, உடல், பொருள் அனைத்தாலும் அல்லாஹ்வை வணங்கும் ஒரு கிரியையாகும்.

இரண்டாவது : இதில் முஸ்லிம் சமூக ஒன்று கூடல் உள்ளது. உலகின் நாலாபகுதிகளில் இருந்தும் ஒரே இடத்தில், ஒரே வித ஆடையில் சந்தித்துக் கொள்கின்றனர், ஒரே நேரத்தில் ஒரே இறைவனை வழிபடுகின்றனர், அங்கு தலைவருக்கும் கீழ்ப்படிப வருக்கும் இடையில், செல்வந்தவனுக்கும் ஏழைக்கும் இடை யில், வெள்ளையருக்கும் கறுப்பருக்கும் இடையில் எவ்வித

வேறுபாடுமில்லை. அனைவரும் அல்லாஹ்வுடைய படைப்பினங்கள், அடியார்கள். எனவே முஸ்லிம்களுக்கிடையில் அறிமுகம், உதவி ஒத்தாசை ஏற்படுகின்றன. மறுமையில் விசாரணைக்காக இது போன்று ஒரே இடத்தில் அனைவரும் எழுப்பப்படுவதை நினைவுகூர்கின்றனர். எனவே அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதன் மூலம் மரணத்திற்குப் பின்னரான வாழ்க்கைக்குத் தயாராகின்றனர்.

முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் அனைத்துத் தொழுகைகளிலும் முன்னோக்க வேண்டுமென அல்லாஹ் பணித்துள்ள கிப்லாவான புனித கஃபாவை வலம் வருதல், மக்காவில் அரபா, முஸ்தலிபா, மினா போன்ற குறிப்பிட்ட இடங்களில் தரித்தல் போன்ற அனைத்தினதும் நோக்கம் அவ்விடங்களில் அல்லாஹ் ஏவிய பிரகாரம் அவனை வணங்குவதாகும்.

புனித கஃபாவோ, அந்த இடங்களோ, ஏனைய எந்தப் படைப்பினங்களோ வணங்கப்பட முடியாது, அவற்றால் எந்தவொரு நலவோ, கெடுதியோ செய்ய முடியாது. வணக்கங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கு மாத்திரம்தான் செலுத்தப்பட வேண்டும். அந்த அல்லாஹ் மாத்திரம்தான் நலவு செய்பவன், கெடுதியும் அவனது ஏற்பாட்டில்தான் நிகழ்கின்றது. அல்லாஹ் அந்த மாளிகையை ஹஜ் செய்ய ஏவியிருக்காவிட்டால் முஸ்லிமுக்கு அங்கு ஹஜ் செய்ய முடியாது. ஏனெனில் வணக்கமானது சுயபுத்தி, மன விருப்பத்தின் படி உருவாவதில்லை, மாறாக அல்குர்ஆன், ஸுன்னாவின் மூலம் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்பவே உருவாகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : **“மனிதர்களில் அதற்குச் சென்று வர சக்திபெற்றவர்கள் மீது அல்லாஹ்வுக்காக அவ்வீட்டை ஹஜ் செய்வது கடமையாகும். எவர் நிராகரிக்கின்றாரோ நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவையற்றவன்”.** (ஆல இம்ரான் : **97**).[32]

---

(32) அறிவீனர்கள் இறைநேசர்களின் மண்ணறைகள் மற்றும் தர்காக்களை நாடிச் செல்வதானது வழிகேடாகவும், அல்லாஹ் மற்றும் இறைத்தூதர் (ஸல்) ஆகியோ

ஹஜ்ஜுடன் சேர்த்தோ, வேறு நேரங்களில் தனியாகவோ வாழ் நாளில் ஒரு முறை உம்ராச் செய்வதும் கடமையாகும். மதீனா வில் நபி (ஸல்) அவர்களின் மண்ணறையைத் தரிசிப்பது ஹஜ்ஜு டனோ, வேறு எந்த நேரங்களிலோ கடமையானதல்ல. அது ஸுன்னத்தான ஒன்றாகும், செய்தவருக்கு நன்மை கிடைக்கும், விட்டவருக்கு பாவமேதுமில்லை. "யார் ஹஜ் செய்து, என் னைத் தரிசிக்கவில்லையோ அவர் என்னை வெறுத்தவராவார்" என்ற நபிமொழி ஆதாரபூர்வமானதல்ல, மாறாக நபியவர்களின் மீது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும்.[33]

மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட தரிசனம் பள்ளிவாயிலுக்குத் தான், அங்கு சென்று அதன் காணிக்கைத் தொழுகையை நிறை வேற்றியதன் பின்னர் நபியவர்களின் மண்ணறையைத் தரிசித்து அமைதியாக ஒழுக்கத்துடன் குரலைத் தாழ்த்தி நபியே உம்மீது ஸலாம் நிலவட்டுமாக என ஸலாம் கூற வேண்டும். அவர்களி டம் எத்தேவையையும் கேட்கக் கூடாது. மாறாக அன்னார் தனது சமூகத்திற்கு ஏவி, தோழர்களும் அமுல்படுத்தியதைப் போன்று உடனடியாகத் திரும்பி விட வேண்டும்.

தொழுகையில் நிற்பது போன்று உள்ளச்சத்துடன் நபியவர்க ளின் மண்ணறைக்கருகில் நின்று தமது தேவைகளைக் கேட் போர், பாதுகாப்புத் தேடுவோர், அல்லாஹ்விடத்தில் பிரார்த் திக்கும் போது அவரது பொருட்டால் கேட்போர் இணைவைப்

---

ரின் கட்டளைக்கு மாறு செய்வதாகவும் உள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று பள்ளி களைத் தவிர (அதிக நன்மையை எதிர்பார்த்து)ப் பயணம் மேற்கொள்ளக் கூடாது". (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி 1189, முஸ்லிம் 1397).

(33) இது போன்றுதான் "எனது பதவியின் பொருட்டால் உதவி தேடுங்கள், ஏனெ னில் அல்லாஹ்விடத்தில் எனது பதவி விசாலமானது", மற்றும் "ஒரு கல்லில் நல் லெண்ணம் வைப்பவருக்கு அது பயனளிக்கும்" போன்ற செய்திகள் அனைத்தும் ஆதாரபூர்வமற்ற இட்டுக்கட்டப்பட்ட செய்திகளாகும், ஏற்றுக் கொள்ளப்படும் ஹதீஸ் தொகுப்புகளிலும் அவற்றைக் காணக்கிடைக்காது. அறிவீனமாக இணை வைப்பு, பித்அத்களின் பக்கம் அழைக்கும் வழிகெடுப்போரின் நூல்களிலேயே இது போன்ற செய்திகள் இடம்பெறுகின்றன.

பவர்களாகும். நபியவர்களோ அத்தகையவர்களை விட்டும் விலகியவர்களாகும். நபியவர்களுடனோ, பிறருடனோ இவ்வாறு நடந்து கொள்வதை விட்டும் எச்சரிக்கையாக இருக்கட்டும். பின்பு அன்னாரது இரு தோழர்களான அபூ பக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரின் கப்ருகளையும் தரிசிக்க வேண்டும். பின்பு பகீஃ மண்ணறை, உஹத் போரின் வீரத் தியாகிகளது மண்ணறை போன்றவற்றையும் பொதுவாக முஸ்லிம்களின் கப்ருகளைத் தரிசிக்க அனுமதிக்கப்பட்ட முறையில் தரிசிப்பது ஸுன்னத்தாகும். அவர்களுக்கு ஸலாம் கூறி, அவர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்து, மரணத்தை நினைவுகூர்ந்து விட்டுத் திரும்புவதே அந்த முறையாகும்.

ஹஜ் மற்றும் உம்ரா செய்யும் முறை இதோ :

முதலில் ஹஜ் செய்பவர் ஹலாலான சம்பாத்தியத்தை தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஹராமான சம்பாத்தியத்தை முற்றிலும் தவிர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஹராமான சம்பாத்தியம் ஹஜ் மற்றும் பிரார்த்தனையைத் தட்டும் காரணியாகும். நபிமொழியில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : "ஹராத்தின் மூலம் வளர்ந்த அனைத்து சதைகளும் நரகிற்கே தகுதியானது".[34] ஈமானும், ஓரிறைக்கொள்கையும் உள்ள நல்ல பயணத் தோழர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### நிய்யத் வைக்கும் எல்லைகள்

அவ்வெல்லையை அடைந்தால் வாகனத்தில் பயணிப்பவராக இருந்தால் அங்கிருந்து இஹ்ராம் நிய்யத் வைத்தல், விமானத்தில் இருந்தால் எல்லையைத் தாண்ட முன் அதனை நெருங்கும் போது நிய்யத் வைத்தல். நபியவர்கள் வரையறுத்த நிய்யத் வைக்கும் எல்லைகள் ஐந்தாகும். அவை :

(34) ஆதாரம் : தபரானியின் அல்முஃஜமுல் அவ்ஸத் (4480), பைஹகியின் /அபுல் ஈமான் (2 / 173), அஷ்ஷேக் அல்பானீ தனது ஸில்ஸிலா ஸஹீஹாவில் (6 / 212) இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

1. மதீனா வாசிகளுக்கு துல்ஹுலைஃபா (அப்யார் அலீ)

2. சிரியா, எகிப்து, மொரோக்கோ வாசிகளுக்கு ஜுஹ்ஃபா (ராபிஃ எனும் இடத்திற்கு அருகாமையில்).

3. நஜ்த், தாஇப் நகர் மற்றும் அத்திசையில் வருவோருக்கு கர்ன் அல்மனாஸில் (ஸைல் அல்லது வாதீ மஹ்ரம்).

4. இராக் வாசிகளுக்கு ஸாது(தணாது)இர்க்.

5. யமன் வாசிகளுக்கு 'யலம்லம்'

இந்த எல்லைகள் இந்த இடங்களில் உள்ளவர்களுக்கும், இவற்றின் வழியாக ஹஜ், உம்ரா செய்ய யார் நுழைகிறார்களோ, அவர்களுக்கும் இஹ்ராம் கட்டும் இடங்களாகும். மக்கா வாசிகள் மற்றும் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்போர் தமது இருப்பிடங்களில் இருந்து நிய்யத் வைக்க வேண்டும்.

**இஹ்ராம் (நிய்யத்) வைக்கும் முறை**

இஹ்ராம் நிய்யத் வைக்க முன் (தனது ஆடைகளைக் களைந்து,) குளித்து, நறுமணம் பூசிக் கொள்வது ஸுன்னத்தாகும். பின்பு இஹ்ராத்திற்கான ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். விமானத்தில் பயணிப்போர் தமது ஊரிலிருந்தே தயாராகிக் கொள்ள வேண்டும். பின் எல்லையை நெருங்கும் போது அல்லது அதற்கு நேராகப் பயணிக்கும் போது நிய்யத் வைத்து விட்டு தல்பியாக் கூற வேண்டும்.[35]

ஆண்களின் இஹ்ராம் துணி தமது உடலைப் போர்த்தும் விதத்தில் சூழத் தைக்கப்படாத போர்வை, வேட்டி ஆகியனவாகும். தலையை மூடக்கூடாது. பெண்களுக்கு இஹ்ராமுக்கென பிரத்தியேக ஆடைகள் எதுவும் கிடையாது மக்கள் முன்னிலையில் அவர்களை ஈர்க்கக் கூடியவாறல்லாமல் விசாலமான முழுமையாக மறைக்கக்கூடிய ஆடைகளை அணிவதுதான் அவர்களுக்

(35) தல்பியா கூறுதல் என்பது : "லப்பைக் ஹஜ்ஜன்", அல்லது "லப்பைக் உம்ரதன்" எனக் கூறுவதாகும். அல்லாஹ்வின் அழைப்பிற்கு தொடர்ந்து பதிலளிப்பதே இதன் அர்த்தமாகும்.

குக் கடமையாகும். புர்கா, கையுறை போன்ற தைக்கப்பட்டவற்றால் முகம், கைகளை மூடக்கூடாது, ஆண்கள் முன்னிலையில் தலையில் போட்டிருக்கும் ஹிஜாபின் ஓரத்தால் முகத்தை மூடிக்கொள்ள வேண்டும். இவ்வாறுதான் நபியவரக்ளின் மனைவியர் மற்றும் நபித்தோழியர்களும் செய்துள்ளனர்.

இஹ்ராம் துணியை அணிந்ததன் பின் உம்ராச் செய்வதாக மனதில் நினைத்துக் கொண்டு "அல்லாஹும்ம லப்பைக் உம்ரதன்" எனக்கூற வேண்டும். அத்துடன் தமத்துஃ[36] முறையில் ஹஜ் செய்பவர் உம்ரா முடிந்ததிலிருந்து ஹஜ் கிரியை ஆரம்பிக்கும் வரை இஹ்ராத்தின் போது தடுக்கப்பட்டவற்றை அனுபவிக்க முடியும். ஹஜ் செய்யும் போது தமத்துஃ முறையே சிறந்ததாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் தம்முடன் பலியிடும் பிராணி[37] கொண்டு வராதவர்களுக்கு தமது ஹஜ் முறையை தமத்துஃ ஆக மாற்றிக் கொள்ளுமாறு ஏவியதுடன் அதில் தடுமாறி பின்வாங்கியவர்களைப் பார்த்து சினம் கொண்டார்கள். பலியிடும் பிராணி கொண்டு வந்தவர்கள் நபியவர்களைப் போன்று கிரான் முறையில் இஹ்ராத்துடனேயே இருந்து கொள்ள வேண்டும். கிரான் செய்பவர் தனது இஹ்ராமின் போது அல்லாஹும்ம லப்பைக் உம்ரதன் வஹஜ்ஜன் எனக் கூறுவார், பெருநாள் தினத்தில் பலியிடும் வரை இஹ்ராமைக் களையமாட்டார்.

---

(36) தமத்துஃ ஹஜ் செய்பவர்: ஹஜ்ஜுடைய மாதங்களில் உம்ராச் செய்து, பின் இஹ்ராமைக் களைந்து அதன்போது தடுக்கப்பட்டவற்றை அனுபவிக்கலாம். மீண்டும் துல் ஹஜ் மாதம் எட்டாம் நாள் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் நிய்யத் வைக்க வேண்டும். கிரான் செய்பவர்: ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து செய்வதாக இஹ்ராம் நிய்யத் வைத்து, உம்ராவை ஹஜ்ஜுடைய கிரிகைகளுடன் சேர்த்து நிறைவேற்ற வேண்டும். (அதாவது இவர் ஆரம்பத்தில் தவாபுல் குதூம் மற்றும் ஸஈ ஆகியவற்றை செய்துவிட்டு அந்த இஹ்ராமுடனேயே துல்ஹஜ் 10ம் நாள் வரை இருக்க வேண்டும்). இப்ராத் செய்பவர் உம்ராச் செய்யாமல் ஹஜ் மாத்திரம் செய்வதாக நிய்யத் வைத்து, அதனை மாத்திரம் நிறைவேற்ற வேண்டும்.

(37) பலியிடப்படும் பிராணி : ஹஜ் செய்பவர் அறுத்துப் பலியிடும் ஒட்டகம், மாடு, ஆடு ஆகியனவாகும். இவற்றை அறுத்து பிறருக்கு தர்மம் கொடுக்க வேண்டும், தானும் உண்ணலாம்.

இப்ராத் செய்பவர் ஹஜ் செய்வதாக மாத்திரம் நிய்யத் வைத்து அல்லாஹும்ம லப்பைக ஹஜ்ஜன் எனக் கூற வேண்டும்.

**இஹ்ராம் கட்டியவர் தவிர்க்க வேண்டியவை**

இஹ்ராம் நிய்யத் வைத்த ஒருவருக்கு பின்வரும் விடயங்கள் தடை செய்யப்பட்டுள்ளன :

**1.** உடலுறவு கொள்ளல், மற்றும் அதற்கு வழிவகுக்கக் கூடியவை யான மனைவியை இச்சையோடு தொடுதல், கட்டியணைத்தல், ஆபாசப் பேச்சுக்கள் போன்றன. மேலும் திருமணம் நடத்தல், திருமணம் பேசுதல். எனவே இஹ்ராம் அணிந்தவர் திருமணம் செய்யவோ, செய்து வைக்கவோ கூடாது.

**2.** தலைமுடி மற்றும் உடம்பின் ஏனைய பாகங்களிலுள்ள முடி களை நீக்குதல்.

**3.** நகங்களை வெட்டுதல்.

**4.** தலையுடன் ஒட்டிய பொருட்கள் மூலம் தலையை மறைத் தல். தலையுடன் சேர்ந்திராத குடைகள், கூடாரங்கள், மற்றும் வாகனக் கூரைகள், போன்றவற்றால் நிழல் பெறுவதில் ஆட்சே பணையில்லை.

**5.** உடலிலோ, உடையிலோ மணம் பூசுதல்.

**6.** தரை வாழ் பிராணிகளை வேட்டையாடுதல், எனவே வேட் டையாடவோ, அதற்கு வழிகாட்டவோ கூடாது.

**7.** ஆண்கள் தைத்த ஆடைகளை அணிதல், பெண்கள் புர்கா, கையுறை போன்ற தைக்கப்பட்டவற்றால் முகம், கைகளுக்கு அணிதல். ஆண்கள் செருப்புக்களைத்தான் அணிய வேண்டும், கிடைக்காவிட்டால் சப்பாத்துக்களை அணியலாம்.

அறியாமையாலோ, மறதியாகவோ தடுக்கப்பட்ட இவற்றில் ஒன்றைச் செய்தால் உடனடியாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும். அவர் மீது பரிகாரம் ஏதுமில்லை.

கஃபாவை அடைந்ததும் "தவாபுல் குதூம்" வருகைக்கான தவாப்[38] ஏழு சுற்றுக்கள் ஹஜருல் அஸ்வத் கல்லிலிருந்து ஆரம் பித்து செய்ய வேண்டும். (தமத்துஃ முறையில் ஹஜ் செய்வோ ராக இருந்தால்) இது அவருடைய உம்ராவுக்கான தவாபாகும். தவாபுக்கென பிரத்தியேகமான துஆக்கள் ஏதுமில்லை.[39] முடி யுமானளவு அல்லாஹ்வை நினைவுகூர்ந்து, பிரார்த்தனை புரிய வேண்டும். பின் முடியுமாயிருந்தால் மகாமிற்குப்[40] பின் தவாபு டைய இரு ரக்அத்களைத் தொழ வேண்டும். முடியாவிட்டால் பள்ளியில் ஏதாவதொரு பகுதியில் தொழ வேண்டும். பின்னர் மஸ்ஆவிற்குச்[41] செல்ல வேண்டும்.

ஸபாவிலிருந்து ஆரம்பித்து, அக்குன்றிற்கு ஏறி, கிப்லாத் திசையை முன்னோக்கி தக்பீர் கூறி, திக்ரு செய்து, பிரார்த்தனை யும் புரிந்துவிட்டு மர்வா குன்று நோக்கி நடந்து செல்லல். அக் குன்றிற்கும் ஏறி, கிப்லாத்திசையை முன்னோக்கி தக்பீர் கூறி, திக்ரு செய்து, பிரார்த்தனையும் புரிந்துவிட்டு மீண்டும் ஸபா குன்று நோக்கி நடந்து செல்லல். இவ்வாறு ஏழு சுற்றுக்கள் வரை செய்ய வேண்டும். "ஸஃபா"வில் இருந்து "மர்வா" வை நோக்கி செல்வது ஒரு விடுத்தமாகவும், மீண்டும் "மர்வா"வில் இருந்து "ஸஃபா" நோக்கி வருவது இன்னுமொரு விடுத்தமாக வும் கருதப்படும். பின் தலைமுடியைக் கத்தரிக்க வேண்டும். பெண் தனது முடிகளை ஒன்று சேர்த்து விரல் மடிப்பளவு கத் தரிக்க வேண்டும். மேற்கூறப்பட்டவற்றை இஹ்ராம் அணிந்த ஒருவர் நிறைவேற்றினால் அவரது உம்ரா நிறைவடைந்து விடு

(38) அதாவது மக்காவிலுள்ள கஃபாவிற்கு வருகை தந்தமைக்காக செய்யும் முதல் தவாப்.

(39) (எனினும் ருக்னுல் யமானீ ஹஜருல் அஸ்வத் ஆகியவற்றுக்கிடையில் "ரப்பனா ஆதினா ஃபித் துன்யா ஹஸனஹ், வஃபில் ஆகிரதி ஹஸனதவ் வகினா அதாபன் நார்" எனும் துஆவை ஓத வேண்டும். (பகரா 201.)

(40) இது மகாமு இப்ராஹீம் (அலை) எனும் இடத்தைக் குறிக்கின்றது.

(41) மஸ்ஆ என்பது ஸஈ செய்யும் இடமாகும். ஸஈ என்பது ஸபா, மர்வா இரு குன்றுகளுக்கிடையில் நடப்பதைக்( ஓடுவதை) குறிக்கும் சொல்லாகும்.

கின்றது. இஹ்ராத்தின் போது ஏற்கனவே தடுக்கப்பட்டிருந்த அனைத்தும் அனுமதிக்கப்படுகின்றது.

இஹ்ராத்திற்கு முன்னரோ, பின்னரோ ஒரு பெண்ணிற்கு மாத விடாய் ஏற்பட்டால் அல்லது குழந்தை பிரசவித்தால் ஏனை யோரைப் போன்று இஹ்ராம் நிய்யத் வைத்த பின்னர் தமத்துஃ விலிருந்து கிரான் முறைக்கு மாறி விட வேண்டும். ஏனெனில் மாதவிடாய் மற்றும் பிரசவத்துடன் தவாப் மாத்திரமே செய்ய முடியாது, இஹ்ராம் நிய்யத் வைத்தல், புனித இடங்களில் தரித் தல் என்பவற்றுக்கு அவ்விரண்டும் தடையாக மாட்டாது. எனவே தவாபைத் தவிர ஹாஜிகள் செய்யும் ஏனைய அனைத்து கிரியைகளையும் செய்ய வேண்டும், சுத்தமடையும் வரை தவா பைப் பிற்போடல் வேண்டும்.

மக்கள் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் நிய்யத் வைத்து மினாவிற்குச் செல்லமுன் சுத்தமானால் அவள் குளித்துவிட்டு, தவாப், ஸஈ, முடி கத்தரித்தல் அனைத்தையும் செய்து உம்ராவைப் பூர்த்தி செய்வாள். பின் எட்டாவது நாளில் ஏனையோருடன் சேர்ந்து ஹஜ்ஜுக்காக இஹ்ராம் நிய்யத் வைக்க வேண்டும். இப்பெண் சுத்தமடைய முன் மக்கள் ஹஜ்ஜுக்காக இஹ்ராம் நிய்யத் வைத்து விட்டால் தமத்துஃலிருந்து கிரான் முறைக்கு மாறி விட வேண்டும். இஹ்ராம் நிய்யத் வைத்தல், தல்பியாக் கூறுதல், மினா, அரபா, முஸ்தலிபாவிற்குச் செல்லல், கல்லெறிதல், பத்தா வது தினத்தில் தலைமுடி கத்தரித்தல் போன்ற ஹாஜிகள் செய் யும் அனைத்து விடயங்களையும் அவர்களுடன் சேர்ந்தே செய்ய வேண்டும். சுத்தமான பின் குளித்து ஹஜ்ஜுடைய தவாப், மற் றும் ஸஈயை நிறைவேற்ற வேண்டும்.

இந்த தவாப் மற்றும் ஸஈ அவளுடை ஹஜ், உம்ரா இரண்டிற்கும் போதுமானதாகும். ஆஇஷா (ரலி) அவர்களுக்கு இந்நிலை ஏற் பட்ட போது அவர்கள் சுத்தமானதன்பின் மக்களுடன் தவாப், மற்றும் ஸஈ செய்த வேளை இந்த தவாபும், ஸஈயும் ஹஜ், உம்ரா இரண்டிற்கும் போதுமானதாகும் என நபியவர்கள் கூறினார்கள்.

ஏனெனில் கிரான் முறையில் ஹஜ், உம்ராவை சேர்த்து செய்பவர் இப்ராத் செய்பவரைப் போன்றுதான், அவருக்கு ஒரு தவாப்[42] மற்றும் ஒரு ஸஈ மாத்திரமே கடமையாகும். அத்துடன் நபி (ஸல்) அவர்கள் தனது சொல், செயல் மூலம் இதனை வெளிப் படையாகவே தெளிவுபடுத்தியுள்ளார்கள். "மறுமை வரை உம்ரா ஹஜ்ஜுக்குள் இரண்டறக் கலந்து விட்டது" என மற்று மொரு நபிமொழியில் இடம்பெற்றுள்ளது. அல்லாஹ்வே மிக்க அறிந்தவன்.

துல் ஹஜ் மாதத்தின் எட்டாம் நாள் ஹாஜிகள் இருக்குமிடத்தி லேயே ஹஜ்ஜுக்காக நிய்யத் வைக்க வேண்டும் ஏற்கனவே எல் லையில் இஹ்ராம் நிய்யத் வைத்ததுபோன்று குளித்து, நறு மணம் பூசி, இஹ்ராம் ஆடையை அணிந்து, பின் "லப்பைகல்லா ஹும்ம ஹஜ்ஜன்" எனக்கூறி நிய்யத் வைக்க வேண்டும். நஹ்ரு டைய தினம்[43] முஸ்தலிபாவிலிருந்து மினா திரும்பி, கல்லெ றிந்து, தலை முடி மழிக்கும் வரை- பெண்கள் கத்தரிக் வேண்டும்- ஏற்கனவே கூறப்பட்ட இஹ்ராத்துடன் தவிர்ந்து கொள்ள வேண்டியவற்றை விலகிக் கொள்ள வேண்டும்.

துல் ஹஜ் மாதத்தின் எட்டாம் நாளில் ஹாஜிகளுடன் சேர்ந்து மினாவிற்குச் சென்று, அங்கு இராத்தரிக்க வேண்டும். (நான்கு ரக்அத் உடைய) தொழுகைகளை (மாத்திரம் இரண்டிரண்டு ரகஅத்களாக) சுருக்கி சேர்த்தாமல் உரிய நேரங்களில் தொழ வேண்டும். அரபா தினம் சூரியன் உதயமானதும் மினாவை

---

(42) அத்தவாபை பத்தாவது தினத்தில் அல்லது அதற்குப் பின்னர் செய்ய வேண் டும். ஹஜ்ஜுக்கு முன் செய்யக்கூடிய வருகைக்கான தவாப் ஸுன்னத்தானதாகும். ஸஈயைப் பொருத்தவரையில் இப்ராத் மற்றும் கிரான் செய்வோர் ஒரு முறைதான் செய்ய வேண்டும். அதனை வருகைக்கான தவாபுடன் சேர்த்துச் செய்தால் போது மானது, அவ்வாறில்லாவிடில் பத்தாவது தினத்தில் அல்லது அதற்குப் பின்னர் ஹஜ்ஜுடைய தவாபுடன் செய்ய வேண்டும்.

(43) நஹ்ருடைய தினம் என்பது துல்ஹஜ் மாதம் பத்தாவது நாளாகிய பெருநாள் தினமாகும். ஹாஜிகள் இத்தினத்தில் அறுத்துப் பலியிடுவதால் அதைக் குறிக்கும் சொல்லான நஹ்ர் எனும் பெயரிடப்பட்டது.

விட்டும் புறப்பட்டு ஹாஜிகளுடன் சேர்ந்து நமிரா எனும் இடத்திற்கு வர வேண்டும். அங்கு அல்லது தாம் இருக்குமிடத்தில் இமாமுடன் சேர்ந்து கூட்டாக ளுஹரையும், அஸரையும் முற்படுத்தி சுருக்கித் தொழ வேண்டும். பின்னர் சூரியன் மேற்குத்திசையில் சற்று சாய்ந்ததும் அரபாவிற்குள் நுழைய வேண்டும். நேராடியாகவே அரபாவிற்குள் நுழைந்தாலும் அதுவும் ஆகுமானதே, அரபாவின் அனைத்து இடங்களும் தரிப்பிடமாகும்.

அரபாவில் அல்லாஹ்வை திக்ர் செய்வதிலும், அதிகமாக அல்லாஹ்விடம் துஆக் கேட்பதிலும், பாவமன்னிப்புக் கேட்பதிலும் தனது நேரங்களைப் பயன்படுத்த வேண்டும். துஆக் கேட்கும் போது கிப்லாவைத்தான் முன்னோக்க வேண்டும். அரபா மலையை நோக்கியல்ல, ஏனெனில் அம்மலை அரபாவின் ஒரு பகுதியே தவிர வேறில்லை, வணக்க நோக்கில் ஏறுவதோ, அதன் கற்களைத் தொடுவதோ கூடாது, ஏனெனில் இவை ஹராமான நூதனச் செயலாகும்.

சூரியன் அஸ்தமிக்கும் வரை அரபாவிலிருந்து புறப்படக் கூடாது, சூரியன் அஸ்தமித்ததும் முஸ்தலிபா சென்று, அங்கு மஃரிப், இஷா ஆகிய தொழுகைகளை ஓர் அதானும், இரு இகாமத்தும் கூறி பிற்படுத்தி சேர்த்தும், இஷாவை சுருக்கியும் தொழ வேண்டும். அங்கே இராத் தரிக்க வேண்டும். பஜ்ரு உதயமானதும் அதனைத் தொழுது விட்டு, துஆ, திக்ருகளில் ஈடுபட வேண்டும். பின்பு நன்கு வெளுக்க ஆரம்பித்ததும் சூரியன் உதயமாவதற்கு முன்னர் மினாவிற்குச் செல்லப் புறப்பட வேண்டும். மினாவை அடைந்ததும் சூரியன் உதயமானதன் பின்னர் நன்கு பெருத்ததோ, மிகச் சிறியதோ அல்லாமல் கடலை விதையைப் போன்ற ஏழு சிறு பொடிக்கற்களால் ஜம்ரதுல் அகபா எனும் தூணுக்கு ஒவ்வொன்றாக எறிய வேண்டும். செருப்புகளினால் எறியக் கூடாது. ஏனெனில் இது ஷைத்தான் அழகுபடுத்திக் காட்டும் வீண் விளையாட்டாகும். நபி (ஸல்) அவர்களுடைய

கட்டளை, வழிமுறையைப் பின்பற்றுவதாலும், அவர்களுடைய தடைகளைத் தவிர்ந்து கொள்வதாலும்தான் ஷைத்தானை இழிவுபடுத்த[44] முடியும்.

கல்லெறிந்து முடிந்ததும் அறுத்துப் பலியிட வேண்டிய பிரா ணியை அறுக்க வேண்டும். பின் முடியை மழிக்க வேண்டும், பெண் கத்தரிக்க வேண்டும். ஆண்களும் முடியை குறைக்க முடி யும். அத்துடன் சாதாரண உடைக்கு மாறலாம். இஹ்ராத்தின் போது தடுக்கப்பட்டவற்றில் உடலுறவைத் தவிர ஏனைய அனைத்தும் ஆகுமாகின்றது. பின் மக்கா சென்று ஹஜ்ஜுடைய தவாப், மற்றும் ஸஈயை நிறைவேற்ற வேண்டும். இதன் மூலம் மனைவி உட்பட இஹ்ராத்தின் போது தடுக்கப்பட்ட அனைத் தும் ஆகுமாகின்றது.

பின் மினாவுக்குத் திரும்பி பத்தாம் நாளின் மீதியையும், அதற் கடுத்த இரு தினங்களையும் இரவுடன் சேர்த்து மினாவில் கழிப் பது அவசியமாகும். மினாவில் 11ம், 12ம் நாட்களில் சூரியன் சாய்ந்த பின் மூன்று ஜம்ராக்களுக்கும் கல்லெறிய வேண்டும். மினாவை அடுத்துள்ள முதலாவது ஜம்ராவுக்கும், பின் மத்தியி லுள்ள ஜம்ரதுல் வுஸ்தாவுக்கும், பின் பெருநாள் தினத்தில் எறிந்த ஜம்ரதுல் அகபாவிற்கும் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து ஏழு கற்களை தக்பீர் கூறிய வண்ணம் எறிய வேண் டும். எறிய வேண்டிய கற்களை தமது இருப்பிடத்தில் இருந்து கொண்டு வர வேண்டும்.[45] மினாவில் இடம் கிடைக்காதவர்கள் கூடாரங்கள் முடிவுறும் இடங்களில் தங்கிக் கொள்ள வேண்டும்.

12ம் நாள் கல்லெறிந்து முடிந்ததும் விரும்பியவருக்கு தனது கிரியைகளை முடித்துக் கொண்டு மினாவை விட்டுப் புறப் பட்டுச் செல்லலாம். விரும்பியவர் தாமதித்து 13ம் இரவு அங்கு கழித்து அன்றைய தினம் பகலில் சூரியன் சாய்ந்த பின் மூன்று

---

(44) ஷைத்தானை இழிவுபடுத்துவதற்கு அரபு மொழியில் இர்காம் எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(45) அதாவது மினாவில் தாம் தங்குமிடத்திலிருந்து கொண்டு வர வேண்டும்.

ஜம்ராக்களுக்கும் கல்லெறிய வேண்டும். இவ்வாறு தாமதித்துச் செல்வதே சிறந்தது. ஹஜ் கிரியைகள் முடிந்து ஹாஜிகள் மக்கா விலிருந்து ஊர் திரும்ப விரும்பினால் தவாபுல் வதாஃ செய்து விட்டு உடனடியாகப் புறப்பட வேண்டும்.பெண்ணிற்கு மாத விடாய் ஏற்பட்டால், ஏற்கனவே ஹஜ்ஜுடைய தவாப் மற்றும் ஸஈ செய்திருந்தால் இந்த தவாப் அவளுக்குக் கடமையில்லை.

அறுத்துப் பலியிடுவதை 11ம், 12ம், 13ம் நாட்களுக்குப் பிற் போடவும் முடியும், ஹஜ்ஜுடைய தவாப் மற்றும் ஸஈயை மினா விலிருந்து புறப்படும் வரை பிற்போடவும் முடியும். எனினும் மேற்கூறப்பட்டவாறு செய்வதே சிறந்தது.

அல்லாஹ்வே மிக்க அறிந்தவன். எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் அல்லாஹ் ஸலாதும், ஸலாமும் சொறிவானாக.

## இறைநம்பிக்கை (ஈமான்)

அல்லாஹ்வையும், அவனது தூதர், இஸ்லாத்தின் தூண்களை யும் நம்புவதுடன் சேர்த்து அவனுடைய வானவர்கள்,(46) தூதர் களுக்கு அருளிய, அல்குர்ஆனுடன் முத்திரையிட்டு, அத னையே முன்னையவற்றை மாற்றியமைக்கக் கூடியதாக அமைத்த அவனது வேதங்கள்,(47) மற்றும் முதல் தூதர் முதல்

(46) வானவர்கள் அல்லாஹ் ஒளியிலிருந்து படைத்த உயிருள்ள ஜீவன்களாகும். அவர்கள் அதிகமானவர்கள். அல்லாஹ்வைத் தவிர அவர்களை மட்டிட முடியாது. அவர்களில் சிலர் வானங்களில் உள்ளனர், மற்றும் சிலர் மனிதர்களுக்கு சாட்டப் பட்டுள்ளனர்.

(47) அதாவது அல்லாஹ் தனது தூதர்களுக்கு அருளிய வேதங்கள் சத்தியமானவை என்பதை நம்புதலாகும். அவற்றில் அல்குர்ஆன் மாத்திரம்தான் எஞ்சியுள்ளது. தற்போது யூத கிறிஸ்தவர்களிடமுள்ள தவ்ராத், இன்ஜீல் ஆகியன அவர்களுடைய உருவாக்கமாகும். அவற்றிலுள்ள முரண்பாடுகள், திருத்துவம், ஈஸா (அலை) அல் லாஹ்வின் புதல்வர் என்ற செய்தி போன்றன இதற்கு சான்று பகர்கின்றன. இறைவன் ஒருவனே, அவன் அல்லாஹ் மாத்திரமே, ஈஸா (அலை) அல்குர்ஆனில் உள்ளது போல் அல்லாஹ்வுடைய அடியாரும், தூதருமாவார்கள். அவ்வேதங்களில் இடம் பெற்றுள்ள இறைவசனங்கள் அல்குர்ஆனின் மூலம் மாற்றப்பட்டுவிட்டன. உமர்

இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை அவனது அனைத்துத் தூதர்கள் என அனைத்தையும் நம்பிக்கை கொள்ளும்படி கட்டாயப்படுத்தியுள்ளான்.

ஏனெனில் தூதர்கள் அனைவருடைய தூதும் ஒன்றுதான், மார்க்கமும் ஒன்றுதான்- அதுதான் இஸ்லாமாகும்-, அவர்களை அனுப்பியவனும் ஒரே இறைவன் அல்லாஹ்தான். எனவே அல்லாஹ் அல்குர்ஆனில் கூறியுள்ள தூதர்கள் முன்சென்ற தமது சமூகங்களுக்கே அனுப்பப்பட்டுள்ளனர் என்பதை நம்ப வேண்டும். மேலும் அவர்களில் இறுதியானவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் என்பதுடன், அவர்கள் அனைத்து மனிதர்களுக்குமான தூதர் என்பதையும் நம்ப வேண்டும். அவர்களுடைய வருகைக்குப் பின் வந்த யூத, கிறிஸ்தவம் போன்ற பிற மதங்கள் உட்பட அனைத்து மக்களும் அவர்களுடைய சமூகம்தான் என்பதையும் நம்ப வேண்டும். ஏனெனில் பூமியிலுள்ள அனைத்து மக்களும் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய சமூகத்தினரே, அன்னாரைத் தான் பின்பற்ற வேண்டுமென அல்லாஹ்விடமிருந்து கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றி இஸ்லாத்தில் இணையாத அனைவைரையும் விட்டு மூஸா (அலை), ஈஸா (அலை) உட்பட அனைத்து நபிமார்களும் விலகியவர்களாகும். ஏனெனில் முஸ்லிம் அனைத்து தூதர்களையும் நம்பி, அவர்களைப் பின்பற்றக் கூடியவனாகும். முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றி இஸ்லாத்தில் இணையாத அனைவரும் தாம் யாரையாவது

---

*(ரலி) அவர்களின் கரங்களில் தவ்ராதின் ஒரு தாளை நபியவர்கள் கண்ட போது சினங்கொண்டு, "கத்தாபின் புதல்வரே இன்னும் நீர் சந்தேகத்திலேயா இருக்கின்றீர்? அல்லாஹ்வின் மீது ஆணையாக மூஸா இப்போது உயிருடனிருந்தால் அவரும் என்னைத் தான் பின்பற்ற வேண்டும்" எனக் கூறினார்கள். அத்தாளை உமர் (ரலி) அவர்கள் எறிந்துவிட்டு, அல்லாஹ்விடம் எனக்காகப் பாவமன்னிப்புக் கோருங்கள் தூதர் அவர்களே! எனக் கூறினார்கள். (அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி), ஆதாரம் : அஹ்மத் 3 / 387, அஷ்ஷேக் அல்பானீ இதனை ஹஸன் என தனது இர்வாஉல் கலீல் நூலில் (1589) கூறியுள்ளார்கள்).*

பின்பற்றுவதாக வாதாடினாலும் அனைத்து நபிமார்களையும் பொய்ப்பிப்பவர்களாகும். இதற்கான அல்குர்ஆன் ஆதாரங்கள் இரண்டாம் பாடத்தில் கூறப்பட்டது.

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "இந்த முஹம்மதின் உயிர் எவன் கைவசமுள்ளதோ அவனின் மீது சத்தியமாக இச்சமூகத்தின் எந்தவொரு யூதரோ, கிறிஸ்தவரோ என்னைப் பற்றிக் கேள்விப்பட்டு, பின் நான் அனுப்பப் பட்ட மார்க்கத்தை நம்பவில்லையோ அவன் நரகிலேயே இருப் பான்".[48]

மரணத்திற்குப் பின் மீள எழுப்பப்படல், விசாரணை, கூலி வழங் கல், சுவனம், நரகம் என்பவற்றையும் ஒரு முஸ்லிம் நம்புவது அவசியமாகும். மேலும் அல்லாஹ் நிர்ணயித்த விதியையும் நம் புவது அவசியமாகும்.

விதியை நம்புவதன் அர்த்தம் :

அனைத்து விடயங்களையும் அல்லாஹ் அறிந்துவைத்துள் ளான், அடியார்களின் செயற்பாடுகளையும் வானங்கள், பூமி யைப் படைப்பதற்கு முன்னரே அவன் அறிந்து, பாதுகாக்கப் பட்ட ஏட்டில் பதிந்து விட்டான் என முஸ்லிம் உறுதியாக நம் பிக்கை கொள்வதே விதியை நம்புவதன் அர்த்தமாகும். அல் லாஹ் நாடியதுதான் நடக்கும், நாடாதது நடக்காது, அல்லாஹ் தனது அடியார்களை அவனுக்கு வழிப்படவே படைத்துள் ளான், அதனை அவர்களுக்குத் தெளிவு படுத்தி, ஏவியதுடன், அவனுக்கு மாறுசெய்வதைத் தடுத்து, அதனையும் தெளிவுபடுத் தியுள்ளான் என்பதையும் அவன் அறிய வேண்டும். அல்லாஹ் வின் கட்டளைகளை நிறைவேற்றி, நன்மையை அடைவதற்கும், பாவங்களை செய்து தண்டனைக்கு உள்ளாகவும் முடியுமானளவு நாட்டம், ஆற்றல் ஆகியவற்றை அல்லாஹ் அடியார்களுக்கு அமைத்து வைத்துள்ளான்.

---

(48) ஆதாரம் : முஸ்லிம் 153, அஹ்மத் 8609.

அடியானுடைய நாட்டம் அல்லாஹ்வுடைய நாட்டத்திற்குட் பட்டதாகவே உள்ளது. தவறு, மறதி, நிர்ப்பந்தம், வறுமை, நோய், சோதனைகள் போன்ற அல்லாஹ் தனது அடியார்க ளுக்கு நாட்டமோ, சுய விருப்பமோ வைக்காமல், அவர்களு டைய விருப்பத்தையும் மீறி நடக்கக் கூடியவற்றுக்கு அவன் குற்றம் பிடிக்கவோ, தண்டிக்கவோ மாட்டான். மாறாக சோத னைகள், வறுமை, நோய் போன்றவற்றுடன் பொறுமை காத்து, அல்லாஹ்வின் ஏற்பாட்டைப் பொருந்திக் கொண்டால் அதற்கா கக் கூலி வழங்குவான்.

முன்னர் கூறிய அனைத்தையும் ஒரு முஸ்லிம் நம்புவது அவசிய மாகும்.

அல்லாஹ்வை நம்புவதில் முஸ்லிம்களில் மிக மகத்தானவர்கள், அவனுக்கு மிக நெருக்கமானவர்கள், சுவனத்தில் உயர்ந்த தரத் தில் இருப்பவர்கள் யாரெனில் முஹ்ஸினூன்கள் எனும் நன்மை செய்வோராகும். அவர்கள் எத்தகையவர்கள் என்றால் அல் லாஹ்வை வணங்கி, அவனை மகத்துவப்படுத்துவார்கள், அவ னைக் காண்பது போன்றே அஞ்சுவார்கள், மறைவிலோ, வெளிப் படையாகவோ அவனுக்கு மாறு செய்ய மாட்டார்கள், தாம் எங்கிருந்தாலும் தம்மை அவன் பார்த்துக் கொண்டிருக்கின் றான், தமது சொல், செயல், எண்ணங்களில் எதுவும் அவனை விட்டு மறையாது என உறுதியாக நம்பக் கூடியவர்கள்.

எனவே அவனுக்கு அவர்கள் வழிப்பட்டு, பாவத்தை விட்டுவிடு வார்கள். அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறாக அவர்களிடமி ருந்து தவறேனும் நிகழ்ந்தால் உடனடியாக கவலைப்பட்டு, உண்மையாகவே பச்சாதாபப்பட்டு அல்லாஹ்விடம் மீள்வார் கள், பாவமன்னிப்புக் கோருவார்கள், அப்பாவத்தை மீண்டும் செய்ய மாட்டார்கள். அல்லாஹ் கூறுகின்றான் : **“நிச்சயமாக எவர்கள் மெய்யாகவே இறையச்சமுடையவர்களாக இருக்கிறார் களோ அவர்களுடனும், எவர்கள் நன்மை செய்கிறார்களோ அவர் களுடனும் தான் அல்லாஹ் இருக்கிறான்”.** (அந்நஹ்ல் : 128).

## இஸ்லாமிய மார்க்கத்தின் முழுமை

*அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :* **“இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு நான் முழுமைப் படுத்தி விட்டேன். எனது அருட்கொடைகளையும் உங்கள் மீது பூரணப்படுத்தி விட்டேன். மேலும் இஸ்லாத்தையே நான் உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்”.** *(அல்மாஇதா : 3).* *மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :* **“நிச்சயமாக இந்த குர்ஆன் மிக நேரான, நீதமான பாதைக்கு வழி காட்டுகிறது. மேலும், [உங்களில்] நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்பவர்களுக்கு நிச்சயமாக மிகப் பெரிய கூலி உண்டு என்றும் நற்செய்தி கூறுகிறது”.** *(அல் இஸ்ராஃ : 9). அல்குர்ஆனைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான் :* **“மேலும், இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளையும் தெளிவாக்குகிறதாகவும், நேர்வழி காட்டியதாகவும், ரஹ்மத்தாகவும், முஸ்லிம்களுக்கு நன்மாராயமாகவும் உம்மீது நாம் இறக்கி வைத்திருக்கிறோம்”.** *(அந்நஹ்லு : 89).*

*ஆதாரபூர்வமான நபிமொழியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : “உங்களை நான் வெண்மையான பாதையில் விட்டுச் செல்கின்றேன், அதன் இரவு பகலைப் போன்றது, எனக்குப் பின்னால் அழிந்து போகுபவனைத் தவிர யாரும் அப்பாதையை விட்டும் தவறிச் செல்லமாட்டர்கள்”,[49] மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : “உங்களிடம் இரண்டு விடயங்களை நான் விட்டுச் செல்கின்றேன், அவ்விரண்டையும் நீங்கள் பற்றிப் பிடிக்கும் வரை வழி தவற மாட்டீர்கள் : அல்லாஹ்வின் வேதமும், அவனது தூதரின் வழிமுறையுமாகும்”.[50]*

---

*(49) ஆதாரம் : அபூதாவூத் (4607), திர்மிதீ (2676), இப்னு மாஜா (43) இவ்வார்த்தை அவருக்குரியதாகும், அஹ்மத் (17142) சிறு மாற்றங்களுடன், ஸஹீஹ் இப்னு மாஜாவில் (41) அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.*

*(50) ஆதாரம் : மாலிக் (3338), ஸஹீஹுல் ஜாமிஇல் (2937) அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.*

மேற்கூறப்பட்ட வசனங்களில் :

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அவர்களது மார்க்கத்தை முழுமைப் படுத்தியதாக முதல் வசனத்தில் கூறுகின்றான். எனவே அதில் எவ்வித குறையுமில்லை, மேலதிகமாக சேர்த்தவும் ஒருபோதும் தேவையேற்படமாட்டாது. இது அனைத்து காலங்களுக்கும், இடங்களுக்கும், சமூகங்களுக்கும் பொருந்தக்கூடியதாகும். இந்த மகத்தான, முழுமையான, சகிப்புத்தன்மையுள்ள மார்க் கம், இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் தூதுத்துவம், இஸ்லாத்தின் பரவல், அதன் எதிரிகளுக்கு எதிரான வெற்றி போன்றவற்றின் மூலம் முஸ்லிம்களுக்கு அவனுடைய அருட் கொடையைப் பூரணப்படுத்தியதாகவும், முஸ்லிம்களுக்கு இஸ் லாத்தையே மார்க்கமாகப் பொருந்திக் கொண்டதாகவும் மேற் கண்ட வசனத்தில் கூறுகின்றான். எனவே அம்மார்க்கத்தை அவன் ஒரு போதும் வெறுக்கவும் மாட்டான், வேறொரு மார்க் கத்தை ஏற்றுக் கொள்ளவும் மாட்டான்.

அல்குர்ஆன் ஒரு முழுமையான செயல்முறைத் திட்டம், அதில் ஈருலக விடயங்களுக்கான ஆரோக்கியமான, உண்மையான தெளிவுள்ளதாக இரண்டாம் வசனத்தில் அல்லாஹ் குறிப்பிடு கின்றான். எனவே அது அறிவித்துத் தராத எந்த நன்மையும் இல்லை, அது எச்சரிக்காத எந்தக் கெடுதியும் இல்லை. இறந்த கால, நிகழ்கால, எதிர்கால எந்தப் பிரச்சினை, சட்டங்களுக்கும் அல்குர்ஆனில் சரியான தீர்வுள்ளது. அல்குர்ஆனுக்கு முரண் படும் அனைத்து தீர்வுகளும் அறியாமையும், அநீதியுமாகும்.

கல்வி, அடிப்படைக் கொள்கை, அரசியல், நீதித்துறை, உளவி யல், சமூகவியல், பொருளியல், குற்றவியல் ஒழுங்குகள் என மனிதர்களுக்குத் தேவைப்படும் அனைத்து விடயங்களையும் அல்லாஹ் அல்குர்ஆன், ஸுன்னா மூலம் முழுமையாகத் தெளிவு படுத்தியுள்ளான். ஏற்கனவே கூறப்பட்ட வசனத்தில் அல்லாஹ் இதனைக் குறிப்பிட்டுள்ளான் : **"மேலும், இவ்வேதத்தை ஒவ் வொரு பொருளையும் தெளிவாக்குகிறதாகவும், நேர்வழி காட்டியதா**

**கவும், ரஹ்மத்தாகவும், முஸ்லிம்களுக்கு நன்மாராயமாகவும் உம் மீது நாம் இறக்கி வைத்திருக்கிறோம்". *(அந்நஹ்லு : 89).***

*அடுத்த பாடத்தில், இஸ்லாமிய மார்க்கத்தின் முழுமை, மற்றும் அதன் விரிவான, முழுமையான மற்றும் நேர்மையான வழி முறை பற்றிய விரிவான, அதே நேரம் சுருக்கமான தெளிவு முன் வைக்கப்படுகின்றது.*

நான்காவது
பாடம்

# இஸ்லாமிய வழிமுறை

## முதலாவது : அறிவு

*மனிதனுக்கு அல்லாஹ் ஏவிய முதல் கட்டளை கல்வி கற்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான் :* "(நபியே!) நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய வேறொரு இறைவன் இல்லை என்பதை நீர் உறுதியாக அறிந்துகொண்டு, உமது தவறுகளை மன்னிக்கக் கோருவதுடன், நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் மன்னிப்புக் கோருவீராக! (நம்பிக்கையாளர்களே!) உங்கள் நடமாட்டத்தையும் நீங்கள் தங்கும் இடங்களையும் அல்லாஹ் நன்கறிவான்". *(முஹம்மத் : 19). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :* "உங்களில் நம்பிக்கை கொண்டோருக்கும், கல்வி வழங்கப்பட்டோருக்கும் அல்லாஹ் பல தகுதிகளை உயர்த்துவான். நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்". *(அல்முஜாதலா: 11).*

*மேலும் அல்லாஹ் கூறினான் :* "இறைவா எனக்கு அறிவை அதிகப்படுத்துவாயாக' என்று நபியே நீர் கூறுவீராக". *(தாஹா : 114). மேலும் அல்லாஹ் கூறினான் :* "எனவே "(இதனை) நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் (நினைவுபடுத்தும்) வேதங்களுடையோரிடம் கேட்டுத் (தெரிந்து) கொள்ளுங்கள்" (என்று நபியே! அவர்களிடம் கூறும்)". *(அல்அன்பியா : 7).*

*ஆதாரபூர்வமான நபிமொழியில் இறுதித் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "கல்வியைத் தேடிப் படிப்*

பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்".[51] மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "வணக்கசாலியை விட அறிஞருக்கு இருக்கும் சிறப்பு ஏனைய நட்சத்திரங்களை விட பௌர்ணமி நிலவிற்கு இருக்கும் சிறப் பைப் போன்றாகும்".[52]

இஸ்லாத்தில் அறிவு அதன் தேவைக்கேற்ப பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது

முதலாவது வகை : அனைத்து தனிநபர் மீதும் கடமை, ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் அறிவது கட்டாயமான பகுதி, அதில் யாருக்கும் சலுகையளிக்கப்பட மாட்டாது. அல் லாஹ்வை அறிதல், அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அறிதல், மற்றும் இஸ்லாத்தில் அவசியம் அறிந்திருக்க வேண்டி யவை இவ்வகையில் அடங்கும்.[53]

இரண்டாவது வகை : சமூகக் கடமை, போதியளவானோர் அதனை மேற்கொண்டால் ஏனையோருடைய கடமை தளர்ந்து அவர்களுக்கு ஸுன்னத்தானதாக ஆகிவிடும். கற்பித்தல், நீதித் துறை, மார்க்கத் தீர்ப்பு வழங்குதல் போன்ற துறைகளுக்குத் தயார்படுத்தும் இஸ்லாமிய சட்ட திட்டங்களைக் கற்றல், முஸ் லிம்களுக்கு அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான கைத் தொழில்கள் மற்றும் தொழில்களில் போதிய அறிவு போன்றன இவ்வகையில் அடங்கும். எனவே இத்துறைகளுக்குப் போதிய ளவு தகமையுடையவர்கள் இல்லாவிடில் முஸ்லிம்களுக்கு அவசி யம் தேவைப்படும் துறைகளுக்குத் தகுதியான அறிஞர் குழு வொன்றை உருவாக்குவது ஆட்சித் தலைவர்கள் மீது கடமையா கும்.

---

(51) ஆதாரம் : இப்னு மாஜா (224), தபரானியின் முஃஜமுஸ் ஸஃகீர் (22) ஸஹீஹுல் ஜாமிஇல் (3808, 3809) அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.

(52) ஆதாரம் : திர்மிதீ (2322), இப்னு மாஜா (4112) ஸஹீஹுல் ஜாமிஇல் (1609) அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.

(53) இவற்றின் விவரங்கள் முன்னைய பாடங்களில் கூறப்பட்டது.

## இரண்டாவது : அடிப்படைக் கொள்கை

அனைத்து மக்களும் அல்லாஹ் ஒருவனுடைய அடிமை, அவனை மாத்திரமே வணங்க வேண்டும், ஏற்கனவே லாஇலாஹ இல்லல்லாஹு என்பதன் அர்த்தம் பற்றிக் கூறும் போது விளக் கப்பட்டது போன்று அவனை வணங்குவதில் எந்தவொரு இடைத்தரகரும் இன்றி நேரடியாகவே அவனுடன் தொடர்பு பட்டிருக்க வேண்டும், அவனிடம் மாத்திரமே பொறுப்புச் சாட்ட வேண்டும், அவனுக்கு மாத்திரமே அஞ்ச வேண்டும், ஆதரவு வைக்க வேண்டும்(54) - ஏனெனில் அவன் மாத்திரமே நலவு, கெடுதிகள் ஏற்படுத்தக் கூடியவன்-, அல்லாஹ்வும், அவ னது தூதரும் அவனை வர்ணித்தது போன்று முழுமையான பண்புகளால் அவனை வர்ணிக்க வேண்டும் என அவர்களுக்கு அறிவிக்குமாறு தனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பணித்துள்ளான்.

## மூன்றாவது : மக்கள் தொடர்பு

மனிதர்களை நிராகரிப்பு எனும் இருளிலிருந்து இஸ்லாத்தின் ஒளியின்பால் பாதுகாத்து எடுக்க முயற்சிக்கும் நல்ல மனிதராக இருக்க வேண்டுமென முஸ்லிம்களைப் பணித்துள்ளான். அக் கடமையின் ஓர் அங்கத்தை நிறைவேற்றும் விதமாகவே இந் நூலைத் தொகுத்து, வெளியிட்டுள்ளேன்.

மேலும் ஒரு முஸ்லிமை இன்னொருவருடன் இணைக்கும் பிணைப்பாக ஈமானிய பிணைப்பே இருக்க வேண்டும் எனவும் பணித்துள்ளான். எனவே அல்லாஹ், இறைத்தூதர் ஆகியோ ருக்கு வழிப்படும் நல்லடியார்கள் உறவுமுறையில் தூரமாக

(54) அதாவது : அல்லாஹ்வின் ஆற்றலைப் பெறமுடியாத மரணித்தோர், சிலைகள் போன்ற படைப்பினங்களை அஞ்சவோ, அவர்களிடம் ஆதரவு வைக்கவோ கூடாது, சிங்கம் மற்றும் திருடன் போன்ற படைப்பினங்களின் சக்திக்குட்பட்ட விடயங்களில் அவர்களை அஞ்சுவதும், பொறுப்பாளர், தனவந்தர் போன்ற உப காரம் புரிய சக்தியுள்ளவர்களிடம் ஆதரவு வைப்பது, இவை இரண்டும் இயல்பா னதே, அதற்காக வஞ்சிக்கப்பட மாட்டாது.

இருந்தாலும் அவர்களை நேசிக்க வேண்டும். அல்லாஹ்வை நிராகரிப்போர், அவனுக்கும், தூதருக்கும் மாறுசெய்வோரை உறவு முறையில் மிக நெருக்கமாக இருந்தாலும் அவர்களை உள்ளத்தால் பகைக்க வேண்டும். பரம்பரை, தாயகம் மற்றும் உலக நலன்களின் பிணைப்பைப் போலல்லாமல் இதுதான் பிரிந்தவர்களை ஒன்றிணைக்கும், கருத்து வேறுபாடுள்ளவர்களை பிணைக்கும் சரியான பிணைப்பாகும். ஏனையவை வேகமாக உடைந்து விடுகின்றது.

அல்லாஹ் கூறுகிறான் : **"அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பும் சமூகத்தினர், அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பகைத்துக் கொண்டவர்களை நேசிப்பவர்களாக (நபியே!) நீர் காண மாட்டீர். அவர்கள் தங்கள் பெற்றோராயினும் தங்கள் புதல்வர்களாயினும் தங்கள் சகோதரர்களாயினும் தங்கள் குடும்பத்தினராயினும் சரியே".** (அல்முஜாதலா : 22). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : **"(ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர்".** (அல்ஹுஜுராத் : 13).

அல்லாஹ்வை நம்பியவன் அந்த நாயனது எதிரிகள் உறவுக்காரராக இருந்தாலும் நேசிக்க மாட்டான் என முதல் வசனத்தில் கூறுகின்றான்.

அல்லாஹ்விடத்தில் மிக கண்ணியமானவர், நேசத்திற்குரியவர் அவனுக்கு வழிப்படுபவனே, அவன் எந்த இனமாகவோ, நிறமாகவோ இருக்கலாம்.

நண்பன், பகைவன் அனைவருடனும் நீதமாக நடக்குமாறு அல்லாஹ் ஏவியுள்ளான். அநியாயத்தைத் தன் மீதே ஹராமாக்கியதுடன், தனது அடியார்கள் மீதும் ஹராமாக்கியுள்ளான். உண்மை, அமானிதத்தை ஏவியுள்ளதுடன், மோசடியைத் தடுத்துள்ளான். பெற்றோருக்கு உபகாரம் புரிதல், உறவினர்களுடன் சேர்ந்து நடத்தல், ஏழைகளுக்கு நலவு செய்தல், நலன்புரிப் பணிகளில் பங்கெடுத்தல், பிராணிகளாக இருந்தாலும்

உபகாரம் புரிதல் போன்ற அனைத்தையும் ஏவியுள்ளான். மிருக வதையைத் தடுத்து, அவற்றுக்கு நலவு செய்யுமாறு பணித்துள் ளான்.[55] விசர் நாய்,[56] பாம்பு, தேள், எலி, பருந்து, பல்லி போன்ற தீங்கிழைக்கக் கூடியவை அவற்றின் தீங்குகளைத் தடுப் பதற்காக சித்திரவதை செய்யாமல் அவற்றைக் கொல்ல வேண் டும்.

## நான்காவது : விசுவாசிக்கான கண்காணிப்பும் இதயபூர்வமான போதகரும்

அல்லாஹ் மக்கள் எங்கிருந்தாலும் அவர்களைப் பார்க்கின்றான், அவர்களுடைய அனைத்து செயல்கள், எண்ணங்களையும் அறி கின்றான், அவர்களுடைய சொல், செயல்களைக் கணிக்கின் றான், இரகசியமாகவோ, வெளிப்படையாகவோ அவர்களிட மிருந்து வெளிப்படும் அனைத்தையும் பதியக்கூடிய வானவர்கள் அவர்களுடன் இருந்து கொண்டே உள்ளனர், அம்மக்களின் ஒவ் வொரு சொல், செயல் பற்றியும் அல்லாஹ் விசாரணை செய் வான் என்பதைத் தெளிவுபடுத்தும் பல இறைவசனங்கள் அல் குர்ஆனில் இடம்பெற்றுள்ளன. இவ்வுலகில் அவனது கட்ட ளைக்கு மாறு செய்து, பாவத்தில் ஈடுபட்டால் நோவினை தரும் வேதனை உண்டென எச்சரித்தும் உள்ளான். மேற்கண்ட அனைத்தும் அல்லாஹ்வை நம்பிய விசுவாசிகள் பாவங்களில் வீழ்வதற்குரிய மிகப்பெரிய தடைக்கல்லாக உள்ளன. எனவே

(55) அனுமதிக்கப்பட்ட பிராணிகளை அறுக்கும் போது கூட கத்தியைக் கூர் மையாக்கிக் கொள்ளுமாறும், அறுக்கும் பிராணிகளின் கஷ்டங்களை எளிதாக்கு மாறும் நபியவர்கள் ஏவியுள்ளார்கள். அறுக்க வேண்டிய இடம் தொண்டையா கும், இரத்தம் வெளியேறும் வரை உணவுக்குழாய் மற்றும் கழுத்து நரம்புகள் இரண் டையும் துண்டிக்க வேண்டும். ஒட்டகத்தை அதன் பிடரிக்குக் கீழுள்ள கழுத்து நரம்பில் குத்துவதன் மூலம் அறுக்கப்படுகின்றது. மின்சாரத் தாக்கம், தலையில் அடித்தல் போன்ற முறைகளில் பிராணிகளை அறுப்பது கூடாது, அவற்றை உண்ணவும் முடியாது.

(56) விசர் நாய் என்பது மக்களைத் துன்புறுத்தக் கூடிய வெறிநாயாகும், பொது வாக நோவினை தரும் அனைத்து வனஜீவராசிகளும் இதில் அடங்கும்.

அல்லாஹ்வை அஞ்சியதால் குற்றச் செயல்கள் மற்றும் பாவங்களை விட்டுவிடுகின்றனர்.

அல்லாஹ்வை அஞ்சாத, வாய்ப்புக் கிடைக்கும் போது பாவங்களில் ஈடுபடுவோரை இவ்வுலகில் தடுத்து நிறுத்தும் ஒரு எல்லையை அல்லாஹ் வைத்துள்ளான். அது நன்மையை ஏவும்படியும், தீமையைத் தடுக்கும் படியும் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் விதித்திருக்கும் ஏவலாகும். எனவே பிறர் செய்யும் பாவங்களைக் கையினால் தடுக்க முடியாத போது நாவினால் சரி தடுக்கும் வரை அப்பாவங்களைப் பற்றி அல்லாஹ்விடம் பொறுப்புக் கூற வேண்டியதை ஒவ்வொரு முஸ்லிமும் உணர்கின்றான். குற்றவாளிகளுக்கு அல்லாஹ்வின் தண்டனைகளை அமுல்படுத்துமாறு முஸ்லிம் தலைவர்களுக்கு[57] அவன் ஏவியுள்ளான். அவை செய்யும் குற்றங்களின் வீரியத்திற்கு அமைய அல்லாஹ்வும், அவனது தூதரும் அல்குர்ஆன், ஸுன்னாவில் நிர்ணயித்த தண்டனைகளாகும். அவற்றை குற்றவாளிகளுக்கு அமுல்படுத்துமாறு பணித்துள்ளான். இதன் மூலம் நீதம், பாதுகாப்பு, செழிப்பு பரவுகின்றது.

## ஐந்தாவது : ஒற்றுமை மற்றும் சமூக ஒத்துழைப்பு

ஸகாத், தர்மங்கள் பற்றிய பாடத்தில் ஏற்கனவே கூறப்பட்டது போன்று அல்லாஹ் முஸ்லிம்களுக்கு ஒருவருக்கொருவர் பொருள் ரீதியாகவும் உள ரீதியாகவும் ஒத்துழைக்கும்படி கட்டளையிட்டுள்ளான். மக்களை எவ்வகையிலும் துன்புறுத்தக் கூடாதென முஸ்லிம்களுக்குத் தடுத்துள்ளான். பாதையில் கூட தீங்கிழைப்பவற்றைத் தடுத்துள்ளதுடன், பிறர்தான் அதனைப் போட்டிருந்தாலும் கண்டவுடன் அப்புறப்படுத்தும் படி முஸ்லிமுக்குப் பணித்துள்ளான். அதற்குக் கூலி வழங்குவதாக வாக்களித்துள்ளதுடன், மீறுவோரைத் தண்டிப்பதாக எச்சரித்தும் உள்ளான்.

(57) முஸ்லிம் தலைவர்கள் என்போர் நீதியரசர் அல்லது நாட்டுத் தலைவராகும்.

*தான் விரும்புவதையே தனது சகோதரருக்கும் விரும்புமாறும், தான் வெறுப்பதை அவருக்கும் வெறுக்குமாறும் அல்லாஹ் விதித்துள்ளான். அவன் கூறுகின்றான் :* **"இன்னும் நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள் ளுங்கள் பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம் அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள் – நிச்சயமாக அல்லாஹ் கடுமையாக தண்டிப்பவன்".** *(அல்மாஇதா: 2).*

*மேலும் அல்லாஹ் கூறுகிறான்:* **"நிச்சயமாக முஃமின்கள் (யாவ ரும்) சகோதரர்களே! ஆகவே, உங்கள் இரு சகோதரர்களுக்கிடை யில்நீங்கள்சமாதானத்தைஏற்படுத்துங்கள்".** *(அல்ஹுஜுராத்:10).* *மேலும் அல்லாஹ் கூறுகிறான்:* **"(நபியே!) அவர்கள் (உம்முடன்) பேசும் இரகசியங்களில் பெரும்பாலானவற்றில் ஒரு நன்மையு மில்லை. ஆயினும், தானம் கொடுப்பதைப் பற்றியோ, நன்மையான வற்றைப் பற்றியோ, மனிதர்களுக்கிடையில் சமாதானம் ஏற்படுத்து வதைப் பற்றியோ பேசுபவற்றைத் தவிர. ஆகவே, எவரேனும் அல் லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி இவ்வாறு (இரகசியம்) பேசி னால் (மறுமையில்) நாம் அவர்களுக்கு மகத்தான (நற்) கூலியைத் தருவோம்".** *(அந்நிஸா : 114).*

*மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "தான் விரும்புவதையே தனது சகோதரருக்கும் விரும்பாத வரை உங்களில் ஒருவர் பரிபூரணமான விசுவாசியாக மாட்டார்".[58] ஏற்கனவே ஏவியவற்றை மீண்டும் வலியுறுத்தித் தமது இறுதிக் காலங்களில் இறுதி ஹஜ்ஜில் நபியவர்கள் செய்த உபதேசங்க ளில்[59] பின்வருமாறு கூறினார்கள் : "மக்களே! நிச்சயமாக உங்க ளுடைய இறைவன் ஒருவன் தான். உங்களது தந்தையும் ஒருவர்*

---

*(58) ஆதாரம் : புஹாரி (13), முஸ்லிம் (45), இவ்வார்த்தை முஸ்லிமிலிருந்து பெறப் பட்டதாகும்.*

*(59) இவை அனைத்து விடயங்களையும் ஒருங்கிணைக்கும் மகத்தான உபதேசங் களாகும். நபிமொழித் தொகுப்பில் பல இடங்களில் இவை பதியப்பட்டுள்ளன.*

தான். இறையச்சத்தை தவிர வேறெந்த விதத்திலும் அரபிகளுக்கும் அஜமிகளுக்கும் (அரபியல்லாதவர்கள்) இடையிலோ, சிவப்பன், கறுப்பனுக்கிடையிலோ பாகுபாடு கிடையாது, நான் உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேனா" அப்போது தோழர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் எத்திவைத்து விட்டார்கள் எனக் கூறினார்கள்.[60]

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : 'மக்களே! உங்கள் உயிர்களும், உடைமைகளும் மானங்களும் உங்களின் இறைவனை சந்திக்கும் வரை இந்தப் புனித மாதத்தில் இந்த நாளின் புனிதத்தைப் போன்று, உங்களின் இந்த ஊரின் புனிதத்தைப் போன்று உங்களின் மீது புனிதமானவையாய் இருக்கின்றன என்று கூறினார்கள். பின் "நான் உங்களுக்கு எத்தி வைத்துவிட்டேனா?" எனக் கேட்க, தோழர்கள் ஆம் எனக் கூறினார்கள். அப்போது நபியவர்கள் தனது விரலை வானின்பக்கம் உயர்த்தி இறைவா நீயே சாட்சியாக இருந்து கொள் எனக் கூறினார்கள்.[61]

## ஆறாவது : உள்விவகார அரசியல்

முஸ்லிம்கள் தமக்கிடையே ஒருவரைத் தலைவராக நியமித்து, உறுதிப்பிரமாணம் செய்யுமாறு அல்லாஹ் ஏவியுள்ளான். பிரிந்து விடாமல் ஒரே சமூகமாக ஒற்றுமையுடன் இருக்குமாறும் பணித்துள்ளான். தமது தலைவர்கள், கவர்னர்களுக்குக் கட்டுப்படுமாறும் பணித்துள்ளான், அவர்கள் பாவத்தை ஏவினால் படைத்தவனுக்கு மாறு செய்யும் விடயத்தில் படைப்பினங்களுக்குக் கட்டுப்படுதலில்லை.

இஸ்லாத்தை வெளிப்படுத்தி, அதன்பால் அழைப்பு விடுக்க சக்தியில்லாத பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் இஸ்லாமியப்

---

(60) ஆதாரம் : அஹ்மத் (22978). ஸில்ஸிலா ஸஹீஹாவில் (6 / 199) அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.

(61) ஆதாரம் : புஹாரி (105), முஸ்லிம் (1679), இவ்வார்த்தை புஹாரியிலிருந்து பெறப்பட்டதாகும்.

பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லுமாறு அல்லாஹ் பணித்துள்ளான்.[62] இப்பிரதேசங்கள் என்பன அனைத்து விட யங்களையும் இஸ்லாமிய சட்டப் பிரகாரம் தீர்ப்புச் செய்யப் பட்டு, அல்லாஹ்வின் மார்க்கத்தின் படி தீர்ப்புச் செய்யும் தலை வர் இருக்கும் பிரதேசங்களாகும்.

பிராந்திய எல்லைகள், தேசியவாதம், குலவாதம் போன்றவற்றை இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை. மாறாக முஸ்லிம் இனம் என்ற ரீதியில்தான் பார்க்கின்றது, மக்கள் அல்லாஹ்வுடைய அடியார் கள், பூமி அவனுடையது, அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பற்றிப் பிடிக்கும் நிபந்தனையுடன் இப்பூமியில் எவ்வித எதிர்ப்புமின்றி எங்கும் செல்லலாம். ஏதாவதொன்றில் மார்க்கத்திற்கு முரண் பட்டால் அங்கு அல்லாஹ்வின் சட்டம் நடைமுறைக்கு வரும். அல்லாஹ்வின் சட்டத்தை அமுல்படுத்தி, தண்டனைகளை[63] நிறைவேற்றுவதில்தான் மக்களின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப் பாட்டை நிறுவுதல், அவர்களின் உயிர் பாதுகாப்பு, அவர்களின் மானங்கள், உடமைகளின் பாதுகாப்பு மற்றும் அனைத்து நலவு களும் உள்ளன. அதேவேளை அதனை விடுவதில்தான் அனைத்து கெடுதிகளும் உள்ளன.

மதுப்பாவனை, போதைப்பொருள், ஊக்கமருந்து[64] பாவனை களைத் தடை செய்ததன் மூலம் அல்லாஹ் புத்தியைப் பாதுகாத் துள்ளான். மது அருந்தியவனுக்குரிய தண்டனையாக ஒவ் வொரு தடவையும் 40- 80 கசையடிகளை வைத்துள்ளான். அவ னைத் தடுக்கவும், அவனது புத்தியைப் பாதுகாக்கவும், மக்களை அவனது தீங்கிலிருந்து பாதுகாக்கவுமே இஸ்லாம் இதனைத் தடுத்துள்ளது.

---

(62) அதாவது சக்தி பெற்றாலே இடம்பெயருமாறு பணித்துள்ளான்.

(63) இங்கு தண்டனைகள் என்பது இஸ்லாமிய சட்டத்தில் குறிப்பிட்ட சில குற்றங் களைச் செய்தவருக்கு எதிராக நிர்ணயிக்கப்பட்ட சில தண்டனைமுறைகளாகும்.

(64) இது உடல், மனம் மற்றும் நரம்புகளில் சோம்பலை ஏற்படுத்தும் பொருட்கள்

உரிமையின்றி அத்துமீறுபவனிடமிருந்து பழிக்குப்பழி தீர்ப்ப தன் மூலம் அல்லாஹ் முஸ்லிம்களின் உயிர்களைப் பாதுகாத் துள்ளான். கொன்றவன் கொல்லப்படுவான், காயங்களிலும் பழி தீர்க்கும் சட்டத்தை வைத்துள்ளான். மேலும் தனது உயிர், உடமை, மானத்தைத் தற்காத்துக் கொள்ளுமாறும் பணித்துள் ளான். அல்லாஹ் கூறுகின்றான் : **“அறிவாளிகளே! நீங்கள் [அல் லாஹ் தடுத்தவற்றிலிருந்து விலகி அவனை] அஞ்சிக் கொள்வ தற்காக வேண்டி [கொலைக்குப்] பழிவாங்குவதில் உங்களுக்கு வாழ்க்கை உண்டு”.** *(அல்பகரா : 179).*

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : “தன் செல்வத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடும்போது கொல்லப்பட்டவர் இறைவழியில் உயிர்த்தியாகம் செய்தவர் (ஷஹீத்) ஆவார். மேலும் தன் மார்க்கத்தைப் பாதுகாப்பதற்கா கப் போராடும்போது கொல்லப்பட்டவர் இறைவழியில் உயிர்த் தியாகம் செய்தவர் (ஷஹீத்) ஆவார். மேலும் தன் உயிரைப் பாதுகாப்பதற்காகப் போராடும்போது கொல்லப்பட்டவர் இறைவழியில் உயிர்த்தியாகம் செய்தவர் (ஷஹீத்) ஆவார். மேலும் தன் குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடும் போது கொல்லப்பட்டவர் இறைவழியில் உயிர்த்தியாகம் செய் தவர் (ஷஹீத்) ஆவார்.”[(65)]

அவசியமின்றி பிற முஸ்லிமைப் பற்றிப் புறம் பேசுதல், விபச்சா ரம், ஓரினச்சேர்க்கை போன்ற பண்பாட்டு ரீதியான குற்றங்க ளைக் கொண்டு மார்க்க முறைப்படி நிரூபிக்காமல் பிற முஸ்லிம் மீது அவதூறு கூறுதல் போன்றவற்றைத் தடைசெய்ததன் மூலம் அல்லாஹ் முஸ்லிம்களின் மானத்தைப் பாதுகாத்துள்ளான்.

---

*(65) ஆதாரம் : அபூதாவூத் (2/ 275), நஸாஈ (2/ 316), அஹ்மத் (1652). ஸஹீஹுல் ஜாமிஃ (4172), மற்றும் ஸஹீஹுத் தர்கீபி வத்தர்ஹீப் (1411) ஆகிய நூல்களில் அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.*

விபச்சாரத்தை ஹராமாக்கி, அதனைப் பெரும்பாவங்களில் ஒன் றாகப் பார்ப்பதன் மூலம் முறையற்ற கலப்பிலிருந்து[66] வம் சத்தை அல்லாஹ் பாதுகாத்துள்ளான். பண்பாட்டு ரீதியான குற் றங்களைக் கொண்டு மாசுபடாமல் மானங்களைப் பாதுகாத் துள்ளான். விபச்சாரக் குற்றத்திற்கான தண்டனை நிறைவேற்றுவ தன் நிபந்தனைகள் பூர்த்தியாகும் போது அதனைச் செய்பவ னுக்கு கடுமையான தண்டனையை வைத்துள்ளான்.

திருட்டு, மோசடி, சூது, இலஞ்சம் போன்ற தவறான பொருளீட் டல் முறைகளைத் தடுத்து, திருடன், வழிப்பறிக் கொள்ளைக் காரன் போன்றோருக்குக் கடுமையான தண்டனைகளை விதித் ததன் மூலம் அல்லாஹ் செல்வத்தைப் பாதுகாத்துள்ளான். திருட்டு நிரூபணமாகி, நிபந்தனைகளும் பூர்த்தியானால் அதற் குரிய தண்டனை கையை வெட்டுதலாகும், திருட்டு நிரூபண மாகி வெட்டுவதற்குரிய நிபந்தனைகள் பூர்த்தியாகா விட்டால் அதிலிருந்து தடுக்கும் வகையில் பொருத்தமான தண்டனை வழங்கப்படும்.

இத்தண்டனைகளை விதித்தவன் அனைத்தையும் அறிந்த, ஞான முள்ள இறைவன் அல்லாஹ்வே. தனது படைப்பினங்களின் நிலைகளை சீராக்குவது பற்றி அவனே மிக அறிந்தவன், அவர் களுடன் அவனே மிக இரக்கமுள்ளவன். முஸ்லிம்களில் உள்ள குற்றவாளிகளின் பாவங்களுக்கு பரிகாரமாகவும், அவர்களுடை யவும், பிறருடையவும் தீங்குகளில் இருந்து சமூகத்தைப் பாது காக்கவுமே இத்தண்டனைகளை வைத்துள்ளான்.

கொன்றவனைக் கொல்தல், திருடனின் கையைத் துண்டித்தல் போன்றவற்றைக் குறைகாணும் இஸ்லாத்தின் எதிரிகள் மற்றும் முஸ்லிமென வாதாடுவோர் நோயுள்ள, சீர் கெட்டுப்போன ஓர் உறுப்பைத் துண்டிப்பதையே குறை காண்கின்றனர், அவ்வா

(66) விபச்சாரத்தின் விளைவாக ஒருவன் தனது தந்தையல்லாத வேறொருவனுக்குச் சேர்த்தப்படுவது போன்ற சிதைவுகள், கலப்புகளிலிருந்து அல்லாஹ் வம்சங்களைப் பாதுகாத்துள்ளான்.

றான உறுப்புக்களைத் துண்டிக்காவிட்டால் ஒட்டு மொத்த சமூ கத்திற்கும் அந்நோய் பரவிவிடும்.[67] அதேவேளை தமது அநியா யமான நோக்கங்களுக்காக நிரபராதியான அப்பாவிகளைக் கொல்வதை சரிகாண்கின்றனர்.

## ஏழாவது : வெளிவிவகார அரசியல்

முஸ்லிமல்லாதோரை இஸ்லாத்தின்பால் அழைக்கும்படி முஸ் லிம்களையும் அதன் தலைவர்களையும் அல்லாஹ் பணித்துள் ளான். இறைநிராகரிப்பு எனும் இருள்களிலிருந்து ஈமானெனும் ஒளியின்பால் அவர்களை பாதுகாத்தெடுக்கவும், இந்த உலக வாழ்க்கையின் ஜடவாதங்களில் மூழ்குவதல், முஸ்லிம்கள் உண் மையிலேயே அனுபவிக்கும் ஆன்மீக மகிழ்ச்சியை இழத்தல் ஆகியவற்றிலிருந்து அவர்களை விடுவிக்கவே இவ்வாறு பணித் துள்ளான். முஸ்லிம்களுக்கு அல்லாஹ் இட்டிருக்கும் இக்கட் டளையானது எல்லா மனிதர்களுக்கும் தனது நலவால் பயன ளிக்கும் மற்றும் அனைத்து மனிதர்களையும் காப்பாற்ற முயற்சிக் கும் ஒரு நல்ல மனிதராக இருக்க வேண்டும் என்பதாகும்.

இஸ்லாத்தின் இந்த வழிமுறைகள் மனித சிவில்வழிமுறைக ளுக்கு மாற்றமானதாகும். ஏனெனில் அவை ஒருமனிதன் தனது நாட்டுக்கு நல்லதொரு பிரஜையாக இருப்பதை மாத்திரமே எதிர்பார்க்கின்றது. இது அவ்வழிமுறைகளின் பொருத்தமற்ற தன்மை மற்றும் குறைபாட்டை எடுத்துக்காட்டுவதுடன், இஸ் லாத்தின் பொருத்தத் தன்மை, மற்றும் முழுமையை எடுத்துக் காட்டுகின்றது

இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பாதுகாத்துக் கொள்வதற் காகவும், அல்லாஹ்வுடையவும், அவர்களுடையவும் எதிரி களை அச்சுறுத்துவதற்காகவும் தம்மால் முடியுமானளவு தயா

---

(67) நோயாளி அவரது உடலின் பாதுகாப்பிற்காக அவரதும் அவரது குடும்பத்தின ருடையவும் விருப்பத்துடன் நோய்வாய்ப்பட்ட,அழுகிய உறுப்பை வெட்டுவதை விட இது சிறந்தது.(இது ஒட்டுமொத்த சமூகத்தைப் பாதிப்பதை விட இது மிகப் பொருத்தமானதே)

ராகிக் கொள்ளுமாறு அல்லாஹ் முஸ்லிம்களைப் பணித்துள் ளான். அதேபோன்று தேவையேற்படின் இஸ்லாமிய சட்டத் திற்கு அமைவாக முஸ்லிமல்லாதவர்களுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவும் அனுமதித்துள்ளான். இவ்வாறான ஒப்பந் தங்களை எதிரிகள் முதலில் முறித்தாலே தவிர முஸ்லிம்கள் முறிப்பதையோ, அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வ தையோ தடை செய்துள்ளான். ஏனெனில் அம்முயற்சியையும் ஒப்பந்த முறிவாகவே அவர்கள் உணர்வார்கள்.

முஸ்லிமல்லாதவர்களுடன் போரை ஆரம்பிக்க முன்னர் எதிரி களை முதலில் இஸ்லாத்தின்பால் அழைக்கும்படியும், மறுத் தால் இஸ்லாமிய ஆட்சிக்குக் கட்டுப்பட்டு,(68) வரிப்பணம் செலுத்துமாறு வேண்டுமாறும், அதனையும் மறுத்தாலே குழப் பங்கள் முற்றிலும் நீங்கி,(69) (அல்லாஹ்வின்) மார்க்கம் முற்றி

(68) இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லிம்கள் ஸகாத் வழங்குகின்றனர், முஸ்லிமல்லாத வர்கள் (ஜிஸ்யா) வரி செலுத்துகின்றனர். ஜிஸ்யா வரி என்பது : பெண்கள், சிறார் கள், பைத்தியகாரர்கள், வயோதிபர்கள், வறியவர்கள் அல்லாமல் பருவமடைந்த ஆண்களிடமிருந்து மாத்திரம் அறவிடப்படும் ஒரு தொகைப் பணமாகும். இந்த வரி மிக இலகுவான தொகையாகும், நபியவர்களின் காலத்தில் வருடத்திற்கு ஒரு தீனார் தங்க நாணயத்தை விட அதிகரிக்கவில்லை, இது வசதியுள்ள ஒவ்வொரு வரும் செலுத்த முடியுமான மிக இலகுவான தொகையாகும். இது இஸ்லாமிய அர சின் பாதுகாப்பின் கீழ் அவர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கும், அனைத்து வாழ்க்கை நடவடிக்கைகளையும் அவர்கள் கடைப்பிடிப்பதற்கும், இஸ்லாமிய சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ஆதாயங்களுக்கும் ஈடாகவே அறவிடப்படுகின்றது, தமக்கும் தமது உடமைகள், மானங்களுக்கும் முஸ்லிம்களிடமிருந்து முழுமையான பாது காப்பை அனுபவிக்கின்றார்கள். அதற்கும் மேலாக தமது மார்க்கம், மதஸ்தானங் களுக்கும் கூட பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. முஸ்லிம்களால் இவர்களுடைய உரிமைகள், எதிரிகளிடமிருந்தான பாதுகாப்பு ஆகியவற்றை வழங்க முடியாத பட் சத்தில் பாதுகாப்பு வழங்குதல் என்ற நிபந்தனை இழந்ததால் வரிப்பணத்தைத் திருப் பிக் கொடுத்து விடுகின்றனர். முஸ்லிம் பிரதேசங்களைப் பாதுகாக்கும் போரில் இவர்கள் பங்கெடுத்தாலும் வரி தளர்த்தப்படுகின்றது. முஸ்லிம்களைப் போன்றே அரசாங்கம் இவர்களில் உள்ள வறியவர்கள், நோயாளிகளுக்கான உதவிகளை மேற் கொள்ளும்.

(69) குழப்பங்கள் என்பது மக்களுக்கு இஸ்லாம் சென்றடைவதற்குத் தடையாக இருப்பதும், அவர்களை நிர்ப்பந்திக்காமல் சுயமாக இஸ்லாத்தை ஏற்கத் தடை செய்வதுமாகும்.

லும் அல்லாஹ்வுக்கே ஆகும்வரையில் அவர்களுடன் போர் புரிய வேண்டும் என பணித்துள்ளான்.

யுத்த நேரத்தின் போது கூட அதில் போரிடுவோருடன் கருத்து அல்லது செயல் மூலம் பங்கெடுப்போரைத் தவிர ஏனைய சிறார்கள், பெண்கள், வயோதிபர்கள், மதஸ்தானங்களில் வணங்கிக் கொண்டிருக்கும் துறவிகள் போன்றோரைக் கொலை செய்வதை அல்லாஹ் முஸ்லிம்களுக்கு ஹராமாக்கியுள்ளான். கைதிகளையும் அழகாக நடத்துமாறே அவர்களுக்குப் பணித்துள்ளான். இதிலிருந்து இஸ்லாத்தில் யுத்தம் என்பது அடக்குமுறை, ஆக்கிரமிப்புக்காக நடத்தப்படுவதல்ல, சத்தியத்தை பரவச் செய்து, படைப்புகளுக்கு இரக்கம் காட்டி, படைப்பினங்களை வணங்குவதை விட்டு படைத்தவனை வணங்குவதன்பால் மக்களை வெளியேற்றவே மேற்கொள்ளப்படுகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

## எட்டாவது : சுதந்திரம்

### (1) கொள்கைச் சுதந்திரம் :

முஸ்லிமல்லாதவர்கள் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இருக்கும் போது இஸ்லாத்தை முழுமையாக தெளிவுபடுத்தி, அதன் பால் அழைத்த பின் அவர்களுக்கு அல்லாஹ் கொள்கைச் சுதந்திரத்தை வழங்கியுள்ளான், இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்தால் அவருக்கு வெற்றியும் சுபீட்சமும் உள்ளது. மாறாக தனது மார்க்கத்தையே தேர்ந்தெடுத்தால் இறை நிராகரிப்பு, தோல்வி, நரக வேதனையையே தனக்காகத் தேர்வுசெய்துள்ளார். இதன்மூலம் அவருக்கு சத்தியத்திற்கான ஆதாரம் நிரூபிக்கப்பட்டுவிட்டது. அல்லாஹ்விடம் அவருக்கு எந்தவொரு காரணமும் கூற முடியாது. அப்போது அவர் கட்டுப்பட்டு, வரிப்பணம் செலுத்திக் கொண்டு அவரது கொள்கையிலேயே இருக்க முஸ்லிம்கள் அவரை விட்டு விடுவார்கள். அவர் இஸ்லாமிய சட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டும், முஸ்லிம்கள் முன்னிலையில் தனது மதத்தின் அடையாளங்களை வெளிப்படுத்தக் கூடாது.

ஆனால் ஒரு முஸ்லிம் இஸ்லாத்தில் நுழைந்ததன் பின் வேறு மதங்களுக்கு மாறுவதை ஏற்கப்படமாட்டாது. அவ்வாறு மதம் மாறினால் அவனுக்குரிய தண்டனை கொலையாகும். ஏனெனில் சத்தியத்தை அறிந்ததன் பின் அதிலிருந்து வெளியேறுபவன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி, இஸ்லாத்தின் பால் மீண்டாலே தவிர வாழ அறுகதையற்றவனாகும்.(70)

இஸ்லாத்தை முறிப்பவற்றில் ஒன்றை செய்வதன் மூலம் மத மாற்றம் நிகழ்ந்தால் அதனை விட்டுவிட்டு, அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி மீள வேண்டும்.

இஸ்லாத்தை முறிக்கக்கூடியவை பல உள்ளன. அவற்றில் மிகப் பிரதானமானவை :

இணைவைப்பு : அல்லாஹ்வுக்கு நிகராக இன்னொருவரை வைப்பதே இணைவைப்பாகும். அது பிரார்த்தனை, வணக்கம் போன்றவற்றில் தனக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் இடைத்தரகரை ஏற்படுத்துவதன் மூலமாக இருந்தாலும் சரியே. அதே போன்று இறைவன், வணக்கம் என்பதன் அர்த்தங்களை அறிந்து

(70) ரித்தத் என்பது இஸ்லாத்தை விட்டு நிராகரிப்புக்குச் செல்வதாகும். இஸ்லாத்தை முழுமனதுடன் ஏற்ற யாரும் அவ்வாறு செல்லமாட்டார்கள். எந்த மதமும், கலாச்சாரமும் அவர்களைத் திசை திருப்ப மாட்டாது. ஏனெனில் அவை ஒரு போதும் முழுமை, இறையற்புதத்தை அடைய முடியாது. முஸ்லிம் சமூகத்தில் தேசத்துரோகத்தைத் தூண்டுவதும் அவர்களை நிராகரிப்புக்குத் தள்ளுவதும், மனோஇச்சை, அல்லது பொருள் மற்றும் சமூக நலன்களை நாடுவதும் மதம்மாறுவதின் நோக்கங்களில் உள்ளனவாகும். இந்தக் கோணத்தில் இஸ்லாத்தை விட்டும் மதம்மாறுதல் என்பது பிரதானமான, மிகப் பெரிய இறையியல் உடன்படிக்கைகளை விட்டும் வெளியேறுதலாகும். இது தாயகத்திற்குச் செய்யும் பெரிய தேசத்துரோகத்தை குற்றமாக்குவதற்கும், அதற்கான மரண தண்டனையை விதிப்பதற்கும் தற்போது பெரும்பாலான நாடுகள் ஒப்புதல் அளிப்பதைப் போன்றதாகும். அதன்படி மதம் மாறியவன் முஸ்லிம் சமூகத்திலிருந்து அடியோடு அழிக்கப்பட வேண்டிய நிலைக்கே சீர்குழைவிற்குச் சென்றடைகின்றான். எனினும் மதம்மாறியவனை உறுதிப்படுத்துவது, மரணதண்டனை நிறைவேற்றுவது போன்ற அதிகாரங்கள் நீதிபதியின் கையிலையே உள்ளது. துல்லியமான நீதி நடவடிக்கைகளுக்கு இணங்க, மதம்மாறியவர் என்று குற்றம் சாட்டப்பட்டவர்களின் அநீதியில் இருந்து பாதுகாப்பு பெறப்படுவதுடன், முஸ்லிம் சமூகமும் பாதுகாப்புப் பெறுகிறது.

*வைத்திருந்ததால் பெயரிலும், கருத்திலும் அல்லாஹ்வின் இறை மையை ஏற்றிருந்தாலும் சரி - உதாரணமாக சில நல்லடியார் களைக் குறிக்கும் சிலைகளை அவர்களுடைய பரிந்துரையைப் பெறுவதற்காக அறியாமைக்கால இணைவைப்பாளர்கள் வணங் கியதைப் போன்று - அல்லது அல்லாஹ்வுடன் வேறொரு இறைவனை இணையாக்கின்றோம் என்பதை ஏற்காமல், அவர் களிடம் கேட்பது அல்லாஹ்விடம் கேட்பது போன்றுதான் என்று கூறினாலும் சரி- உதாரணமாக ஓரிறைக் கொள்கையின் பால் அழைப்பவர்களின் அழைப்பை ஏற்காமல், இணைவைப்பு என்பது சிலைகளுக்கு சிரம்பணிவது மாத்திரம்தான் என நினைத்துக் கொண்டிருக்கும் பெயர் தாங்கி முஸ்லிம்களைப் போன்று- அல்லது அல்லாஹ் அல்லாத ஒன்றைப் பார்த்து இறைவன் எனக் கூறுதல் என அனைத்துமே இணைவைப்பா கும்.*

*இந்த பெயர் தாங்கி முஸ்லிம்கள் மதுவருந்தி விட்டு அதற்கு வேறு பெயர் சூட்டுவோரைப் போன்றாகும். அவர்களைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அல்லாஹ் கூறுகின்றான் :* **“எனவே வணக்கத்தை உளத்தூய்மையுடன் அல்லாஹ்வுக்கு மட் டுமே உரித்தாக்கி அவனை வணங்குவீராக! தூய மார்க்கம் அல் லாஹ் ஒருவனுக்கே சொந்தமானதாகும். எவர்கள் அல்லாஹ் அல் லாதவற்றை, தங்களுக்குப் பாதுகாவலர்களாக எடுத்துக் கொண் டிருக்கிறார்களோ அவர்கள், “அத்தெய்வங்கள் எங்களை அல் லாஹ்வுக்கு மிக்க சமீபமாக்கி வைக்கும் என்பதற்காகவே தவிர நாம் இவற்றை வணங்கவில்லை” (என்று கூறுகின்றனர்). அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்கும் இவ்விஷயத்தைப் பற்றி, அல்லாஹ் (மறுமையில்) அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான். நிச்சயமாக அல்லாஹ் (இத்தகைய) பொய்யர்களையும், (மனமுரண்டாக) நிரா கரிப்பவர்களையும் நேரான வழியில் செலுத்துவதில்லை”**

*(அஸ்ஸுமர் : 2-3)*

*மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :* **“அவனே அல்லாஹ் உங்கள் இறைவன். அவனுக்கே அதிகாரம் உள்ளது. அவனையன்றி நீங் கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள், அணுவளவும் அதிகாரம் படைத்தவர்களல்லர். நீங்கள் அவர்களை அழைத்தால் உங்கள் அழைப்பை அவர்கள் செவியுற மாட்டார்கள். செவியேற்பார்கள் என்று வைத்துக் கொண்டாலும் உங்களுக்குப் பதில் தர மாட்டார் கள். கியாமத் நாளில் நீங்கள் இணைகற்பித்ததை அவர்கள் மறுத்து விடுவார்கள். நன்கறிந்த (இறை)வனைப் போல் உமக்கு எவரும் அறிவிக்க முடியாது”.** *(பாதிர் : 13,14)*

*1- யூதர்கள், கிறஸ்தவர்கள், நாத்திகர்கள், நெருப்பு வணங்கிகள், அல்லாஹ் இறக்கி வைக்காததை கொண்டு தீர்ப்புச் செய்பவர்கள், அவனது தீர்ப்பைப் பொருந்திக் கொள்ளாதோர் போன்ற காபிர் களை காபிர்கள் என ஏற்றுக் கொள்ளாமல் இருத்தல், அவர்கள் அல்லாஹ்வை நிராகரிப்போர் என்று அறிந்த பின்னரும் காபிர் என ஏற்றுக்கொள்ளாமல் இருப்போரும் காபிராகி விடுகின்ற னர்.*

*2- பெரிய இணைவைப்பை ஏற்படுத்தும் சூனியம். எனவே சூனி யம் செய்பவர், அதைச் செய்பவர் காபிர் என்று அறிந்த பின்ன ரும் அதனைப் பொருந்திக் கொள்பவர் ஆகியோரும் காபிராகி விடுகின்றனர்.*

*3- இஸ்லாமிய சட்டத்தை விட பிறரின் சட்டம், ஒழுங்கு பரி பூரணமானது என்றோ, நபி (ஸல்) அவர்கள் வகுத்தளித்த சட் டங்களை விட பிறருடைய சட்டங்கள் சிறந்தது என்றோ, அல் லது அல்லாஹ்வின் சட்டமின்றி தீர்ப்புச் செய்யலாம் என்றோ கருதுதல்.*

*4- நபி (ஸல்) அவர்களையோ, அவர்களுடைய ஷரீஅத் என அறிந்த ஒன்றையோ வெறுத்தல்.*

*5- இஸ்லாத்திலுள்ள ஒரு விடயத்தைப் பரிகாசித்தல்.*[71]

---

*(71) அல்லாஹ்வையோ, முஹம்மத் (ஸல்), மூஸா (அலை), ஈஸா (அலை) போன்ற இறைத்தூதர்களையோ, இஸ்லாத்திலுள்ள ஒரு விடயத்தையோ பரிகாசித்தல்.*

*6-* இஸ்லாம் வெற்றி பெறுவதை வெறுத்தல், அல்லது தோல்வி யுறுவதைப் பார்த்து மகிழ்தல்.

*7-* காபிர்களை நேசிப்பவர்கள் அவர்களைச் சார்ந்தவர்கள் என் பதை அறிந்து கொண்டே அவர்களை நேசித்தல், அவர்களுக்கு உதவுதல்.

*8-* நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்திலிருந்து வெளியேற யாருக்கும் அனுமதியில்லை என்பதை அறிந்து கொண்டே இச் சமுதாயத்தில் (குறிப்பிட்ட) சிலருக்கு அவ்வாறு வெளியேற அனுமதியுள்ளது என்று நம்புதல்.

*9-* அல்லாஹ்வின் மார்க்கத்தை முற்றிலும் புறக்கணித்து, அதனை நினைவூட்டிய பின்னரும் கற்றுக் கொள்ளாமலோ, அதன்படி செயல்படாமலோ இருப்பவனும் காபிராகி விடு வான்.

*10-* இஸ்லாத்தில் அவசியம் அறிந்திருக்க வேண்டிய, ஒருமித்துக் கூறப்பட்ட சட்டங்களில் ஒன்றை மறுத்தல். இஸ்லாத்தை முறிக் கும் இச்செயல்களுக்கு அல்குர்ஆன், ஸுன்னாவில் பல ஆதாரங் கள் உள்ளன.

**(2) கருத்துச் சுதந்திரம் :**

இஸ்லாமியப் போதனைகளுக்கு முரண்படலாகாது என்ற நிபந் தனைக்கமைய இஸ்லாத்தில் அல்லாஹ் கருத்துச் சுதந்திரத்தை வழங்கியுள்ளான். நிந்தனை செய்வோரின் நிந்தனையைப் பொருட்படுத்தாமல் எவர் முன்னிலையிலும் சத்தியத்தைக் கூற வேண்டுமென முஸ்லிமுக்குப் பணித்துள்ளான். அதனை சிறந்த அறப்போரில் ஒன்றாக ஆக்கியுள்ளான். முஸ்லிம் தலைவர்க ளுக்கு நல்லுபதேசம் வழங்குமாறும், தவறுகளைத் தடுக்குமாறும் பணித்துள்ளான். அசத்தியத்தின்பால் அழைப்பவனுக்கு மறுப் பளித்து, தடுத்து நிறுத்துமாறும் பணித்துள்ளான். கருத்தை மதிக்க இது மிகப்பெரிய மற்றும் அழகானதோர் ஒழுங்கமைப் பாகும். (ஆனால் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில்) இஸ்லாத்

திற்கு முரணான கருத்துக்களை வெளிப்படுத்த அனுமதிக்கப் பட மாட்டாது. ஏனெனில் அது அழிவு, சீர்குழைவு, மற்றும் உண்மைக்கெதிரான போராட்டமுமாகும்.

**(3) தனியார் சுதந்திரம் :**

இஸ்லாமிய சட்ட வரையறைகளுக்கு உட்பட்ட விதத்தில் அல் லாஹ் தனியார் சுதந்திரத்தையும் வழங்கியுள்ளான். ஆண், பெண் அனைவருக்கும் கொடுக்கல், வாங்கல், நன்கொடை, வக்பு செய் தல், மன்னித்தல் போன்ற தமக்கு மத்தியில் உள்ள தொடர்புக ளில் சுதந்திரத்தை வழங்கியுள்ளான். ஆண், பெண் இருபாலா ருக்கும் தமக்குரிய துணையைத் தேர்வுசெய்யும் உரிமையை வைத்துள்ளான், விருப்பமில்லாதவர்களுடன் வாழ நிர்ப்பந்திக் கப்பட மாட்டார்கள். மார்க்கத்தில் தனக்குப் பொருத்தமில் லாத ஒருவனை ஒரு பெண் தேர்வு செய்யும் பட்சத்தில் அவளு டைய கொள்கை, கௌரவத்தை பாதுகாப்பதற்காக அத்தேர் வுக்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. இது அவளுடையவும், அவளது குடும்பத்துடையவும் நலனுக்காகவாகும்.

ஒரு பெண்ணின் பொறுப்பாளிதான் - ஆண்களில் அவளுக்கு மிக நெருங்கிய உறவினர், அல்லது பிரதிநிதி - அவளின் திரும ணத்திற்குப் பொறுப்புதாரியாக வர வேண்டும். ஏனெனில் ஒரு பெண் சுயமாக திருமணம் செய்து கொள்ள முடியாது, அது விபச்சாரத்திற்கு ஒப்பானதாகும். அந்தப் பொறுப்பாளி மண மகனிடம் இன்ன பெண்ணை உமக்குத் திருமணம் செய்து வைக் கிறேன் எனக் கூறியதும் மணமகன் இத்திருமணத்தை நான் ஏற் றுக் கொள்கின்றேன் எனக் கூற வேண்டும். இவ்வொப்பந்ததிற்கு இருவர் சாட்சிகளாக கலந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் ஒரு முஸ்லிமுக்கு விதித்துள்ள வரையறையைத் தாண்ட இஸ்லாம் அனுமதிப்பதில்லை. அவனும், அவனுடைய அனைத்து உடமைகளும் அல்லாஹ்வுக்கே சொந்தமானவை. எனவே அல்லாஹ் தனது அடியார்கள் மீது கொண்ட கருணை யின் காரணமாக அவர்கள் மீது விதித்த சட்ட வரையறைக

ளுக்கு உள்ளிருந்தே செயல்பட வேண்டும். அதனைப் பற்றிப் பிடிப்பவன் நேர்வழி பெற்று, வெற்றியும் பெறுவான், முரண் பட்டவன் வழிகெட்டு, அழிந்தும் விடுவான். இதனால்தான் விபச்சாரம், ஓரினச்செர்க்கை போன்றவற்றை வன்மையாகத் தடை செய்துள்ளான். தற்கொலை செய்தல், அல்லாஹ் அவ னைப் படைத்த உருவமைப்பை மாற்றுதல் போன்றவற்றையும் ஹராமாக்கியுள்ளான்.

மீசையை கத்தரித்தல், நகம் வெட்டுதல், மருமஸ்தான முடிகளை மழித்தல், அக்குள் முடிகளை நீக்குதல், விருத்தசோதனம் (கத்னா) செய்தல் போன்றன அல்லாஹ் ஏவியற்காகவே செய்யப் படுகின்றன.

அல்லாஹ்வின் எதிரியான மாற்றுமதத்தவர்களுக்கு அவர்களது பிரத்தியேக விடயங்களில் ஒப்பாகுவதை அவன் முஸ்லிமுக்குத் தடை செய்துள்ளான். ஏனெனில் வெளிப்படையான விடயங்க ளில் அவர்களுக்கு ஒப்பாகி, அவர்களை நேசிப்பதானது உள்ளத் தாலும் அவர்களுக்கு ஒப்பாகி, அவர்களை நேசிக்க வழிசெய் கின்றது.

அல்லாஹ் ஒரு முஸ்லிமிடமிருந்து எதிர்பார்ப்பது அவன் சரி யான இஸ்லாமிய சிந்தனைகளின் தோற்றுவாயாக இருக்க வேண்டும் என்பதே தவிர, பிறமனித சிந்தனைகள், கருத்துக் களை இறக்குமதி செய்யக் கூடியவனாக அல்ல. ஒரு முஸ்லிம் அழகிய முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்று விரும்புகின் றானே தவிர கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவனாக அல்ல.

சரியான தொழில்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத் தைப் பொறுத்தவரை, இஸ்லாம் அவற்றைக் கற்றுக் கொள்ளவும் அவற்றை ஏற்றுக் கொள்ளவும் கட்டளையிடுகிறது. அதனைக் கண்டுபிடித்தவர் முஸ்லிமல்லாதவராக இருந்தாலும் சரியே. ஏனெனில் மனிதனுக்குக் கற்றுக் கொடுத்தவனே அல்லாஹ் தான். அவன் கூறுகின்றான் : **“[அதன் மூலம்] மனிதன் அறியாத வற்றை எல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுக்கிறான்”.**

(அல்அலக் : 5).

ஒரு மனிதன் தனது சுதந்திரத்திலிருந்து பயனடைவதற்கும், அவரது கௌரவத்தைக் காத்துக் கொள்வதற்கும், தனது தீமை மற்றும் மற்றவர்களின் தீமைகளிலிருந்து பாதுகாப்பதற்கும் இது ஓர் உயர்ந்த அறிவுரை மற்றும் சீர்திருத்தமாகும்.

**(4) வாழ்விட சுதந்திரம் :**

வாழ்விட சுதந்திரத்தையும் அல்லாஹ் முஸ்லிமுக்கு வழங்கியுள்ளான். எனவே அவனிருக்குமிடத்திற்கு அவனது அனுமதியின்றி யாரும் நுழைய முடியாது, அவனது அனுமதியின்றி யாரும் அவனிருக்குமிடத்தை நோட்டமிடவும் முடியாது.

**(5) பொருளீட்டல் சுதந்திரம் :**

அல்லாஹ் விதித்துள்ள வரையறைகளுக்குள் சம்பாதித்து, செலவு செய்யும் சுதந்திரத்தையும் அவன் முஸ்லிமுக்கு வழங்கியுள்ளான். தனக்கும் தனது குடும்பத்திற்கும் போதியளவு, மற்றும் நற்காரியங்களில் செலவிடுவதற்காக வேலை செய்து சம்பாதிக்கும் படி ஏவியுள்ளான். அதேவேளை வட்டி, சூது, இலஞ்சம், திருட்டு, மற்றும் ஜோசியம், சூனியம், விபச்சாரம், ஓரினச் செயர்க்கை போன்றவற்றினூடாகக் கிடைக்கும் ஊதியம் போன்ற மோசமான பொருளீட்டலைத் தடைசெய்தும் உள்ளான். உருவச் சித்திரங்கள்,(72) மது, பன்றி, இசைக்கருவிகள் போன்ற தடுக்கப்பட்டவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்தையும், தடைசெய்யப்பட்ட பாடல், நடன நிகழ்ச்சிகள் மூலம் கிடைக்கும் கூலிகளையும் ஹராமாக்கியுள்ளான்.

மேற்கண்ட வழிகளில் சம்பாதிப்பது ஹராம் என்பது போன்றே அவற்றுக்காக செலவிடுவதும் ஹராமாகும். எனவே மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட முறையில் மாத்திரமே ஒரு முஸ்லிம்

(72) உருவச் சித்திரம் என்பது கையினால் வரையப்பட்ட, பலகை போன்றவற்றில் செதுக்கப்பட்ட, களிமண் போன்றதால் உருவாக்கப்பட்ட அனைத்து உயிருள்ள பொருட்களுமாகும். இவை உருவம் வரைபவர்கள் பற்றி இடம்பெற்றுள்ள எச்சரிக்கைகளில் அடங்குகின்றன.

செலவிட முடியும். ஹலாலான வருவாயுடன் பணக்காரராக வாழ்வதற்கும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும், இது மனிதனின் சம்பாத்தியம் மற்றும் செலவினம் தொடர்பான மிக உயர்ந்த அறிவுரை, வழிகாட்டுதல் மற்றும் சீர்திருத்தமாகும்.

## ஒன்பதாவது : குடும்பம்

இஸ்லாமிய ஷரீஅத்தில் அல்லாஹ் குடும்பக் கட்டமைப்பை மிக அழகாகக் கட்டமைத்துள்ளான். அதனை முறையாக எடுப்போருக்கு வெற்றியின் வாயில்கள் அமைவது நிச்சயம். பெற்றோர் விடயத்தில் நல்வார்த்தை, பணிவிடை செய்தல் மூலமும், தொலைவில் இருந்தால் அடிக்கடி சந்தித்தல், அவர்கள் இருவருமோ, ஒருவரோ வறுமையில் இருந்தால் அவர்களுக்கு செலவு செய்து, தங்குமிடம் ஏற்பாடு செய்து கொடுத்தல் போன்றவற்றின் மூலமும் உபகாரம் செய்யுமாறு பணித்துள்ளான். பெற்றோரைப் புறக்கணித்தவர்களுக்குத் தண்டனை உள்ளதாக எச்சரித்துள்ளதுடன், உபகாரம் செய்பவர்களுக்கு வெற்றி உள்ளதாகவும் வாக்களித்துள்ளான். திருமணத்தை மார்க்கத்தின் ஓர் அங்கமாக ஆக்கி, அதற்கான உள்நோக்கங்களை அல்குர்ஆன், நபிமொழிகள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளான்.

## திருமணம் விதியாக்கப்பட்டதற்கான நோக்கங்கள் :

**1.** பத்தினித்தனம், விபச்சாரத்திலிருந்து கற்பைப் பாதுகாத்தல், தவறான பார்வைகளை விட்டும் கண்ணைப் பாதுகாத்தல் போன்றவற்றுக்குப் பிரதான காரணமாக திருமணம் திகழ்கின்றது.

**2.** திருமணத்தின் மூலம் ஒவ்வொரு தம்பதியினருக்கும் தனது துணையினால் நிம்மதி, அமைதி கிடைக்கின்றது. ஏனெனில் அல்லாஹ் அவ்விருவருக்கு மத்தியில் அன்பையும் கருணையையும் வைத்துள்ளான்.

**3.** திருமணத்தின் மூலம் தூய்மை, நலவு அடங்கிய சட்டபூர்வமான முறையில் முஸ்லிம்களின் சனத்தொகை வளர்ச்சி அதிகரிக்கின்றது.

4. திருமணத்தில், ஒவ்வொரு தம்பதியினரும் தமது கடமை களைச் செய்யும்போது அல்லாஹ் அவரவர்க்கு வைத்த இயல் புக்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் தனது துணைக்கு உதவி செய் கிறார்கள்.

ஓர் ஆண் தனது மனைவி, பிள்ளைகளுக்கு செலவு செய்வதற் காக வெளியில் சென்று சம்பாதிக்கின்றான். பெண்ணோ வீட் டிற்குள் வேலை செய்கின்றாள், அவள் கருத்தரித்து குழந்தை களைப் பிரசவிக்கின்றாள், பாலூட்டுகின்றாள், பராமரிக்கின் றாள், கணவனுக்காக உணவு தயார் செய்கின்றாள், வீடு, படுக்கை யறை அனைத்தையும் ஒழுங்குபடுத்துகின்றாள். கணவன் களைப் புடனும், சோர்வுடனும் வீட்டினுள் நுழைந்ததும் அவை அனைத்தும் மனைவி, பிள்ளைகளைக் கண்டதும் போய் மன நிம்மதியடைகின்றான். முழுக் குடும்பமும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்கின்றனர்.

ஒரு பெண் தனது கணவனின் திருப்தியுடன் சில சம்பாத்தி யங்களை சுயமாக செய்யவோ, கணவனுக்குத் துணையாக அவ ரது தொழிலில் உதவிபுரியவோ தடையேதுமில்லை. எனினும் அவள் செய்யும் அத்தொழில் தனது வீட்டிலோ, குடும்பத் திலோ, தோட்டத்திலோ, அல்லது கணவனின் தோட்டத் திலோ பணியாற்றுவதைப் போன்று கலப்படமின்றி, ஆண்களை விட்டும் தூரமான இடத்தில் இருப்பது அவசியமாகும். தொழிற் சாலை, அலுவலகம், கடை போன்ற ஆண்களுடன் கலந்திருக்க நேரிடும் இடங்களில் பணிபுரிவது பெண்களுக்குக் கூடாது. அவள் சுயவிருப்பத்தின் பேரில் செல்ல நினைத்தாலும் கண வனோ, அவளின் பெற்றோர், உறவினர்களோ அவளை அனு மதிக்கலாகாது. அதில் அவளும் சமூகமும் சீர்குழைவுக்கு உட் பட அதிக வாய்ப்புள்ளது.

ஒரு பெண் தனது வீட்டிலே பாதுகாக்கப்பட்டு, ஆண்களுடன் கலந்துறவாடாமல் இருக்கும் வரை பாதுகாப்பாக இருப்பாள், தீய கரங்கள் அவளைத் தொட மாட்டாது, மோசமான பார்வை

கள் அவளைத் தீண்டமாட்டாது. அவள் மக்களுக்கு மத்தியில் வெளியே சென்றால் வீணாகிவிடுவாள், ஓநாய்களுக்கு மத்தியில் சிக்கிய ஆட்டுக்குட்டியைப் போன்று ஆகிவிடுவாள். சில வேளை குறுகிய நேரத்திற்குள்ளேயே தீயவர்கள் அவளுடைய கண்ணியம், கௌரவத்தை கீறிக்கிழிக்காமல் இருக்க மாட்டார்கள்.

கணவனுக்கு ஒரு மனைவி மூலம் திருப்தி கிடைக்காவிடின் தங்குமிடம், செலவு, தாம்பத்யம் போன்றவற்றில் நீதமாக செயற்படும் நிபந்தனையுடன் மேலதிகமாக நான்கு வரை திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் உள்ளத்தில் ஏற்படும் நேசத்தில் நீதம் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனை கிடையாது. ஏனெனில் இது மனித கட்டுப்பாட்டை மீறிய விடயமாகும், அதற்காக அவன் வஞ்சிக்கப்பட மாட்டான், மேலும் அதனை அல்லாஹ் அல்குர்ஆனிலும் சாத்தியமற்றதாகக் கூறியுள்ளான் : **“(முஃமின்களே!) நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும், மனைவியரிடையே நீங்கள் நீதம் செலுத்த சாத்தியமாகாது”.** (அந்நிஸா : 129). இது நேசம் மற்றும் அதனை ஒத்தவைகளைக் குறிக்கின்றது. இது நீதியாகும், அல்லாஹ் அதில் ஏற்படும் குறையை பலதார மணம் செய்வதற்கு ஒரு தடையாக ஆக்கவில்லை. ஏனெனில் அது சாத்தியமில்லை.

இறைத்தூதர்களுக்கும், வெளிப்படையாக நீதமாக நடந்து கொள்ள முடியுமானவர்களுக்கும் அல்லாஹ் பலதார மணத்தை மார்க்கமாக்கியுள்ளான். ஏனென்றால், அவர்களுக்கு நல்லது எது என்பதை அல்லாஹ் நன்கு அறிவான், எனவே இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் நல்லது. ஏனென்றால், ஓர் ஆரோக்கியமான ஆணுக்கு பாலியல் முன்கணிப்பு உள்ளது, அதனால் தான் அவன் நான்கு பெண்களின் பாலியல் தேவைகளை பூர்த்தி செய்து, அவர்களை பத்தினிகளாக இருக்க வைக்க முடியும். இதுவே கிறிஸ்தவர்கள்[73] மற்றும், இஸ்லாத்தைப் பற்றி தவறாக

(73) நபி ஈஸா (அலை) பலதார மணத்தைத் தடை செய்யவில்லை, மாறாக கிறிஸ்தவர்கள் தமது மனோஇச்சைக்குக் கட்டுப்பட்டே தடுத்துக் கொண்டார்கள்.

வாதாடுபவர்கள் கூறுவது போன்று ஒரு பெண்ணுடன் மாத்தி ரம் மட்டுப்படுத்தப்பட்டால், அதனால் பின்வரும் தீமைகள் ஏற்படும் :

முதலாவது : கணவர் விசுவாசியாக இருந்து அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுபவராக இருந்தால் அவர் தனது வாழ்க்கையை ஓர ளவு இழப்பை உணர்ந்து வாழக்கூடும், மேலும் அவரது ஹலா லான இயற்கைத் தேவை அடக்கப்படுகிறது. ஏனெனில் ஒரு பெண் கருத்தரித்து இறுதி மாதங்கள், பிரசவகாலம், மாத விடாய், நோய் போன்ற சந்தர்ப்பங்களில் அவளிடம் சுகம் அனுபவிக்க முடியாமல் போகின்றது, எனவே வாழ்வின் சில நாட்களை மனைவி இல்லாததைப் போன்று வாழ்கின்றான். இது அவளுக்கு இவன் மீது ஈடுபாடிருந்து, இருவரும் பரஸ்பரம் நேசிக்கக் கூடியவர்களாக இருந்தாலே இந்த நிலமை. அதுவே அவளுக்கு இவன் மீது ஈடுபாடில்லையெனில் நிலமை இதை விட மோசமாகி விடுகின்றது.

இரண்டாவது : அக்கணவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்து மனைவிக்கும் துரோகம் செய்யும் ஒருவராக இருந்தால் அவ ளைப் புறக்கணித்து விட்டு விபச்சாரத்தில் ஈடுபடுவான். பல தார மணத்தை ஆதரிக்காத எத்தனையோ நபர்கள் எண்ணிக் கையே இல்லாமல் விபச்சாரம், துரோகத்தில் ஈடுபடுகின்றனர். மார்க்கமாக்கப்பட்ட பலதார மணத்தை அல்லாஹ்தான் அனு மதித்தான் என்று அறிந்து கொண்டே அதற்கெதிராகப் போராடி, அதனைக் குறை கூறினால் அவன் காபிர் எனத் தீர்ப்பு வழங்கப்படுவது மேற்கண்டதை விடப் பாரிய ஒன்றாகும்.

மூன்றாவது : பலதார மணம் தடுக்கப்பட்டால் பல பெண்கள் திருமணம் மற்றும் சந்ததியை விட்டும் தடுக்கப்படுகின்றனர். அவர்களில் பத்தினித்தனமான நல்ல பெண்கள் விதவையாக வும், பிரமச்சாரியாகவும், பாக்கியமற்றவளாகவும் வாழத்தலைப் படுகின்றார்கள். ஏனையவர்கள் தீயவர்கள் இவர்களது மானத்து டன் விளையாடும் அளவுக்கு ஒழுக்கமற்ற விபச்சாரிகளாக வாழ் கின்றனர்.

போர்கள் மற்றும் ஆண்கள் செய்யும் ஆபத்தான வேலைகள் காரணமாக அவர்கள் இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்ப தால் சனத்தொகையில் ஆண்களை விட பெண்கள் அதிகம் என்று அறியப்படுகிறது. அதேபோன்று பெண்கள் பருவமடைந் தது முதலே அவர்கள் திருமணத்திற்குத் தயாராகி விடுகின்றனர். ஆனால் ஆண்கள் அனைவரும் அவ்வாறு தயார் நிலையில் இல்லை, ஏனெனில், அவர்களில் பலர் மஹர் (மணமகள் கொடுப்பனவு) மற்றும் திருமண வாழ்க்கையின் செலவுகளை ஏற்பாடு செய்ய முடியாததால் திருமணம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதன் மூலம் இஸ்லாம் பெண் களுடன் நடுநிலையாகவே நடந்து, அவர்களுக்கு கருணையே காட்டியுள்ளது என்பது புலனாகின்றது.

பலதார மணத்தை எதிர்ப்போர் பெண்களுக்கும், நல்ல பழக்கங் களுக்கும், நல்லொழுக்கம், நபிமார்களுக்கும் எதிரிகளாகவே இருக்கின்றனர். பலதார மணம் நபிமார்களின் வழிமுறையாகும், ஏனெனில் அல்லாஹ் அவர்களுக்கு விதித்த சட்டத்தின் படி பல பெண்களைத் திருமணம் செய்து ஒரே நேரத்தில் அவர்களுடன் வாழ்கின்றனர்.

தனது கணவன் பலதார மணம் செய்யும் போது மனைவிக்கு ஏற்படும் உரோசம், கவலை போன்றன உணர்ச்சிவசமானதா கும். எந்தவொரு விடயத்திலும் மார்க்கத்தை விட உணர்ச்சியை முற்படுத்தலாகாது. வேண்டும் என்றால் ஒரு பெண்ணுக்கு தனது திருமண ஒப்பந்தத்தின் போதே இரண்டாம் தாரம் செய் யக் கூடாதென நிபந்தனையிடலாம். அதனைக் கணவர் ஏற்றுக் கொண்டால் அமுல்படுத்துவது கட்டாயமாகும். அதையும் மீறி திருமணம் செய்ய முடிவெடுத்தால் முதல் மனைவிக்கு சேர்ந்து வாழவோ, திருமணத்தை இரத்துச் செய்யவோ உரிமையுண்டு. அப்போது கொடுத்த மஹ்ரிலிருந்து எதனையும் கணவனுக்கு திருப்பி எடுக்க முடியாது.

விவாகரத்தையும் அல்லாஹ் (குடும்ப வாழ்க்கையில்) அறிமுகப் படுத்தியுள்ளான். குறிப்பாக தம்பதியினருக்கு இடையே கருத்து வேறுபாடு, பிளவுகள் இருக்கும் போதும், ஒருவர் மற்றவரை நேசிக்காத போதும், தொடர்ந்தும் பிரச்சினை, துரதிஷ்டத்தி லேயே வாழாமலிருக்கவும், ஒவ்வொருவரும் திருப்தியான மற்று மொரு துணையைத் தேடி வாழ்வின் எஞ்சிய பகுதியை மகிழ்ச் சியாகக் கழிக்கவும், இஸ்லாத்திலேயே இருவரும் மரணித்தால் மறுமையில்(74) வெற்றி பெறவுமே அல்லாஹ் விவாகரத்தை வைத்துள்ளான்.

## பத்தாவது : ஆரோக்கியம்

வைத்தியத் துறையின் அனைத்து அடிப்படைகளையும் இஸ்லா மிய சட்டம் கூறியுள்ளது, அலகுர்ஆனிலும், நபிமொழிகளிலும் அதிகமான உளவியல், உடலியல் நோய்களும் அவற்றுக்கான உடல் மற்றும் ஆன்மீக நிவாரணிகளும் உள்ளன. அல்லாஹ் கூறுகின்றான் : **“இன்னும், நாம் முஃமின்களுக்கு ரஹ்மத்தாக வும், அருமருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் [படிப்படியாக] இறக்கிவைத்தோம்”.** (அல்இஸ்ராஃ : 82), மேலும் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : “எந்தவொரு நோயையும் அதற்குரிய நிவாரணி இல்லாமல் அல்லாஹ் இறக்கி யதில்லை. அதனை அறிந்தவர் அறிந்து கொண்டார், அறியாத வர் அறியாதிருக்கின்றார்”.(75)

(74) திருமணமாகாத அல்லது விவாகரத்துப் பெற்ற நல்லடியார்களான முஸ்லிம் பெண்கள் மறுமையில் மீளெழுப்பப்பட்டு, விசாரணைக்குப் பின் சுவனம் நுழைந் ததும் சுவனத்து ஆண்களிலே தாம் விரும்பியவரை தேர்வு செய்து மணந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படுவர். முஸ்லிமான ஒரு மனைவி பல திருமணங்கள் செய் திருந்த நிலையில் மரணித்திருந்தால் உலகில் தனக்கு மிக நேசமான கணவர் சுவன வாதியாக இருக்கும் பட்சத்தில் அவரையேத் தேர்ந்தெடுப்பாள்.

(75) ஆதாரம் : அஹ்மத் (1/ 377, 413, 453), இப்னு மாஜா (2/ 340), இப்னு ஹிப்பான் (1394), ஹாகிம் (4/ 196), ஸில்ஸிலா ஸஹீஹாவில் (451) அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "நீங்கள் சிகிச்சை செய்யுங்கள், ஆனால் தடுக்கப்பட்டதைக் கொண்டு சிகிச்சை செய்யாதீர்".[76] இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்களுடைய "ஸாதுல் மஆத் பீ ஹத்யி கைஃரில் இபாத்" எனும் நூலில் இது விவரமாகக் கூறப்பட்டுள்ளது, அதனை வாசித்துப் பார்க்கவும், அந்நூல் இஸ்லாத்தைத் தெளிவு படுத்துவதிலும், நபி (ஸல்) அவர்களின் வரலாற்றிலும் மிகப் பயனுள்ள, ஆதாரபூர்வமான, முழுமையான ஒரு நூலாகும்.

பதினொராவது : பொருளாதாரம், வர்த்தகம், தொழில் மற்றும் விவசாயம், நீர், உணவு, பொது பயன்பாடுகள் மற்றும், நகரங்கள் மற்றும் கிராமங்களின் பராமரிப்பு, அவற்றின் தூய்மை, அவற்றில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், மற்றும் மோசடி, பொய்களுக்கு எதிரான போராட்டம் போன்ற மக்களுக்குத் தேவையானவை அனைத்தையும் இஸ்லாம் விளக்கமாகவும், முழுமையாகவும் கூறியுள்ளது.

பன்னிரண்டாவது : மறைமுக எதிரிகளும் அவர்களிடமிருந்து விடுபடும் முறையும் : அல்லாஹ் அல்குர்ஆனில் முஸ்லிமான அடியார்களுக்கு எதிரிகள் உள்ளதாகத் தெளிவுபடுத்தியுள்ளான். அவர்களுக்கு வழிப்பட்டு, பின்பற்றினால் ஈருலகிலும் அவர்களை அழிவிக்கே இழுத்துச் செல்வர் என எச்சரிக்கை செய்து, அவர்களிடமிருந்து தப்பிக்கும் முறையையும் தெளிவுபடுத்தியுள்ளான். இந்த எதிரிகள் வருமாறு :

1. சபிக்கப்பட்ட ஷைத்தான் : அவன்தான் பிற எதிரிகளையும் மனிதனுக்கெதிராகத் தூண்டி, உசுப்பி விடுபவனாகும். அவன் தான் எமது தந்தை ஆதம் (அலை), எமது தாய் ஹவ்வா (அலை) இருவரையும் சுவனத்திலிருந்து வெளியேற்றிய எதிரி. உலக முடிவு வரை மனித இனத்திற்கு அவனே நிரந்திர எதிரியாவான். தன்னுடன் அவர்களையும் நரகில் நிரந்தரமாக்கும் வரை இறை

(76) ஆதாரம் : அபூதாவூத் (3874), ஸஹீஹுல் ஜாமிஇல் (1762) அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.

நிராகரிப்பில் அவர்களை வீழ்த்த அயராது முயற்சிக்கின்றான் - அல்லாஹ் பாதுகாப்பானாக - இறைநிராகரிப்பில் வீழ்த்த முடியாதோரை அல்லாஹ்வின் கோபம், தண்டனைக்கு உட்படுத்தக் கூடிய பாவங்களிலேயாவது வீழ்த்த முயற்சிக்கின்றான்.

ஷைத்தான் மனிதனில் இரத்தநாளங்களில் எல்லாம் ஊடுறுவும் ஓர் ஆன்மாவாகும். அவனது உள்ளத்தில் ஐயத்தைத் தோற்றுவித்து, தனக்கு வழிப்படும்போது தீமையில் வீழ்த்த அதனை அழகாகக் காட்டுகின்றான். அவனிடமிருந்து தப்பிக்கும் முறை அல்லாஹ் தெளிவுபடுத்தியதைப் போன்று கோபம் ஏற்படும் போதும், பாவம் செய்ய எத்தனிக்கும் போதும் அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம் எனக் கூற வேண்டும், தனது கோபத்தின் படி செயல்படவோ, பாவத்தை செய்யவோ கூடாது.

மேலும் அவன் தனக்குள்ளேயே உணரும் தீமைக்கான உந்துதல் அவன் அழிந்துபோகும் பொருட்டு ஷைத்தானிடமிருந்து வந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பின்னர் அவன் இந்த மனிதனை விட்டும் விலகிவிடுவான். அல்லாஹ் கூறுகின்றான் : **“நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு எதிரியாக இருக்கிறான். ஆகவே, அவனை நீங்களும் எதிரியாகவே கருதுங்கள். அவன் (தன்னைப் பின் பற்றிய) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம் அவர்கள் நரகவாசிகளாகி விடுவதற்காகவே”.** (பாதிர் : 6).

**2.** மனோ இச்சை : பிறரிடமிருந்து உண்மை வெளிப்படும் போது அதனை ஏற்காமல் தட்டும் ஆசை, அல்லாஹ்வின் சட்டத்தை ஏற்காமல் தட்டும் ஆசை போன்றனவும் இதில் அடங்குகின்றன. ஏனெனில் இவை அவனது விருப்பத்திற்கு முரணானவையாகும். உண்மை, நீதியை விட உணர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பதும் மனோ இச்சையில் உள்ளது தான். இந்த எதிரியிடமிருந்து தப்புவதற்கான வழி அல்லாஹ்விடம் மனோஇச்சையைப் பின்பற்றுவதை விட்டும் பாதுகாப்புத் தேடுதல், அதற்கு பதிலளித்து பின்பற்றாமல் இருப்பது, கசப்பாயிருந்தாலும்

உண்மை உரைத்து, அதனை ஏற்றுக் கொள்ளல், ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடல் என்பனவாகும்.

**3.** தீமையைத் தூண்டும் உள்ளம் : விபச்சாரம், மது அருந்தல், ரமழானில் பகல் வேளையில் தகுந்த காரணமின்றி நோன்பை விடுதல் போன்ற அல்லாஹ் தடுத்தவற்றை செய்யும் ஆசை மனதில் தோன்றுவதும் இதில் அடங்குகின்றது. இதிலிருந்து தப்புவதற்கான வழி தனது ஆன்மா மற்றும் ஷைத்தானின் தீங்குகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுதல், தான் விரும்பக் கூடிய உணவு அல்லது பானத்தை சாப்பிட்டால் அல்லது குடித்தால் அது அவருக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது எனும் போது அவற்றிலிருந்து தன்னை பொறுமையாக வைத்திருப்பது போன்று தடுக்கப் பட்டவற்றைத் தவிர்ந்து கொள்வதில் பொறுமை காத்தல், அல்லாஹ்வின் திருப்தியை நாடி அவற்றை விட்டு விடல், தடுக்கப்பட்ட இந்த ஆசைகளெல்லாம் வேகமாகச் சென்றுவிடும், அதனையடுத்து கைசேதமும், நீண்ட கவலையும் ஏற்படக் கூடியது என்பதை நினைவுகூர்தல் போன்றனவாகும்.

**4.** மனித ஷைத்தான்கள் : இவர்கள்தான் ஷைத்தானின் வலையில் சிக்கிய பாவிகளாகும். அவர்களும் பாவங்களை செய்வதுடன் தோழர்களுக்கும் அதனை அழகுபடுத்திக் காட்டுகின்றனர். இந்த எதிரிகளிடமிருந்து தப்பிக்கும் முறை அவர்களை விட்டும் எச்சரிக்கையாக இருந்து, தூரமாகி, அவர்களுடன் பழகாமலிருக்க வேண்டும்.

பதின்மூன்றாவது : உயர் குறிக்கோள் மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கை. அல்லாஹ் தனது முஸ்லிமான அடியார்களுக்கு வழி காட்டிய உயரிய குறிக்கோள் இவ்வுலகிலோ, அதிலுள்ள கவர்ச்சிகளிலோ அல்ல, மாறாக உண்மையான, நிரந்தரமான எதிர் காலத்திற்காகத் தயாராகுதலாகும். அதுதான் மரணத்திற்குப் பின்னரான மறுமை நிகழ்வாகும். நேர்மையான முஸ்லிம் இவ்வுலகை மறுமைக்கான பாதையாகவும், விளைநிலமாகவும்

*கருதி, அதுதான் முடிவல்ல என்பதையும் உணர்ந்து செயல்படுவான்.*

*அவன் என்றும் பின்வரும் வசனத்தையே நினைவுகூர்வான் :* **"ஜின்களையும், மனிதர்களையும் [அவர்கள் என்னை அறிந்து] என்னை வணங்குவதற்கே தவிர [வேறெதற்காகவும்] நான் படைக்கவில்லை".** *(அத்ஸாரியாத் : 56). மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :* **"நம்பிக்கையாளர்களே! நீங்கள் [மெய்யாகவே] அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு மனிதனும் [மறுமை என்னும்] நாளைய தினத்திற்காக, தான் எதைத் தயார்படுத்தி வைக்கிறான் என்பதைக் கவனித்து கொள்ளட்டும், நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவன் ஆவான்.**

**[நம்பிக்கையாளர்களே!] அல்லாஹ்வை [நிராகரித்து அவனை முற்றிலும்] மறந்து விட்டவர்களைப் போல் நீங்களும் ஆகிவிட வேண்டாம். ஏனென்றால், [அதன் காரணமாக] அவர்கள் தம்மையே மறக்கும்படி [அல்லாஹ்] செய்துவிட்டான். இவர்கள்தான் பெரும்பாவிகள் ஆவார். நரகவாசிகளும் சொர்க்கவாசிகளும் சமமாக மாட்டார்கள். [ஏனென்றால்] சொர்க்கவாசிகள் தான் பெரும் பாக்கியமுடையவர்கள். [நரகவாசிகள் துர்ப்பாக்கியமுடையவர்கள்.]"** *(அல்ஹஷ்ர் : 18- 20).*

*மேலும் அல்லாஹ் கூறுகின்றான் :* **"ஆகவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாரோ அவர், [அங்கு] அதையும் கண்டு கொள்வார். [அவ்வாறே] எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தானோ, அதையும் அவன் [அங்கு] கண்டு கொள்வான்".**

*(அஸ்ஸல்ஸலாஹ் : 7,8).*

*நேர்மையான முஸ்லிம் மகத்தான இவ்வசனங்களையும், அடியார்கள் படைக்கப்பட்ட நோக்கத்தின்பால் வழிகாட்டும் இது போன்ற இறைவசனங்களையும் நினைவுகூர்வான், அவர்களுக்காகக் காத்திருக்கும் எதிர்காலம் நிச்சயமானது, அல்லாஹ்வுக்கு மாத்திரம் உளத்தூய்மையுடன் வணக்கம் புரிந்து, அவனுடைய*

திருப்தியை எதிர்பார்த்து நற்செயல் புரிந்து, அவனுக்கு வழிப் படுவதன் மூலம் இவ்வுலகில் அவனது கௌரவத்தையும், மறு மையில் சுவனத்தையும் எதிர்பார்ப்பதன் மூலம் உண்மையான, முடிவற்ற அந்த எதிர்காலத்திற்காகத் தயாராக வேண்டும்.

அப்போது அல்லாஹ் இவ்வுலகில் அவனை நல்ல வாழ்க்கை வாழ வைப்பதன் மூலம் கௌரவப் படுத்துவான், அவனுடைய உதவி, பாதுகாப்பில் அவனுடைய ஜோதியின் மூலம் பார்த்துக் கொண்டு வாழ்வான், அல்லாஹ் தனக்கு ஏவிய வணக்கங்களை நிறைவேற்றி, அதில் அவனுடன் உரையாடி இன்புறுவான், உள் ளத்தாலும், நாவாலும் அவனை நினைவுகூர்வான், அதன் முலம் அவனது உள்ளம் அமைதி பெறுகின்றது.

தனது சொல், செயல் மூலம் மக்களுக்கு நலவு செய்வான், அப் போது நல்லவர்கள் அவனது இச்செயலை மதித்து, அவனை மகிழ்வித்து, உள்ளம் குளிரும் விதத்தில் அவர்களிடமிருந்து பிரார்த்தனையை செவியேற்பான். இழிவான பொறாமைக் காரர்களிடமிருந்து நன்றி மறுப்பதையே காண்பான், எனினும் அது அவர்களுக்கு உபகாரம் செய்யத் தடையாகாது, ஏனெனில் இதன் மூலம் அல்லாஹ்வின் திருமுகத்தையும், கூலியையுமே இவன் எதிர்பார்க்கின்றான். இம்மார்க்கத்தையும், அதைச் சார்ந் தோரையும் பகைக்கக் கூடிய தீயவர்களிடமிருந்து இறைத்தூதர் களை நினைவுபடுத்தும் விதத்தில் கேலி, கிண்டல், நோவினை களையே செவியேற்பான்.

இது அல்லாஹ்வின் பாதையில்தான் ஏற்படுகின்றது என்பதை அறிந்து இஸ்லாத்தின் பால் உள்ள நேசம் மென்மேலும் அதி கரித்து, உறுதியாக இருப்பான். தனது உற்பத்தியின் மூலம் இஸ் லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் பயனளிக்கவும் மேலும், அல் லாஹ்வைச் சந்திக்கும் நாளில் தனது உளத் தூய்மை, நல்ல நோக் கத்துக்காக அவனிடமிருந்து வெகுமதியைப் பெறவும், தனக்கும் குடும்பத்தினருக்கும் செலவழிக்க போதியளவு நல்ல வருமானத் தைப் பெறவும் அவன் தனது கைகளால் அலுவலகத்தில், பண்

ணையில், கடையில், அல்லது தொழிற்சாலையில் வேலை செய் கிறான்.

அதிலிருந்து அவன் தர்மம் செய்து தன்னிறைவுடன், கௌரவ மாக, போதுமென்ற மனப்பாங்குடன் அதற்கான கூலியை அல் லாஹ்விடம் எதிர்பார்த்தவனாக வாழ்கின்றான். ஏனெனில் அல் லாஹ் தொழில் புரியும் பலசாலியான விசுவாசியை நேசிக்கின் றான். அவன் அல்லாஹ்வை வணங்க உடல் வலிமை பெறும் நோக்கில் வீண்விரயமின்றி உண்ணுகின்றான், பருகுகின்றான், உறங்குகின்றான். அல்லாஹ் தடுத்தவற்றிலிருந்து தன்னையும் மனைவியையும் பாதுகாத்துக் கொள்ளவும், அல்லாஹ்வை வணங்கி, தனக்காக வாழும்போதும், மரணித்த பின்பும் பிரார்த் திக்கும் பிள்ளைகளைப் பெற்றெடுக்கவும் அவளுடன் கூடி வாழ் கின்றான்.

எனவே அவனுடைய நற்செயல் தொடர்கின்றது, அப்பிள்ளை கள் மூலம் முஸ்லிம் சனத்தொகையும் அதிகரிக்கின்றது, அல் லாஹ்விடம் அதற்கான கூலியையும் பெறுகின்றான். அல்லாஹ் வுக்குக் கீழ்ப்படிவதற்காக அதைப் பயன்படுத்துவதன் மூலமும், அது அல்லாஹ்விடமிருந்து மட்டுமே என்பதை ஒப்புக்கொள் வதன் மூலமும் அவன் பெறும் ஒவ்வொரு அருட்கொடைக்கும் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறான், அவன் அல்லாஹ்விடமி ருந்து தனது வெகுமதியையும் பெறுகிறான். சில சமயங்களில் தனக்கு ஏற்படும் பசி, பயம், நோய், துன்பங்கள் போன்றன அல்லாஹ் தனது பொறுமை, விதியைப் பொருந்திக் கொள்ளல் என்பவற்றைக் காண்பதற்காக- அவன் அனைத்தையும் அறிந்தவ னாகவே இருக்கின்றான் [(77)] - அவனிடமிருந்து வரும் சோதனை

(77) ஏற்கனவே யார் தனக்கு வழிப்படுவார், யார் மாறு செய்வார் என்பதை அறிந்து கொண்டே அல்லாஹ் தனது அடியார்களுக்கு ஏவல், விலக்கல்களை பிறப்பிக்கின் றான். இதனால் அடியான் அவன் செய்த செயல்களுக்கு வெகுமதி அளிக்கப்படுவ தற்காகவும், அடுத்து குற்றவாளி : "நான் செய்யாத பாவத்திற்காக என்னை தண்டிப் பதன் மூலம் என் இரட்சகன் எனக்கு அநீதி இழைத்து விட்டான்" எனக் கூறாமலி ருக்கவுமே இந்த அறிவு வெளிப்படுத்தப்படுகிறது. அல்லாஹ் கூறுகின்றான் : "அன் றியும் உம்முடைய இறைவன் (தன்) அடியார்களுக்குச் சிறிதும் அநியாயம் செய் பவன் அல்லன்". (புஸ்ஸிலத் : 46).

*என்பதை அறிந்து கொள்கின்றான். எனவே அவன் பொறுமையாக இருந்து, திருப்திப்பட்டு, பொறுமையாளர்களுக்காக அல்லாஹ் தயார் செய்துள்ள கூலியை எதிர்பார்த்து அனைத்து நிலைகளிலும் அவனைப் புகழ்கின்றான், அப்போது நோயாளி குணமடைவான் என்ற நம்பிக்கையில் மருந்தின் கசப்பை ஏற்றுக் கொள்வது போல, அத்துன்பம் அவனுக்கு எளிதாகி, அதை அவன் ஏற்றுக் கொள்கிறான்.*

*இந்த வாழ்க்கையின் தொல்லைகளால் தொந்தரவு செய்யப் படாத, மரணத்தால் குறுக்கிடப்படாத, முடிவற்ற மகிழ்ச்சியை அடைவதற்காக, உண்மையான மற்றும் அழியாத எதிர்காலத் திற்காக செயல்பட்டு, இந்த உயர்ந்த ஆன்மாவுடன் அல்லாஹ் கட்டளையிட்டபடி ஒரு முஸ்லிம் இந்த வாழ்க்கையில் வாழ்ந் தால் அவர்தான் எவ்வித ஐயமுமின்றி இவ்வுலகிலும் பாக்கிய சாலி, மரணத்திற்குப் பின் மறுமையிலும் பாக்கியசாலியாவார்.*

*அல்லாஹ் கூறுகின்றான் :* **“[மிக்க பாக்கியம் பெற்ற] மறுமையின் வீட்டையோ, பூமியில் பெருமையையும் விஷமத்தையும் விரும்பாத வர்களுக்கே நாம் சொந்தமாக்கி விடுவோம். முடிவான நற்பாக்கி யம் இறையச்சம் உடையவர்களுக்குத்தான் உண்டு”.** *(அல்கஸஸ் : 83).*

*மகத்தான அந்த அல்லாஹ் பின்வருமாறு உண்மையே உரைக் கின்றான் :* **“ஆணாயினும், பெண்ணாயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல்களை எவர் செய்தாலும் நிச்சயமாக நாம் அவர்களை [இம்மையில்] நல்ல வாழ்க்கையாக வாழச் செய்வோம். மேலும், [மறுமையிலோ] அவர்கள் செய்து கொண்டிருந்ததைவிட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப் போம்”.** *(அந்நஹ்லு : 97).*

*அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி, அவனுக்குக் கட்டுப்பட்டு இவ்வுலகில் நற்செயல்கள் புரியக்கூடிய ஆண், பெண் இருபாலா ரிலுமுள்ள நல்லடியார்களுக்கு ஏற்கனவே நாம் கூறியது போன்று இவ்வுலகிலும் நல்ல மகிழ்ச்சியான வாழ்க்கை மூலம்*

கூலி வழங்குவதாகவும், மறுமையில் நிரந்தரமான சுவனம் மூலம் தாமதமான கூலி வழங்குவதாகவும் மேற்கண்ட வசனங்கள் போன்றவற்றில் அல்லாஹ் கூறுகின்றான்.

இவ்விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார் கள் : "ஒரு விசுவாசியின் விடயத்தைப் பார்க்கும் போது ஆச்சரி யமாக உள்ளது, அவனது அனைத்து விடயங்களும் அவனுக்கு நலவாகவே அமைகின்றது, அது விசுவாசியைத் தவிர வேறு யாருக்குமில்லை, அவனுக்கு நல்ல இன்பம் கிடைக்கப் பெற்றால் நன்றி செலுத்துகின்றான், அது அவனுக்கு நலவாக அமைகின் றது, அவனுக்கு துன்பம் ஏற்பட்டால் பொறுமை கொள்கிறான் அதுவும் அவனுக்கு நலவாகவே அமைகின்றது".[78]

ஆகவே, இஸ்லாத்தில் மட்டுமே சரியான சிந்தனை, நல்லது கெட்டதுக்கான சரியான அளவீடு, முழுமையான மற்றும் நியா யமான வழிமுறை உள்ளன. உளவியல், சமூகம், கல்வி, அரசியல், பொருளாதாரம் மற்றும் அனைத்து மனித அமைப்புகள் மற்றும் முறைகள் ஆகியவற்றில் உள்ள அனைத்து கருத்துகளும் கோட் பாடுகளும் இஸ்லாத்தின் வெளிச்சத்திலேயே சரி செய்யப்பட வேண்டும், மேலும் அதில் இருந்துதான் பெறப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. இல்லையெனில் அதற்கு முரணானவை கள் வெற்றி பெறுவது சாத்தியமில்லை, மாறாக அவற்றை எடுப் பவர்களின் ஈருலக துர்ப்பாக்கியத்தின் தோற்றுவாயாக அந்த முரணானவைகள்தான் உள்ளன.

(78) ஆதாரம் : முஸ்லிம் (2999), அஹ்மத் (4/ 332), தாரிமீ (2777).

ஐந்தாவது
பாடம்

# சில சந்தேகங்களைத் தெளிவுபடுத்தல்

## முதலாவது : இஸ்லாத்திற்கு இடையூறு விளைவிப்போர்

மக்களில் அதிகமாக இஸ்லாத்திற்கு இடையூறு விளைவிப் போர் இரு பிரிவினராகும் :

முதல் பிரிவினர் : முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்ளும் பெயர் தாங்கிகள், ஆனால் அவர்கள் தங்கள் சொற்களாலும் செயல்களா லும் இஸ்லாத்திற்கு முரண்படுகிறார்கள், இஸ்லாத்துடன் தொடர்பற்ற சில செயல்களைச் செய்கிறார்கள். எனவே அவர் கள் இஸ்லாத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை, அவர்க ளின் செயல்களை இஸ்லாத்தின்பால் சேர்த்துவது சரியான தல்ல. இவர்கள் :

**1.** அடிப்படைக் கொள்கையில் வழிதவறியவர்கள் : அவர்கள் சமாதிகளை வலம் வந்து, அவர்களிடம் தமது தேவைகளை வேண்டி, நலவு, கெடுதி அவர்களிடம் இருப்பதாக நம்பக்கூடிய வர்களைப் போன்றோர்.[79]

**2.** மார்க்கத்திலும், பண்பாடுகளிலும் நலிந்தவர்கள் :

எனவே அவர்கள் அல்லாஹ்வின் கடமைகளை விட்டு விடுகின் றனர், விபச்சாரம், மது போன்ற தடுக்கப்பட்டவற்றை செய்கின் றனர், அல்லாஹ்வின் எதிரிகளை நேசித்து, அவர்களுக்கு ஒப் பாகின்றனர்.

---

**(79)** மேலும் இவர்கள் இஸ்லாத்தின் பெயரால் நிரபராதிகளைக் கொன்று திரியும் கவாரிஜ் பிரிவினரைப் போன்றவர்கள். பெரும்பாலும் இவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளுடைய சூழ்ச்சியில் சிக்கியே அவ்வாறு செயல்படுகின்றனர்.

*3.* இஸ்லாத்திற்கு இடையூறு ஏற்படுத்தியவர்களில் சில முஸ்லீம் மக்களும் உளர், ஆனால் அல்லாஹ் மீதான அவர்களின் நம்பிக்கை பலவீனமானது, இஸ்லாத்தின் போதனைகளை அவர்கள் அமுல்படுத்துவது முழுமையற்றது. சில கடமைகளில் அலட்சியமாக இருப்பார்கள், எனினும் அதனை முழுமையாக விடமாட்டார்கள். பெரிய இணைவைப்பு, பெரிய இறைநிராகரிப்பு அளவிற்குச் செல்லாத விதத்தில் தடுக்கப்பட்ட சிலதைச் செய்வார்கள்.

இஸ்லாத்துடன் தொடர்பற்ற, அதே நேரம் பெரும்பாவங்களாகப் பார்க்கப் படக்கூடிய சில தடுக்கப்பட்ட மோசமான பழக்கங்களை வழமையாக்கிக் கொண்டிருப்பார்கள். உதாரணமாக : பொய், மோசடி, வாக்குமாறுதல், பொறாமை. இவர்கள் அனைவருமே இஸ்லாத்திற்கு இடையூறு ஏற்படுத்துவோரே. ஏனெனில் இஸ்லாத்தை அறியாத முஸ்லிமல்லாதவர்கள் இவர்களது இத்தீய செயல்களைப் பார்த்து இஸ்லாம் அவ்வாறு செய்ய அனுமதிக்கிறது என்று நினைக்கிறார்கள்.

இரண்டாவது பிரிவினர் : இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்டுள்ள அதன் எதிரிகள். இவர்கள் : கீழத்தேயர்கள், யூதர்கள், கிறிஸ்தவ மிஷனரிகள் மற்றும் இஸ்லாத்தின் முழுமை, பரிவு, பரவலின் வேகம் ஆகியன சினம்கொள்ள வைத்த, அவர்கள் வழி நடக்கும் இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்டவர்கள் அனைவருமாவர். ஏனெனில் இதுதான் முன்வைத்த உடன் ஏற்கும் இயல்புள்ள இயற்கை மார்க்கமாகும்.[80] முஸ்லி

(80) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "பிறக்கும் எந்தப் பிள்ளையும் இஸ்லாத்தை ஏற்கும் இயல்பிலேயே பிறக்கின்றது, அதன் பெற்றோர்களே யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ, நெருப்பு வணங்கியாகவோ அவனை மாற்றி விடுகின்றனர்". (புஹாரி (1292), முஸ்லிம் (2658) இந்த வார்த்தை முஸ்லிமில் இருந்து பெறப்பட்டது). இந் நபிமொழியில் நபியவர்கள் மனிதன் இஸ்லாத்தை ஏற்கும் இயல்பிலேயே பிறக்கின்றான், இயல்பிலேயே அதனை நம்புகின்றான், அவனுக்கு ஒரு மதத்தைத் தெரிவு செய்ய விட்டால் தடுமாற்றமின்றி இஸ்லாத்தைத் தான் ஏற்பான், யூதம், கிறிஸ்தவம், நெருப்பு வணக்கம் போன்ற அசத்திய மார்க்கத்தை ஏற்கும் நிலை அவற்றின் அடிப்படையிலான மோசமான வளர்ப்பின் விளைவினாலேயே உருவாகின்றது.

மல்லாத அனைத்து மனிதர்களும் ஒருவித கலக்கம், தமது மதம், அல்லது சார்ந்திருக்கும் கருத்தில் திருப்தியற்ற உணர்விலேயே வாழ்கின்றனர்.

ஏனெனில் இவன் அல்லாஹ் வைத்துள்ள இயல்பு நிலைக்கு முரண்படுகின்றான், நேர்மையான முஸ்லிமைத் தவிர. அவன் மாத்திரம்தான் மகிழ்ச்சியாகவும், தனது மதத்தில் திருப்தியுடனும் வாழ்கின்றான். ஏனெனில் அம்மதம் மாத்திரம்தான் அல்லாஹ் விதியாக்கியுள்ள சத்திய மார்க்கமாகும். அல்லாஹ்வின் ஷரீஅத் சட்டம் அவன் மனிதர்களைப் படைத்துள்ள இயல்பு நிலையுடன் உடன்படுகின்றது. இதனால்தான் யூத, கிறிஸ்தவர்கள், மற்றும் இஸ்லாத்துக்கு வெளியேயுள்ள அனைவருக்கும் நாம் கூறிக் கொள்கின்றோம் : உமது பிள்ளைகள் இஸ்லாத்தின் இயல்பிலேயே பிறந்துள்ளனர், தந்தையாகிய நீரும், பிள்ளைகளின் தாயும் தான் அவர்களை நிராகரிப்பின் அடிப்படையிலான மோசமான வளர்ப்பின் மூலம் அவர்களை இஸ்லாத்தை விட்டும் அதற்கு முரணான மதம், கருத்தின்பால் வெளியேற்றிச் செல்கின்றீர்.

அந்தக் கீழத்தேயர்கள், மிஷனரிகளில் காழ்ப்புணர்வு கொண்டவர்கள் இஸ்லாத்தின் மீதும், இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் வேண்டுமென்றே அவதூறுகளை உருவாக்கி விட்டனர் :

**1.** சில வேளை அன்னாரது தூதுத்துவத்தை மறுப்பதன் மூலம்.

**2.** இன்னும் சில வேளை அன்னார் மீது குறை கூறுவதன் மூலம், ஆனால் அவர்கள் விரும்பியோ, வெறுத்தோ அல்லாஹ்வால் அனைத்து வித குறைகளை விட்டும் தூய்மைப்படுத்தப்பட்ட மனிதப் புனிதரே இறுதித் தூதர் (ஸல்) அவர்கள்.

**3.** வேறு சில வேளை இஸ்லாத்தை விட்டும் மக்களை அந்நியப்படுத்துவதற்காக அனைத்தும் அறிந்த, ஞானமுள்ள அல்லாஹ் இயற்றிய இஸ்லாமிய சட்டத்தை சிதைப்பதன் மூலம்.

*என்றாலும் அல்லாஹ் அவர்களது சூழ்ச்சிகளை முறியடித்து விடுகின்றான், ஏனெனில் அவர்கள் எதிர்ப்பது சத்தியத்தை. சத்தியம் எப்போதும் மிகைக்குமே தவிர அதனை எதுவும் மிகைக்க முடியாது. அல்லாஹ் கூறுகின்றான் :* **“அல்லாஹ்வுடைய பிரகாசத்தைத் தன் வாயினால் ஊதி அணைத்து விடலாமென்று இவர்கள் கருதுகின்றனர். இந்நிராகரிப்பவர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தன் பிரகாசத்தை (உலகமெங்கும் ஜொலிக்கும்படி) முழுமையாகவே ஆக்கிவைப்பான். அவன்தான் தன் தூதரை நேரான வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பிவைத்தான். இணைவைத்து வணங்குபவர்கள் (அதை) வெறுத்தபோதிலும் (உலகிலுள்ள) எல்லா மார்க்கங்களையும் அந்த சத்திய மார்க்க(மான இஸ்லா)ம் வென்றுவிடும்படி அவன் செய்வான்”.** *(அஸ்ஸப் : 8, 9).*

## இரண்டாவது : இஸ்லாத்தின் மூலாதாரங்கள்

*இஸ்லாத்தை அதன் உண்மை வடிவில் நீர் அறிய விரும்பினால் புனித அல்குர்ஆனை வாசிப்பீராக. மேலும் ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம், முவத்தா மாலிக், முஸ்னத் அஹ்மத், ஸுனன் அபூதாவூத், ஸுனன் நஸாஈ, ஸுனன் திர்மிதீ, ஸுனன் இப்னு மாஜா, ஸுனன் தாரிமீ போன்ற நபிமொழித் தொகுப்புகளில் உள்ள ஆதாரபூர்வமான நபிமொழிகளையும் வாசிப்பீராக. அத்துடன் இமாம் இப்னு ஹிஷாமின் “ஸீரா நபவிய்யா”, இமாம் இப்னு கஸீரின் தப்ஸீர், இமாம் இப்னுல் கய்யிமின் “ஸாதுல் மஆத் பீ ஹத்யி கைரில் இபாத்” போன்ற நூல்களையும், ஓரிறைக் கொள்கையின் பால் தெளிவுடன் அழைப்பு விடுத்த இமாம் இப்னு தைமியா, இமாம் முஹம்மத் பின் அப்தில் வஹ்ஹாப் போன்ற இஸ்லாமிய அறிஞர்களின் நூல்களையும் வாசிப்பீராக.*

*அரேபியத் தீபகற்பத்தில் ஹிஜ்ரி 12ம் நூற்றாண்டில் இணைவைப்பு மலிந்திருந்த வேளையில் இஸ்லாமிய மார்க்கத்தையும், ஓரிறைக் கொள்கையையும் இந்த இமாம் முஹம்மத் பின் அப்*

தில் வஹ்ஹாப் மற்றும் மன்னர் முஹம்மத் பின் ஸுஊத் ஆகி யோரின் கூட்டுமுயற்சியின் மூலமே அல்லாஹ் பலப்படுத்தி னான்.

கீழத்தேயர்கள், இஸ்லாம் மற்றும் அதன் அழைப்புக்கு முரண் பட்டுக் கொண்டே முஸ்லிமாகக் கூறிக்கொள்ளும் இஸ்லாமி யப் பிரிவுகள்- இவற்றில் அதிகமானவை ஏற்கனவே கூறப்பட்டு விட்டது-, நபித்தோழர்களை அல்லது அவர்களுள் சிலரை ஏசித் தூற்றக்கூடிய பிரிவுகள், ஓரிறைக் கொள்கையின்பால் அழைப்பு விடுத்த இமாம்களான இப்னு தைமியா, இப்னுல் கய்யிம், முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் போன்றோரைக் குறை கண்டு, அவர்கள் மீது அவதூறு பரப்பும் பிரிவினர் போன்றோ ரின் நூல்கள் வழிகெடுக்கும் நூல்களாகும். அவற்றை வாசிப் பதை, பார்த்து ஏமாறுவதை விட்டும் எச்சரிக்கையாக இருக்க வும்.

## மூன்றாவது : இஸ்லாமிய மத்ஹப்கள்

அனைத்து முஸ்லிம்களும் இஸ்லாம் எனும் ஒரே மத்ஹபில் தான் உள்ளனர், அவர்களது மூலாதாரம் அல்குர்ஆனும், ஸுன் னாவுமாகும். ஹனபீ, மாலிக், ஷாபிஈ, ஹன்பலி எனும் பெயர்க ளில் தற்காலத்தில் அழைக்கப்படும் மத்ஹப்கள் என்பது இந்த அறிஞர்கள் இஸ்லாத்தின் அடிப்படைகளைப் போதித்த இஸ்லா மிய சட்டத்துறைப் பள்ளிகளாகும், அவற்றின் மூலாதாரமும் அல்குர்ஆன், ஸுன்னாதான். அவற்றிக்கிடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் குறைவான சில துணைச் சட்டங்களில் தான். ஒவ் வொரு அறிஞரும் தமது கருத்தில் அல்குர்ஆன், ஸுன்னாவுக்கு உடன்படுபவற்றை மாத்திரமே எடுக்கும்படி கூறியுள்ளனர். சரி யான கருத்து பிறருடையதாக இருந்தாலும் சரியே.

இவற்றில் ஒன்றைத் தான் பின்பற்ற வேண்டுமென எந்தவொரு முஸ்லிமும் கட்டாயப்படுத்தப்படவில்லை. மாறாக அல்குர் ஆன், ஸுன்னாவைப் பின்பற்றவே ஏவப்பட்டுள்ளனர். தாம் அந்த மத்ஹப்கள் எனக் கூறிக் கொண்டே சமாதிகளை வலம்

வருதல், அவர்களிடம் உதவி தேடுதல், அல்லாஹ்வின் பண்பு களுக்கு மாற்றுக் கருத்து வழங்குதல், அதன் வெளிப்படை அர்த் தத்தை திரிபுபடுத்தல் போன்ற அடிப்படைக் கொள்கைக்கு முர ணான செயல்களில் ஈடுபடுவோர் இப்பகுதியில் தமது மத்ஹப் அறிஞர்களுக்கு முரணாகவே உள்ளனர். ஏனெனில் அவ்அறி ஞர்களின் கொள்கை ஏற்கனவே வெற்றிபெற்ற கூட்டம் எனும் தலைப்பில் கூறப்பட்ட ஸலபுஸ் ஸாலிஹீன்களான முன்னோர் களின் கொள்கையே.

## நான்காவது : இஸ்லாத்திலிருந்து வெளியேறிய பிரிவுகள்

இஸ்லாத்திலிருந்து வெளியேறிய பிரிவுகள் இஸ்லாமிய உலகில் உள்ளன. தாம் முஸ்லிமென வாதாடிக் கொண்டிருந்தாலும் உண் மையில் அவர்கள் முஸ்லிம்களல்லர். ஏனெனில் அவர்களுடைய கொள்கை அல்லாஹ்வையும், அவனது ஏகத்துவம், வசனங் களை நிராகரிக்கும் கொள்கையாகும். அவ்வாறான பிரிவுகள் சில:

1. பாதினிய்யாக்கள் :

இவர்கள் மறுபிறவிக் கொள்கை, இறைவன் படைப்பினுள் சங்கமம் ஆகும் (அத்வைத) கொள்கை போன்றவற்றைக் கொண் டுள்ளதுடன், வஹீயிற்கு நபி (ஸல்) அவர்கள் வழங்கிய, முஸ்லிம் கள் ஒருமித்துக் கூறும் வெளிப்புற கருத்துக்கு மாற்றமான உள் ரங்க கருத்தும் உள்ளதாக வாதிடுகின்றனர். இந்த உள்ரங்க கருத்தை அவர்கள் தமக்கு இசைவாக உருவாக்கிக் கொள்வார் கள்.[81]

---

(81) பாதினிய்யாக்கள் பல நாமங்களில் இயங்குகின்றனர். இந்தியா, ஸிரியா, ஈரான், இராக் போன்ற பல நாடுகளில் இவர்கள் பல உட்பிரிவுகளுடன் இயங்குகின்றனர். முன்சென்ற அறிஞர்களில் பலர் இவர்களைப் பற்றி விரிவாகத் தெளிவுபடுத்தியுள் ளனர். அதில் "அல்மிலல் வந்நிஹல்" (இயக்கங்கள், பிரிவுகள் பற்றிய நூல்) எனும் நூலின் ஆசிரியர் அறிஞர் ஷிஹ்ரிஸ்தானீ குறிப்பிடத்தக்கவர். பிற்கால அறிஞர்களி லும் பலர் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர். காதியானிகள், பஹாஇய்யாக்கள் போன்ற அவர்களிலிருந்து தோன்றிய பிரிவுகளையும் விளக்கியுள்ளனர். அவர்க ளில் "ஸைலுல் மிலலி வந்நிஹல்" (மேற்கண்ட பிரிவுகள் பற்றிய நூலின் பிற்

இக்கொள்கை உருவாக்கத்தின் பின்னனி என்னவெனில் : பாரசீகப் பகுதியில் இருந்த யூதர்கள், நெருப்பு வணங்கிகள், நாத்திகத் தர்க்கவியலாளர்கள் தம்மை இஸ்லாத்தின் பரவல் அடக்க முற்பட்ட போது அவர்கள் கூடி ஒரு கோட்பாட்டை உருவாக்க ஆலோசனை நடத்தினர், இதன் நோக்கம் முஸ்லிம்களை சிதைத்து, அவர்களுக்கு மத்தியில் பிரிவினையைத் தோற்றுவிக்க புனித குர்ஆனின் அர்த்தங்களைப் பற்றிய கருத்துக்களைக் குழப்புவதாகும். எனவே அவர்கள் இந்த அழிவுகரமான கோட்பாட்டை நிறுவி அதற்கு அழைப்பு விடுத்தனர். பொதுமக்களைக் கவர்ந்திழுக்க ஏதுவாகத் தம்மை அஹ்லுல் பைத்களாக (நபியவர்களின் குடும்பம்) சித்தரித்துக் காட்டினார்கள். அறிவீனர்கள் பலரை கவர்ந்திழுத்து சத்தியத்தை விட்டும் அவர்களை வழிகெடுத்தார்கள்.

**2.** காதியானிகள் : காதியான் எனும் ஊரிலே பிறந்து, தான் நபி என்று பிதற்றி, இந்தியா மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாழும் அறிவீனர்களைத் தன்னை நபியென விசுவாசிக்குமாறு அழைத்த குலாம் அஹ்மது என்பவனைப் பின்பற்றுபவர்களே காதியானிகள்.

இந்தியாவில் காலணித்துவத்தைப் பதித்திருந்த அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் இவனையும், இவனைப் பின்பற்றுவோரையும் இஸ்லாத்தை அழிக்கும் தமது திட்டத்திற்குப் பயன்படுத்தினார்கள். முஸ்லிம்களாக நடிக்கும் காதியானிஸம் தோற்றம் பெற்று, இஸ்லாத்தை அழிக்கவும், அதிலுள்ளவர்களை இயன்றளவு வெளியேற்றவுமே முழுமுயற்சி செய்து கொண்டிருந்தது. “அஹ்மதிய்யா அத்தாட்சிகளை உண்மைப்படுத்தல்” எனும் பெயரில் நூலொன்றை உருவாக்கி, அதிலேயே தனது நபித்து

சேர்க்கை) எனும் நூலின் ஆசிரியர் முஹம்மத் ஸஈத் கைலானீ, “அல்அத்யானி வல்பிரகி வல்மதாஹிபில் முஆஸிரா” (மதங்கள், பிரிவுகள், நவீன சிந்தனைகள் பற்றிய நூல்) எனும் நூலின் ஆசிரியர் மதீனாப் பல்கலைக்கழகத்தின் முன்னால் பேராசிரியர் அப்துல் காதிர் ஷைபதுல் ஹமத் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

வத்தை வாதாடி, இஸ்லாமிய இறைவசனங்களைத் திரிபுபடுத்தி னான் என்பது பிரபலமான விடயமாகும்.

ஜிஹாத் எனும் அறப்போர் இஸ்லாமிய சட்டத்திலிருந்து எடுக் கப்பட்டு விட்டது, ஒவ்வொரு முஸ்லிமும் ஆங்கிலேயர்களுடன் சமாதானமாகவே நடக்க வேண்டும் என்பன அவன் மேற்கண்ட நூலில் செய்த சில திரிபுகளாகும். “இதயங்களுக்கு மாற்று மருந்து” எனும் பெயரிலும் அப்போது ஒரு நூல் இயற்றியுள் ளான். பலரை வழிகெடுத்த பின் கி. பி. 1908ம் ஆண்டு இந்த மிர்ஸா குலாம் அழிந்து விட்டான். அவனது அழைப்பிலும், அவனது வழிகெட்ட பிரிவின் தலைமையிலும் அவனுக்குப் பின்னால் ஹகீம் நூருத்தீன் என்று அழைக்கப்பட்ட ஒரு வழி கேடன் இருந்தான்.

**3.** பஹாஇய்யாக்கள் : இஸ்லாத்தை விட்டும் வெளியேறிய பாதி னிய்யாக்களின் உட்பிரிவுகளில் பஹாஇய்யாக்களும் ஒன்றா கும். அலீ முஹம்மத் அல்லது முஹம்மத் அலீ ஷீராஸீ என்பவன் கி. பி. 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஈரான் நாட்டில் இதனை ஆரம்பித்தான். இவன் ஷீஆக்களின் உட்பிரிவுகளில் ஒன்றான இஸ்னா அஷரிய்யாக்களைச் சார்ந்தவனாக இருந்து, பின் தனியான ஒரு பிரிவை ஆரம்பித்து மறுமை நெருங்கும் போது எதிர்பார்க்கப்படும் மஹ்தீ என்பவர் தான் என வாதாடி யது பிரபலமான ஒரு செய்தியாகும். பின் அல்லாஹ் தனக்குள் இறங்கிவிட்டதாகவும, எனவே மக்களின் இறைவன் நான் தான் எனவும் வாதிட ஆரம்பித்தான். -நாத்திக நிராகரிப்பாளர்கள் கூறும் கூற்றுக்களை விட்டு அப்பாற்பட்டவனாக அல்லாஹ் இருக்கின்றான்.-.

மறுமையில் மீளெழுப்பப்படல், விசாரணை, சுவனம், நரகம் ஆகியவற்றை மறுத்து, நிராகரிப்பாளர்களான இந்துக்கள், பௌத்தர்களின் வழியில் செல்ல ஆரம்பித்தான். யூதம், கிறிஸ்த வம், இஸ்லாம் அனைத்தையும் ஒன்று சேர்த்து அவற்றுக்கி டையே வேறுபாடேதுமில்லை எனக் கூறினான். இறுதியாக

முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவத்தையும், அனேகமான இஸ்லாமிய சட்டங்களையும் மறுத்தான். அவனது அழிவுக்குப் பின் அவனது உதவியாளராக இருந்த பஹாஃ என்பவன் இக் கருத்துக்களை மக்கள் மயப்படுத்த, கூட்டமும் அதிகரித்தது. அவனது பெயருக்கே இப்பிரிவு சேர்த்தப்பட்டு பஹாஇய்யா எனப் பெயரிடப்பட்டது.

4. இஸ்லாத்தை விட்டும் வெளியேறிய கூட்டத்தில், தாம் முஸ் லிம்கள் என வாதாடி, தொழுது, நோன்பு நோற்று, ஹஜ்ஜும் செய்வதோடு, பெருந்தொகை மக்களைக் கொண்ட, அதிக பிரி வுகளைக் கொண்ட (ஷீஆக்களில்) சிலரும் உள்ளனர். இவர்கள் அலீ (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நபித்துவத்தை முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கியதன் மூலம் ஜிப்ரீல் (அலை) துரோகம் செய்து விட்டதாக வாதாடுகின்றனர். மற் றும் சிலர் அலீ தான் அல்லாஹ் என்று கூறி, அவரையும், அவரு டைய பிள்ளைகள், சந்ததிகளையும், மனைவி பாதிமா (ரலி), அவர்களின் தாயார் கதீஜா (ரலி) அவர்களையும் அளவுக்கு மீறி தரமுயர்த்துகின்றனர்.

அதையும் தாண்டி அல்லாஹ்வுக்கு இணையான கடவுள்களாக ஆக்கி, பிரார்த்திக்கவும் செய்கின்றனர். அவர்கள் தவறுகளில் இருந்து பாதுகாக்கப் பட்டதாகவும், அல்லாஹ்விடத்தில் இவர் களது அந்தஸ்து இறைத்தூதர்களுடைய அந்தஸ்தை விட மகத் தானதெனவும் நம்பிக்கை கொள்கின்றனர்.

மேலும் இவர்கள் கூறுகின்றனர் : தற்போது முஸ்லிம்களின் கைகளில் இருக்கும் குர்ஆனில் கூடுதல், குறைத்தல் உள்ளது. அவர்களுக்கெனப் பிரத்தியேகமான குர்ஆன் பிரதிகள் எடுத்து, மேலும் சில அத்தியாயங்கள், வசனங்களைத் தாமாகவே அதில் இணைத்துள்ளனர். நபியவர்களுக்குப் பின்னர் இச்சமூகத்தில் மிகச் சிறந்தவர்களான அபூ பக்ர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரை யும், விசுவாசிகளின் அன்னையர் ஆஇஷா (ரலி) அவர்களையும் தூற்றுகின்றனர்.

சிரமத்தின் போதும், செழிப்பின் போதும் அலீ (ரலி) மற்றும் அவர்களது சந்ததியினர் மூலம் பாதுகாப்புத் தேடுவதுடன், அல்லாஹ்வன்றி அவர்களையே அழைத்துப் பிரார்த்திக்கின்ற னர். ஆனால் அவர்களோ இவர்களின் இச்செயல்களிலிருந்து விலகியவர்கள். ஏனெனில் இவர்கள் அலீ (ரலி) மற்றும் அவரது சந்ததியினரை அல்லாஹ்வுக்கு இணையான கடவுள்களாக ஆக்கி விட்டனர். அல்லாஹ்வின் மீது பொய்யுரைத்து, அவனது வேதத்தைத் திரிபுபடுத்தி விட்டனர். அல்லாஹ் அவர்கள் கூறும் கூற்றுக்களை விட்டு அப்பாற்பட்டவனாக இருக்கின்றான்.(82)

இது நாம் கூறிய இஸ்லாத்தை வாதாடிக் கொண்டே அதனை அழிக்கும் நிராகரிப்பிலுள்ள சில பிரிவுகளே. முஸ்லிமே! நீ எங்கிருந்தாலும் இஸ்லாம் என்பது வெறும் கோசமல்ல, மாறாக அல்குர்ஆனையும், ஆதாரபூர்வமான நபிமொழிகளையும் அறிந்து, அதன்படி செயல்படுவதாகும் என்பதை நினைவில் கொள். எனவே அல்குர்ஆனையும், ஆதாரபூர்வமான நபி மொழிகளையும் நீ ஆராய்ந்து பார், நேர்வழி, ஒளி மற்றும் அல்லாஹ்விடத்தில் சுவனத்தில் வெற்றிக்கு வழிவகுக்கும் நேரான பாதையை அடைந்து கொள்வாய்.

(82) தமது கன்னங்கள், மார்புகளுக்கு அரைந்து கொள்வதும், சங்கிலிகள், கத்திக ளால் தமது உடல்களைக் காயப்படுத்திக் கொள்வதும் இஸ்லாத்தின் சரியான பிம் பத்தை சிதைக்கும் இவர்களுடைய சில செயல்பாடுகளாகும்.

# வெற்றிக்கான அழைப்பு

இதுவரை இஸ்லாத்தில் இணையாத ஆண்களே! பெண்களே! வெற்றி மற்றும் மகிழ்ச்சிக்கான இந்த அழைப்பை உமக்கு விடுக் கின்றேன் :

மரணத்திற்குப் பின் மண்ணறையிலும், பின் நரகிலும் அல்லாஹ் வின் தண்டனையிலிருந்து உம்மைப் பாதுகாத்துக் கொள்ளும்.

அல்லாஹ்வை இரட்சகனாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களைத் தூதராகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும் நம்பிக்கை கொண்டு, ஏற்று உம்மைப் பாதுகாத்துக் கொள்ளும். உண்மை யுடன் "லாஇலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" எனக் கூறும், ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றி, உமது சொத்திற்கான ஸகாதையும் வழங்கி, ரமழானில் நோன்பு நோற்று, வசதியிருந்தால் அல்லாஹ்வின் மாளிகையைத் தரி சித்து ஹஜ்ஜும் செய்து கொள்ளவும்.

அல்லாஹ்வுக்காக உமது இஸ்லாத்தை அறிவிப்பீராக. ஏனெ னில் அதுவன்றி வெற்றியோ மகிழ்ச்சியோ இல்லை.(83)

இந்த இஸ்லாம்தான் சத்திய மார்க்கம், இதுவல்லாமல் அல் லாஹ் வேறெதனையும் மார்க்கமாக ஏற்கமாட்டான் என்பதை உண்மையாக வணங்கப்படத் தகுதியான ஒரே இறைவன் அந்த கண்ணியமான அல்லாஹ்வின் மீது நான் சத்தியமிட்டுக் கூறு கின்றேன். மேலும் உண்மையாக வணங்கப்படத் தகுதியான ஒரே இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதராவார், இஸ்லாம் தான் சத்திய மார்க்கம், நானும் ஒரு முஸ்லிம் என்பதற்கு அல்லாஹ்வையும், அவனது வானவர்கள், அனைத்து படைப்பினங்களையும் நான் சாட்சியாக வைக்கின்றேன்.

---

(83) இவ்வுலகில் வெற்றி, மகிழ்ச்சி மற்றும் நல்ல வாழ்வு என்பனவும் , மறுமையில் சுவனமும் கிடைக்கும்.

என்னையும், எனது சந்ததி, அனைத்து முஸ்லிம் சகோதரர்களை யும் உண்மையான முஸ்லிம்களாக மரணிக்கச் செய்து, உண் மையான, நம்பிக்கையான எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள், மற்றும் அனைத்து நபிமார்கள், எமது நபியின் குடும்பத்தார்கள், தோழர்கள் அனைவருடனும் எம்மையும் ஒன்று சேர்த்துமாறும் அல்லாஹ்விடம் அவனது கண்ணியம், தயாளகுணத்தை வைத் துக் கேட்கின்றேன். இந்நூலின் மூலம் அதனை வாசிப்போர், செவிமடுப்போர் அனைவருக்கும் பயனளிக்குமாறு அல்லாஹ் விடம் வேண்டுகின்றேன். நான் எத்தி வைத்து விட்டேனா? இறைவா! நீயே சாட்சியாக இருந்து கொள்!

அல்லாஹ்வே மிக அறிந்தவன், ஸலாதும் ஸலாமும் எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார், தோழர்களுக்கும் உண்டாவதாக. அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

சத்திய மார்க்கம்

موسوعة القرآن الكريم
QuranEnc.com
موسوعة تضم تفاسير وتراجم موثوقة لمعاني القرآن الكريم

موسوعة الأحاديث النبوية
HadeethEnc.com
موسوعة تضم ترجمات للأحاديث النبويـــة وشروحها بعدة لغــات

موسوعة المصطلحات الإسلامية
TerminologyEnc.com
موسوعة تضم ترجمات المصطلحات الإسلاميــة وشروحها بعدة لغــات

منتقى
المحتوى الإسلامي
موسوعة تضم المنتقى من المحتوى الإسلامي باللغات

IslamHouse.com
مرجعيــة مجانيــة إلكترونية موثوقة للتعريف بالإســلام

# ننشر الإسلام بأكثر من 100 لغة

جـمـعـيـة الـدعــوة
وتوعية الجاليات بالربوة

جمعية خدمة المحتوى
الإســلامــي باللغــات

دين الحق